குறுந்தொகைச் செல்வம்

T 14845

வரதராசன்

குறுந்தொகைச் செல்வம்

டாக்டர் - மு. வரதராசன்
தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை - 1

ரூ. 2—4—0

முதல் பதிப்பு : மார்ச்சு 1955

உரிமை ஆசிரியர்க்கு

ஆசிரியரின்

மற்ற நூல்கள் :

கள்ளோ? காவியமோ?
பெற்ற மனம்
விடுதலையா?
செந்தாமரை
பாவை
மனச்சான்று
காதல் எங்கே?
மலர்விழி
அந்த நாள்
கரித்துண்டு
அல்லி
கி. பி. 2000
கவிஞர் தாகூர்
அறிஞர் பெர்னாட் ஷா
காந்தி அண்ணல்
பச்சையப்பர்
இளங்கோ
கண்ணகி
மாதவி
அன்னைக்கு
தங்கைக்கு
தம்பிக்கு
நண்பர்க்கு
குழந்தை
எழுத்தின் கதை
சொல்லின் கதை
மொழியின் கதை
மொழி நூல
மொழி வரலாறு
மொழியியற் கட்டுரைகள்
அரசியல் அலைகள்
மணல் வீடு
முல்லைத்திணை
ஓவச் செய்தி
கொங்குதேர் வாழ்க்கை
குறுந்தொகை விருந்து
நற்றிணை விருந்து
நெடுந்தொகை விருந்து
நெடுந்தொகைச் செல்வம்
தமிழ நெஞ்சம்
இலககிய ஆராய்ச்சி
அறமும் அரசியலும் [விளக்கம்
திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை சென்னை - 14

முன்னுரை

குறுந்தொகை ஓர் ஓவியக்கூடம் எனலாம். இதில் நானூறு ஓவியங்கள் உள்ளன. இவற்றுள் பல ஓவியங்கள் நங்கை ஒருத்தியும் நம்பி ஒருவனும் கொள்ளும் காதல் முதிர்ந்து திருமணம் நடைபெறும் வரையில் வளரும் வளர்ச்சியைக் குறிப்பன. சில ஓவியங்கள், திருமணமான பிறகு நம்பி பிரிந்தபின், நங்கை நம்பிக்கையோடு எதிர்பார்த்திருக்கும் வாழ்வைப் பற்றியவை; சிலஓவியங்கள் அவர்களின் இல்லற வாழ்வின் இடையில் நேரும் ஊடல் பற்றியவை; ஒரு சில ஓவியங்கள் காதலனைப் பிரிந்த காதலி நம்பிக்கை இழந்து பெருந் துயருற்றுக் கலங்குதல் பற்றியவை. ஏறக்குறைய ஒரு பாதி ஓவியங்கள், காதலியை விட்டுக் காதலன் பிரிதல், பிரிவால் அவள் வருந்துதல் முதலிய பிரிவுத் துன்பம் பற்றியவை. ஆக, எல்லாம் காதலரின் வாழ்வு பற்றிய ஓவியங்கள்; அவர்களின் மன நிலையைப் புலப்படுத்தும் நுண்ணிய ஓவியங்கள். ஆயினும், இவற்றுள், ஒரே தன்மையாக ஒத்து அமைந்துள்ள ஓவியங்கள் இரண்டு இல்லை; ஒத்தவை போல் சில தோன்றக் கூடும். நுணுகிக் கண்டு ஆராய்ந்தால், அவற்றுள் நுட்பமான வேறு பாடுகள் இருத்தல் புலப்படும்.

இந்த ஓவியங்கள் காதலரின் மன நிலையை விளக்குவன என்பது சிறப்பாகக் கருதத்தக்கதாகும். இவற்றைத் தீட்டிய கலைஞர்கள், காதலரின் உடல் வனப்பை எடுத்துக்காட்டுவதற்காகத் தம் வண்ணத் தைப் பெரிதும் செலவிடவில்லை; முயற்சியையும் செலவிடவில்லை. ஓவிய அமைப்பிற்கு எந்த அளவிற்கு

அவர்களின் தோற்றம் இன்றியமையாததோ, அந்த அளவிற்கே உடலைக் குறித்துள்ளனர். ஓவியத்தைக் காண்பவரின் உள்ளம், காதலர்களின் உடல் வனப்பால் கவரப்படாதவாறு அவர்களின் கலைமுயற்சி அமைந்துள்ளது.

இவைகளைக் காண்பவர்களுக்குக் காதலரின் முகம் விளங்கித் தோன்றுவதைவிட, முகக்குறிப்பு மிகத் தெளிவாகத் தோன்றுகிறது எனலாம். முகத்தை நன்றாகப் பார்க்க முடிவதில்லை ; முகத்தின்மேல் ஒளி நன்கு வீசுவதில்லை. ஆயின், முகக்குறிப்பு, பளிச்சென்று தெரிகிறது ; அவர்களின் உள்ளத்தின் உணர்ச்சி காண்பவரின் உள்ளத்திற்கு எட்டுகிறது. கீற்றோவியக் கலைஞர்க்கும் வண்ண ஓவியக் கலைஞர்க்கும் கிட்டாத இந்தப் பெருவாய்ப்பு - அவர்களுக்கு அமையாத இந்த அருந்திறன் - இத்தகைய சொல்லோவியக் கலைஞர்க்கு அமைந்துள்ளது.

பாட்டுக்கு உயிர் உணர்ச்சி ; உடல் கற்பனை ; உடை ஒலிநயம். குறுந்தொகைப் பாட்டுக்களின் உடை எளியதாக உள்ளது ; உடல் அழகுற அமைந்துள்ளது; உயிர் போற்றத்தக்கதாக உள்ளது. உயிரின் வாழ்வுக்காக உடலும், உடலின் காப்புக்காக உடையும் அமைந்த அமைப்பை இவற்றில் காணலாம். நுணுகியுணரும் செவிப்புலன் வாய்ந்தவர்க்கே, இப்பாட்டுக்களில் உள்ள ஒலிநயம் (rhythm) புலனாகும். பிற்காலத்துப் பாட்டுப் போலவோ, கலித்தொகைப் பாட்டுப்போலவோ எளிதில் விருந்தாகும் இசைக் கவர்ச்சி இவற்றில் இல்லை. நுட்பமான செவி உடையவராய், எளிமையான நயமே போதுமென அமைபவர்க்கே இங்கே விருந்து உண்டு. உடலாகிய கற்பனையும் அளவுபட்டு அமைந்துள்ளது. தசைநார்த் திரட்சியும்

பெருக்கமும் அமைந்து காண்போரை மருட்டும் உடல் வளர்ச்சி போன்ற கற்பனைகள் சில நூல்களில் உள்ளன. ஆயின், இவற்றில் உள்ள கற்பனை, காந்தியடிகளின் தூய உடல் போன்றது; வலிமை மிக்க உடல் அன்று; நலம் நிறைந்த உடல் ஆகும்; இடர்ப்பாடின்றி உணர்ச்சி விளங்குதற்கு ஏற்ற நோயற்ற உடல் ஆகும். எளிய உடை சூழ்ந்து நோயற்று விளங்கும் இந்த அழகிய உடலில் அமைந்துள்ள உணர்ச்சி மாசற்றது; நெறியானது; போற்றத் தக்கது.

உணர்ச்சியைப் புலப்படுத்த இருவேறு வழிகள் உண்டு. ஒன்று, நாடக நெறி. மற்றொன்று ஓவிய நெறி. முன்னும் பின்னும் உள்ள நிகழ்ச்சிகளை விடாமல் கூறி, இடையே உணர்ச்சி மிக்க பகுதியையும் அமைத்துக் கதைப் போக்கில் காட்டுவது நாடக நெறி. இவ்வாறு காட்டுவதால், தோற்றமும் படிப்படியே வளர்ந்த வளர்ச்சியும் விளங்க, மனம் ஒவ்வொரு நிலையிலும் தொடர்ந்து பற்றிச் செல்கிறது. காவியங்களிலும் கதைகளிலும் உள்ள அமைப்பு இதுவே. மனம் படிப்படியே தொடர்ந்து செல்வதற்கு இயலும் வகையில் அமைவதால், காவியங்களும் கதைகளும் கற்பதற்கு எளியவையாக உள்ளன; கற்றவர்களின் நெஞ்சத்தை எளிதில் பிணிக்கவல்லனவாகவும் உள்ளன.

ஓவிய நெறி வேறு வகையானது. முன்னும் பின்னும் உள்ள நிகழ்ச்சிகளை ஓவியம் காட்டுவதில்லை. குறிப்பிட்ட நேரத்தில் ஒரு நொடிப்பொழுது நிகழ்ந்த ஒன்றை மட்டுமே ஓவியம் காட்டும். காண்பவரே முன்னும் பின்னும் நிகழ்ந்தவற்றை உய்த்துணர்ந்து தொடர்புபடுத்திக்கொள்ள வேண்டும். தலைவி தலைவனை நினைந்து கண்ணீர் விட்டாள் என்பதை நாடக

நெறியில் புலப்படுத்த வேண்டுமானுல், அவன் அவளை விட்டுப் பிரிவதற்குமுன் செலுத்திய அன்பு, பிரிவதற்காகச் செய்த முயற்சி, பிரிந்த அன்று செய்த செயல்கள், பிரிந்து சென்ற செலவு, பிரிந்தபின் தலைவி உற்ற துயர், பிறகு மறுநாள் அவனை நினைந்த நினைப்பு முதலிய பலவற்றையும் காட்டி, அவளுடைய கண்கள் கலங்குவதையும் காட்டி, கலங்கிய கண்களிலிருந்து நீர்த்துளிகள் திரண்டு வருதலையும் காட்டி, அவைகள் கீழேவிழுதலையும் காட்டலாம். நிகழ்ச்சிகள் இவ்வாறு தொடர்ந்து அமைவதால், காண்பவர்க்கு எளிதில் புலனுக வாய்ப்பு உள்ளது. ஆயின், ஓவிய நெறியில் இதனைப் புலப்படுத்துவதானுல், தலைவியின் கண்களின் கலக்கத்தையும் முகத்தின் துயரக் குறிப்பையும் உடல் சோர்ந்துள்ள நிலையையும் ஒருங்கே புலப்படுத்த முடியும். அல்லது, கண்ணீர் கண்களை விட்டுக் கீழே விழும் நிலையானுல், ஒருதுளி ஆடையிலோ தரையிலோ விழுந்துள்ள காட்சியையும் மற்ருெரு துளி கண்ணிலிருந்து கீழே விழும் காட்சியையும் காட்டலாம். எல்லாம் காட்டிய பிறகும், அந்த ஓவியம் தலைவி ஒரு நொடிப்பொழுது இருந்த நிலையைக் காட்ட முடியுமே தவிர, முன்னும் பின்னும் இருந்த நிலைகளைக் காட்ட முடியாது. 11-30 மணிக்கு எடுக்கப்பட்ட நிழற்படம், அப்போது ஒருத்தி இருந்த முகத்தோற்றம் உடல்நிலை முதலியவற்றைக் காட்டுமே தவிர, 11-25 மணியின்போது இருந்த தோற்றத்தையும் நிலையையும் காட்டாது. 11-35 மணியின்போது இருந்த தோற்றம் நிலை ஆகியவற்றையும் காட்டாது. ஓவிய நெறி இத்தகையதே ஆகும்.

குறுந்தொகைப் பாட்டுக்கள் நாடகநெறி பற்றி முன்னும் பின்னும் உள்ள நிகழ்ச்சிகளைத் தொடர்

புறக் கூறும் போக்கில் அமையவில்லை. ஓவிய நெறி பற்றிக் குறிப்பிட்ட ஒரு நேரத்து நிகழ்ச்சியை, அல்லது மனநிலையை மட்டும் விளக்கும் போக்கில் அமைந்த பாடல்கள் இவை.

நாடகம் என்றாலும் பின்னணிக் காட்சிகள் (background scenes) வேண்டும்; ஓவியம் என்றாலும் வேண்டும். கதையாக இருந்தாலும், ஓர் ஊரில் ஒரு மரத்தில் என்று சுற்றுப்புறத்தைக் கற்பனையாக்கிக் காட்டியே தொடங்கவேண்டியுள்ளது. ஆனால் கதையில் வரும் மாந்தர் அல்லது விலங்குகள் அல்லது பறவைகள் வாழும் வாழ்வு தொடர்ந்து வருவதால், சுற்றுப்புறத்தை மறந்தும் கதையைக் கற்பிக்க முடியும்; கற்கவும் முடியும். நாடகத்திலும் அவ்வாறே, நிகழ்ச்சிகள் கோவையாகத் தொடர்ந்திருப்பதால், பின்னணிக்காட்சிகள் இல்லாமலும் கலையாக அமைய முடியும். ஆயின், ஓவியம், பின்னணியைத் துறந்து வாழ வழி இல்லை. குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சி அல்லது ஒரு மனநிலையை மட்டும் விளக்கும் ஓர் ஓவியம், அந்த நிகழ்ச்சியோ மனநிலையோ மனத்தில் பதியுமாறு அதற்கு ஏற்ற சூழ்நிலை உடையதாக அமைதல் இன்றியமையாதது.

ஊரையும் வீட்டையும் விளக்கி வருணனை செய்யாமலே கதை கூறிக் கற்பனையுலகத்திற்கு அழைத்துச் செல்லமுடியும். பின்னணிக் காட்சிகள் இல்லாமலே மேடையில் இருவர் அல்லது மூவர் தோன்றி நடித்துக் கலைவிருந்து நல்க முடியும். ஆயின் ஒரு சோலையோ மரக்கிளையோ கூரையோ இல்லாமல் இரண்டு பறவைகளை ஓவியமாகத் தீட்டிக் காட்டல் இயலாது. காடோ பசும்புல்வெளியோ கட்டுத் தறியோ இல்லாமல் பசு ஒன்றை ஓவியத்தில் காட்டல்

இயலாது. வானம் தொடும் கடலையோ, அல்லது விண்மீன் நிறைந்த வானத்தையோ, அல்லது முகில் கூட்டங்களையோ காட்டாமல், வட்டமான வெண்ணிலவை மட்டும் தீட்டி அதை ஓவியம் என்று காட்டல் இயலாது. அவ்வாறே, காடோ மலையோ வயலோ கடற்கரையோ அவற்றின் பகுதிகளோ காட்டாமல் காதலர் இருவரை மட்டும் ஓவியத்தில் அமைத்துக் காட்டல் இயலாது. மற்றக் கலைகளைவிட ஓவியக் கலைக்குப் பின்னணி மிக மிகத் தேவையாக உள்ளது.

வெள்ளைத் தாளில் ஒரு காக்கையின் வடிவத்தை மட்டும் எழுதி ஓவியம் எனப் பள்ளி மாணவர் காட்டலாம். காக்கையின் அலகு, கண், சிறகு, கால் முதலிய எல்லாம் இருக்கலாம். இருந்தும் அது ஓவியம் ஆகாது. உலகத்தில் ஒரு காக்கை அப்படி எங்கும் காணப்படுவதில்லை. உலகில் வாழும் காக்கையாயின், அதன் கால்கள் கூரையின்மேல் அமர்ந்தவாறு இருக்கும்; அல்லது, ஒரு மரக்கிளையின்மேல் படிந்தவாறு இருக்கும்; அல்லது நிலத்தில் உலர்த்தப்பட்டுள்ள நெல் முதலியவற்றை அடுத்தவாறு இருக்கும். அந்தக் கூரையின் முகடு, அல்லது, அந்த மரக்கிளையின் பகுதி, அல்லது, அதன் காலருகே உள்ள நெல் முதலியவை அந்த ஓவியத்தில் தீட்டப்பட்டிருக்க வேண்டும். பறக்கும் காக்கையாக இருப்பினும், அதன் சிறகுகள் வான வெளியில் விரிந்து அசையும் தோற்றமேனும் தீட்டப்பட்டிருக்க வேண்டும். வானத்தில் உலவும் மேகங்கள் அந்த ஓவியத்தில் காணப்படல் வேண்டும். அல்லது, தொலைவே உயர்ந்து தோன்றும் பனைமரமேனும் காட்சிதருதல் வேண்டும். இவற்றில் ஒன்றும் இன்றிக் காக்கையை மட்டும் ஓவியமாகத் தீட்டுதலைப் பள்ளி

மாணவரிடம் காணல் கூடுமே தவிர, தேர்ந்த கலைஞரிடம் காணல் இயலாது.

இவ்வாறு பின்னணியாக அமைக்கப்படும் மலை காடு வயல் கடல் ஆகியவற்றின் பகுதிகள் இயற்கையில் உள்ளவாறே எடுத்துக்காட்டப்படுகின்றன. இயற்கையமைப்பில், இவை என்றும் எந்த வேளையும் ஓரே வகையாக இருப்பதில்லை. மலை ஒரு காலத்தில் ஒரு வேளையில் தரும் காட்சியை மற்றொரு காலத்தில் மற்றொரு வேளையில் தருவதில்லை. காடு ஒரு பருவத்தில் வளமான பசுமைக் காட்சி நல்கிக் கண்ணுக்கும் கருத்துக்கும் தண்மைவிருந்து அளிக்கின்றது. மற்றொரு பருவத்தில் அதற்கு அந்தத் தண்மை இல்லை. அந்தப் பருவத்திலும் மாலைப்பொழுதில் அதற்கு உள்ள கவர்ச்சியும் உணர்ச்சியைத் தூண்டும் ஆற்றலும் மற்றப் பொழுதுகளில் இல்லை. வயலுக்கும் கடலுக்கும் இவ்வாறே பொழுது நல்கும் சிறப்பியல்புகள் உள்ளன. காதலோவியம் தீட்ட முன்வந்த புலவர் இவ்வாறு இயற்கையைப் பருவந்தோறும் பொழுதுதோறும் ஆராய்ந்து, அந்தந்தப் பருவத்திலும் பொழுதிலும் அந்தந்த நிலப்பகுதிகள் பெறும் மாறுதல்களையும் கண்டறிந்து, இன்ன இன்ன காதலுணர்ச்சிக்கு இன்ன இன்ன நிலத்தில் இன்ன இன்ன பருவமும் பொழுதும் இயைந்துவருகின்றன என்று தெளிந்து அவற்றை ஏற்றவாறு பின்னணியாக்கிப் பாடியுள்ளனர். சான்றோர் சிலர் சென்று கண்ட இந்த நெறியையே 'பாடல் சான்ற புலனெறி வழக்கம்' எனத் தொல்காப்பியனர் போற்றினர்.

இவற்றில் உயர்வுநவிற்சியும் உண்டு; ஆயினும் வெறுக்கத்தக்க அளவில் இல்லை. இங்கு, பிரிவாற்றக் காதலர்க்குச் சந்தனம் நெருப்பாகக் கொதிப்

பதும் இல்லை ; முத்துக்கள் வெந்து கருகுவதும் இல்லை. பாலைவழியில் கதிரவனின் வெப்பத்தால் காய்ந்து கொதிப்புற்ற பாறைகள் உண்டு ; இலை தீய்ந்த மரங்கள் உண்டு. ஆனால் வானத்தில் திங்கள் பொழியும் நிலவு சுட்டெரிப்பதும் இல்லை ; தலைவியின் உடம்பில் பட்ட மலர் தீய்ந்து கருகுவதும் இல்லை.

சுருங்கக்கூறின், இவற்றில் உள்ள கற்பனைகள் உள்ளது புனைதலே அன்றி, இல்லது புனைதலாகக் கூறப்பட்டவை அல்ல. இவற்றின் உயர்வுநவிற்சிகள் மருட்டி வியப்பூட்டுவன அல்ல ; மெல்லக் கற்பனையுலகத்திற்கு ஈர்த்துச் செல்வன ஆகும். தலைவனைப் பிரிந்த தலைவி மெலிய, அவளுடைய கைவளைகள் உடனே கழலும் ; தலைவன் நீங்கியதும் பசலை வந்து பரவும் ; அவன் வந்ததும் பசலை விலகும். இவை போன்ற உயர்வுநவிற்சிகள் அறிவை மருட்டும் தகையன அல்ல ; தாலாட்டித் தூங்கவைப்பன எனலாம். நனவுலகத்திலிருந்து கற்பனையுலகத்திற்குச் செல்வதற்கு ஒருவாறு உதவுவன இவை.

கனவு காணும்போது நனவுலகத்து நினைவே தோன்றாமல், காண்பது கனவு என்ற எண்ணமும் தோன்றாமலிருக்கவேண்டும். காண்பது கனவு என்ற எண்ணம் எழுந்தவுடன் கனவு கலைந்து போகும்.

அதுபோலவே, கற்பனையில் திளைக்க விரும்பும் மனம், இது கற்பனை என்று உணராமல் அதில் ஈடுபட வேண்டும். இல்லையேல், இது கற்பனையான பொய் என்ற எண்ணம் எழுந்தவுடன் கற்பனை கலைந்து போகும்.

நனவுலகத்திலிருந்து கனவைப் பற்றி எண்ணிப் பார்க்கலாம். அது ஆராய்ச்சியே தவிர, அனுபவம் அன்று. அதுபோலவே, அறிவுலகத்திலிருந்து கற்பனை

யைப் பற்றி எண்ணிப்பார்க்கலாம் ; அது ஆராய்ச்சி ; கற்பனையை நுகர்ந்து மகிழும் அனுபவம் அன்று.

இது பொய், பயனற்ற பொய், நடக்கக்கூடாத பொய், உயர்வுநவிற்சியான கற்பனை என்ற எண்ணங்கள் அறிவுலகத்து எண்ணங்கள். கற்பனையில் ஓரளவு அறியாமை வேண்டும். குழந்தைகளுடன் விளையாட விரும்புவோர் தம் அறிவை ஒதுக்கிவைத்து விட்டு விளையாடச் செல்வது போல், கற்பனையில் திளைக்க விரும்புவோரும் ஓரளவு அறிவின் ஆராய்ச்சித் திறனை ஒதுக்கிவைத்தால்தான் கற்பனையின்பத்தை நுகரமுடியும்.

ஆனால் அவ்வாறு அறிவை ஒதுக்கிவைக்க முடியுமா ? அதற்கு வழி என்ன ?

ஒன்று ; பாட்டில் கலந்துள்ள இசை நம் அறிவை மெல்லத் தூங்கவைக்கும் ஆற்றல் உள்ளது. அந்த இசையை உணரும் செவி பெற வேண்டும்.

இரண்டாவது ; பாட்டை ஒருமுறை இருமுறை அல்ல, பலமுறை படித்துப் படித்துப் பழகவேண்டும். அப்போது அது பொய்யான கற்பனை என்ற எண்ணம் நீங்கும். அதில் கலந்து மகிழும் மனம் வரும்.

இந்த இருநிலையும் பெற்ற பிறகும் ஒரு பெரிய தடை உள்ளது. இக் காலத்தினரின் மனம் நெடுங் காலம் அறிவியல் உண்மைகளில் பழகிய மனம் ஆகி விட்டது. உலக இயக்கத்தின் உண்மைகளைப் பற்றிய தெளிவு பிறந்துவிட்டது. ஆகையால் இந்தக் காலத்தில் அறிவுக்கு முரணான கற்பனைகள் இருந்தால், மனம் அவற்றில் ஈடுபடுவது அரிது. எவ்வளவு முயன்றாலும் அறிவு தூங்குதல் இயலாதபடி, உண்மைகளை மனம் நினைத்துக்கொள்ளும்.

எடுத்துக்காட்டாக, மேகம் கடலில் நீரை முகந்துகொண்டு மேலே எழுந்து மழை பெய்ய வருகிறது என்றே, திங்களைப் பாம்புவிழுங்குகின்றது என்றே எத்தனை முறை பாடினாலும் அறிவு தூங்காது ; மனம் ஈடுபடாது. ஆகையால் இந்தக் காலத்தில் முழுப்பூசணிக் காயைச் சோற்றில் மறைக்கும் முயற்சியுள்ள கற்பனைகள் கூடா. ஓரளவு இந்த அறிவுலகத்தை விட்டு, சிறுபிள்ளைகள் விளையாட்டுப் போன்ற வேறு உலகத்திற்குப் போகும் அளவான கற்பனைகள் வேண்டும். அந்தக் கற்பனைகள் இந்த நனவுலகத்து நிகழ்ச்சிகளுக்கு நேர்மாறாக அமையாமல், ஒட்டி அமைவதும், சிறிது ஏறக்குறைய அமைவதும் நலம்.

இதன்பயனாக, அரிய பல கற்பனைச் செல்வங்களை இழக்க நேருமே என்று கவலைப்படுவதில் பயனில்லை. ஒன்றை ஓரளவு இழந்தால்தான், மற்றொன்றை ஓரளவு பெற முடியும். இது ஊழ் ; வாழ்க்கையின் அடிப்படையான உண்மை. அறிவியல் துறையில் பலவற்றைப் பெற்றுள்ள நாம், கற்பனைத் துறையில் பலவற்றை இழந்துதான் பெற்றோம். இழந்தவை போக இருப்பவற்றைத் துய்ப்போம் அவற்றையே பல வகையாகப் பெருக்குவோம் ; விரிவு படுத்துவோம்.

புலவர் கபிலரின் கற்பனையில், பிரிவாற்றாமல் வருந்தும் தலைவியின் நெற்றியில் பசலை படர்கிறது. தோழி அவளுடைய துயரம் அறிந்து நோகிறாள். தலைவியோ, தன்னால் ஆற்றியிருக்க முடியும் என்ற நம்பிக்கையோடு, தலைவனைக் காண முடியாவிட்டாலும் அவனுடைய மலையைக் காண முடியும் என்று எண்ணுகிறாள். வெளியே எட்டிப் பார்க்கிறாள் ;

அந்த மலையைப் பார்த்ததும் நெற்றியின் பசலை போய் விட்டிருக்கும் என்று நம்புகிருள். போய்விட்டதா என்று தோழியைப் பார்த்துக் கேட்கிருள்.

அவர் நாட்டுக், குன்றம் நோக்கினென் தோழி
*பண்டை யற்ருே கண்டிசின் நுதலே.**

இத்தகைய கற்பனையுலகில் திளைத்து இன்புற வேண்டுமாயின், ஆராய்ச்சி அறிவை ஓரளவு விட்டு, விளையாடும் மனப்பான்மை பெற்ருல்தான் முடியும்; அஃறிணை உயர்திணை இயங்குவன இயங்காதன முதலான வேறுபாடுகளையும் ஓரளவு மறந்தால்தான் முடியும்.

தலைவியின் காதல் கற்பனை செய்யப்படுகிறது. அவள் பிரிவின் துயரத்தைப் பொறுத்து ஆற்றியிருக்க முடிகிறதாம். ஆனல் அவளுடைய கண்களால் துயரத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லையாம். காரணம், அந்தக் கண்களுக்குக் காதலனோடு நட்புரிமை மிகுதியாம். முதல்முதலில் காதலனைக் கண்டவை கண்களே; பிறகே நெஞ்சம் காதல் கொண்டது. ஆதலின் கண்களுக்கு நட்பு மிகுதி என்றும், அதனுலேயே துயர் தாங்காமல் அழுகின்றன என்றும் தோழிக்குக் கூறுகிருள்.

யாம்எம் காமம் தாங்கவும் தாம்தம்
கெழுதகை மையின் அழுதன தோழி
குன்ற நாடற் கண்டஎன் கண்ணே.†

---

*குறு. 249. கபிலர்.

பண்டையற்ருே - பழந்தன்மை உடையதோ? கண்டிசின் - காண்.

†குறுந். 241 கபிலர்.

கெழுதகைமை - மிக்க உரிமை.

இத்தகைய கற்பனைச் செல்வத்தை முயற்சி யுடையார் அனைவரும் நுகரலாம். 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ ?' என்ற முதுமொழி பொருட் செல்வத்தின் அளவில் உண்மையாதல் அரிது. ஆனால் தாய்மொழியில் முன்னோர் தேடிவைத்துள்ள காவியச் செல்வத்தைப் பொறுத்த வரையில் அம் முதுமொழி உண்மையே ஆகும்.

இவற்றைக் கற்றுப் பயன்பெற முயல்வதாயின், இவற்றின் சொல் நடையில் பயிலுதல் வேண்டும். இவற்றைப் பாடிய புலவர்பெருமக்கள் மலையிலும் காட்டிலும் வயலிலும் கடற்கரையிலும் கண்ட காட்சிகளை நாமும் கண்டு பழகுதல் வேண்டும். அவற்றின் அனுபவம் கொண்டு, காண முடியாத பல காட்சிகளையும் கற்பனை செய்து உணர்தல் வேண்டும். அவர்கள் பாராட்டிப் போற்றிய அழகுகளை நாமும் போற்றிப் பயிலுதல் வேண்டும். அவர்கள் ஆய்ந்து உணர்ந்த உள்ளத்து உணர்வுகளை நாமும் உணர்ந்து மகிழ்தல் வேண்டும். இவ்வளவும் கலைச் செல்வமாகக் கொண்டு போற்றிய பின்னரே, இப்பாட்டுக்கள் விருந்தாக விளங்கி இன்பம் பயப்பனவாகும். இவ் வகையில் இந் நூல் துணை செய்யும் என நம்புகிறேன்.

மு. வரதராசன்

		பக்கம்
புதுமை யுணர்வு	...	17
பிறருள்ளம் உணர்தல்	...	27
சொல்லும் திறன்	...	34
காதல் தந்த ஆற்றல்	...	51
ஏமாற்றம்	...	58
பாலையிலும் அன்பு	...	62
துன்பத்திற்குத் துணை	...	68
குடும்பப் பண்பாடு	...	76
உணர்வோவியம்	...	81
பழக்க வழக்கங்கள்	...	102
குறிக்கோள்	...	120
கேளாத பேச்சு	...	124
பறவைவிலங்குகளின் வாழ்க்கை	...	127
கற்பனைக் குறிப்பு	...	138
உவமைத் திறன்	...	146

புதுமை யுணர்வு

பழகிய பொருளில் புதுமையின் கவர்ச்சி இல்லாமற் போகின்றது. ஓடையில் கூழாங்கற்கள் பல சிதறிக்கிடக்கின்றன. வருவார் போவார் அவ்வழியே அவற்றைப் பலமுறை கண்டு பழகிய காரணத்தால் புறக்கணித்துச் செல்கின்றனர். ஆயின் நிலவியல் ஆராய்ச்சியாளர் ஒருவர் கண்ணிற்கு ஒவ்வொரு கூழாங்கல்லும் எவ்வளவோ உண்மைகளை உணர்த்தத் தொடங்குகின்றது. மழை பெய்தவுடன் தலைகாட்டும் பசும்புல் நம் காலில் மிதிபடுகின்றது; கருத்தைக் கவரவில்லை. மரவியல் ஆராய்ச்சியாளர் ஒருவர் தரையில் அமர்ந்து ஒரு புல்லை உற்று நோக்குவாரானால் வியக்கத்தக்க உண்மைகளை எல்லாம் அது அவருக்கு உணர்த்தத் தொடங்குகின்றது. செடிகொடிகளின் அருகே மண்ணுக்குள் மறைந்து வாழும் நாங்கூழ்ப்புழு நம் உள்ளத்தைக் கவரவில்லை. உயிரியல் ஆராய்ச்சியாளருக்கோ அதன் செயல் வியக்கத்தக்கதாக விளங்குகின்றது. இளங்குழந்தையின் சிரிப்பு, அதன் கைத்தட்டு, சிறிது வளர்ந்த பிறகு பொருள்களை விரல்களால் பற்ற முயலும் முயற்சி ஆகிய இவைகள் எல்லாம் இயற்கையாக, பழக்கப்பட்டவைகளாகத் தோன்றுகின்றன. எண்ணிப்பார்க்க வல்லவர்களுக்கோ எண்ண முடியாத அருமைப்பாடுடைய வளர்ச்சிப் படிகளாக இவைகள் உள்ளன. அன்றாடம் காண்கின்

றோம் ஆகையால் இயற்கை என்று எண்ணிப் புறக்கணிக்கின்றோம். என்றேனும் ஒருநாள் அமைதியாக இருந்து எப்படி ஏன் என்ற வினாக்களை உள்ளத்தே எழுப்புவோமானால், அன்று அப்போது எல்லாம் வியப்பாகத் தோன்றுகின்றன. குழந்தை சிரிக்கக் கற்ற திறன், இரு கைகளையும் சேர்த்துத் தட்டக் கற்ற கல்வி, கண்ணிற்குத் தோன்றும் பொருளைக் கை நீட்டிப் பற்ற முயலும் ஆற்றல் முதலியவைகள் எல்லாம் அறிவுக்கு எட்டாத அற்புதங்களாக மாறுகின்றன. நாள்சூழ்ப்புழுவின் வாழ்வில் நம் சிந்தைக்கு எட்டாத ஒழுங்கு விளங்குதல் வியப்பூட்டுகின்றது. வெறும் மண்ணும் நீரும் கலந்த இடத்திலிருந்து அந்த மண்ணையும் நீரையும் அவற்றுடன் கதிரவன் ஒளியையும் காற்றையும் கலந்து பிசைந்து பசுநிற மடல்களாக்கி வெளிவரும் புல்லின் வாழ்வு பெரியதொரு விந்தையாக மருட்சி யூட்டுகின்றது. தேய்ந்து மழுங்கி வழுவழுப்புப் பெற்ற கூழாங் கல்லின் தோற்றம் மனித நாகரிகத்தின் வரலாற்றுக்கும், மனித மூளையின் ஆற்றலுக்கும் எட்டாத மிகப் பழங் காலத்து உலக மாறுதல்களை எல்லாம் கனவுபோல் காட்டி மருட்டுகின்றது. இவ்வளவு வியப்பும் மருட்சியும் ஆழ்ந்து சிந்திக்க வல்லவர்க்கே அல்லாமல் ஏனையோர்க்கு இல்லை.

பொன்னின் ஒளி குருடனுக்குப் புலனாவதில்லை. இசையின் இனிமை செவிடனுக்கு எட்டாதது. இவை போலவே இயற்கையின் வியத்தகு பெருமை உணரும் உள்ளம் இல்லாதவர்க்கு விளங்காதது. "எல்லாம் தெரிந்தவை; இவற்றில் புதுமை ஒன்றும் இல்லையே" என்று அவர்கள் புறக்கணிப்பர். உணரும் உள்ளம் பெற்றவரே நெருஞ்சி முள்ளிலும் புதிய உண்மையைக் காணவல்லவர்; வாழ்வின்

ஒவ்வொரு மாறுதலிலும் அத்தகைய உண்மையை உணர வல்லவர். உணரும் உள்ளம் படைத்தவர்க்கு எளிய பொருள் என்று ஒன்று இல்லை. பழகிய பகுதி என்று புறக்கணிக்கப் படுவதும் ஒன்று இல்லை.

கூழாங் கல்லைக்கண்டு வியக்கும் நிலவியல் ஆராய்ச்சி யாளர் போலவும், பசும்புல் தலையைக்கண்டு ஆழ்ந்து உணரும் மரவியல் ஆராய்ச்சியாளர் போலவும், நாங்கூழ்ப் புழுவின் செயல் கண்டு மருளும் உயிரியல் ஆராய்ச்சியாளர் போலவும், புறத்தே உள்ள பொருள்களின் உண்மைகளையும், அகத்தே எழும் உணர்ச்சிகளின் இயல்புகளையும் உணர்ந்து வியக்கும் ஆற்றல் பெற்றவர்கள் கற்பனை உள்ளம் படைத்த புலவர் கள்; அவர்களிலும் சிறப்பாக, வாழ்வோடு இயைந்த கற்பனையை மட்டும் போற்றி இயற்கையோடு இயைந்த நல்வாழ்வு நடாத்திய பழந்தமிழ்ப் புலவர்கள் இவ்வகையில் போற்றத் தக்கவர்கள். குறுந்தொகைப் பாடல்கள் இந்த உண்மையை எடுத்துரைக்கும் சான்றுகளாக உள்ளன.

புலவர்கள் கூர்மையான கண் பெற்றவர்கள் என்று கூறுவது வழக்கம். அதனால்தான் இயற்கைப் பொருள்களை உள்ளவாறு கண்டு சொல்லோவியமாக்கித் தரும் திறன் அவர்களுக்கு அமைந்திருப்பதாகக் கூறுவர். ஆயின் உண்மை வேறு. கண்ணின் கூர்மையில் ஒன்றும் இல்லை. கூர்மை யான கண் பெற்ற மக்கள் பலர் உற்றுநோக்கும் வேட் கையே இல்லாதவராக உள்ளனர். தாமரைப் பொய்கையில் நாள்தோறும் முழுகித் திளைக்கும் இளைஞர் பலர் தாமரை இலை, முகை, அலர் ஆகியவற்றின் அழகிய தோற்றத்தைக் கண்டு மகிழும் ஆற்றல் அற்றவராக உள்ளனர். அவ்வழியே ஏதோ காரணமாக ஒருநாள் நடந்து சென்ற மழுங்கிய

பார்வையினராகிய முதிய புலவர் ஒருவர் பொய்கையின் கரையில் நின்றவாறே தம் சிந்தையைப் பறிகொடுத்து விடுகிறார். இதற்குக் காரணம் கண்ணின் கூர்மை அன்று. கண்ணின் வழியே உணரும் உள்ளத்து உணர்வின் சிறப்பே யாகும். பள்ளிச் சிறுவனுடைய வலக்கைச் சுட்டுவிரல் மச்சம், ஆசிரியரின் கண்ணில் பலநாள் பட்டிருந்த போதிலும் பெற்ற தாயின் உள்ளத்திற்குத்தான் அந்தச் சுட்டுவிரல் அழகுவிருந்து நல்குகிறது. இத்தகைய தாயுள்ளத்து உணர்வு கொண்டு பொருள்களை நோக்குவதால்தான் புலவர்களுக்கு அவற்றின் அழகும் சிறப்பும் புலனாகின்றன.

நெருஞ்சியை நாம் பலநாளும் காண்கின்றோம்; கண்ட இடமெல்லாம், வழி எல்லாம் கண்டிருக்கின்றோம் ; நம் காலிலும் அதன் முள் பல நாள் பொத்தியிருக்கின்றது. காந்தள் மலர் போலவும், குறிஞ்சி மலர் போலவும், அது எளிதில் எட்டாததாக உள்ளது அன்று. ஆயினும் அதைப் பற்றிப் போதிய அறிவும், அநுபவமும் நமக்கு இல்லை. அள்ளூர் நன்முல்லையார் என்ற புலவர் நெருஞ்சியைப் பார்த்த போது அவருடைய நெஞ்சக் கிழியில் அது ஓவியமாகப் பதிந்துவிட்டது.

நெருஞ்சி, புன்புலத்தில் - வளம்குறைந்த நிலப்பகுதியில் - நெருங்கி வளர்வது ; சிறு சிறு இலைகள் உடையது ; மலரும் உடையது ; மலர்ந்த புதுமலர் கண்ணுக்கு இனிய காட்சி அளிப்பது.

நெருஞ்சியைப் பற்றி இவ்வளவும் நாம் உணராமலே திரிகின்றோம். நம் காலில் உறுத்தும் காரணத்தால், அதற்கு முள் உண்டு என்ற ஒன்றை மட்டும் மறவாமல் இருக்கின்றோம். அந்த முள் எப்போது எவ்வாறு தலையெடுக்கின்றது

என்பதையும் நாம் அறிவதில்லை. நெருஞ்சியில் முன்னே மலர் தோன்றுகின்றது. புதுமலர் தன் அழகை உலகிற்கு விருந்தாக அளித்துவிட்டு விடைபெற்றுக்கொள்கின்றது. அதன் இடத்தில் முள் வெளிப்படுகின்றது. அள்ளூர் நன் முல்லையாரின் சொல்லோவியத்தில் இவ்வளவும் அறிகின்றோம்.

புன்புலத்து அமன்ற சிறி இலை நெருஞ்சிக்
கட்கின் புதுமலர் முள்பயந் தாங்கு...*

நெருஞ்சிக்கு மலர் இருப்பதையே நம்மில் பலர் அறியார். அள்ளூர் நன்முல்லையார்க்கு நெருஞ்சிமலர் புதுமையுடையதாக விளங்குகின்றது. கண்ணுக்கு இனியதாகவும் விளங்குகின்றது. 'கட்கின் புதுமலர்' என்று பாராட்டுகின்றார். அவருடைய உள்ளம் இதனோடு நிற்கவில்லை. கண்ணுக்கினிய இந்த மலர் வாடியதும் இன்னா செய்யும் முள் தோன்றுவதை உணர்கின்றார். முதலிலே இன்பம் பயந்து பிறகு அதே நிலை மாறின் துன்பம் விளைவது வாழ்க்கையில் காணும் பெரிய உண்மையாக அவர்க்கு விளங்குகின்றது. தொடக்கத்தில் காதலர் உறவெல்லாம் இன்பமாகத் தொடங்குகின்றது. பிறகு அதே உறவு அவராலேயே துன்பத்திற்குக் காரணமாகிறது. காதல் கொண்ட தலைவனை மணந்து வாழும் ஒருத்தியின் உள்ளம் புலவர்க்கு நினைவு வருகின்றது. முதலில் இனிய செய்து பிறகு இன்னா செய்யும் காதலரை நினைந்து அவள் வருந்துகிறாள். காதலன் செயலை அந்த நெருஞ்சி மலர் எடுத்துக் காட்டுகின்றது. வருந்தும் காதலி சொல்லும் சொல்லாகப் புலவரின் பாட்டு அமைகின்றது.

---

*குறுந். 202.

நோம்என் நெஞ்சே நோம்என் நெஞ்சே
புன்புலத் தமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்கின் புதுமலர் முள்பயந் தாஅங்கு
இனிய செய்தநம் காதலர்
இன்னு செய்தல் நோம்என் நெஞ்சே.*

குப்பைகளில் கோழிகள் கொத்தித் திரிவதும் ஒன்ேறாடு ஒன்று சண்டையிடுவதும் அடிக்கடி காணும் காட்சிகள். கோழிச் சண்டை சிறுவர்களின் உள்ளத்தைக் கவரவல்லது. வளர்ந்த மக்களைவிடச் சிறுவர்கள் உணரும் உள்ளம் மிகுதி யாகப் பெற்றவர்கள் போலும். குப்பைகளில் கோழிகள் நடத்தும் போரைக் கடைக்கண்ணால் பார்த்தவாறே பெரும் பாலோர் நடந்து செல்ல, சிறுவர் மட்டும் தாமே நடத்தும் போர் போல அதில் ஆர்வம் கொள்வர். தம்முடைய வெற்றி தோல்வி போலவே கருதி ஆரவாரமும் செய்வர். இத்தகைய கவர்ச்சி இருப்பதால் பொழுதுபோக்கைத் தேடும் சிலர் சண்டையிடுவதற் கெனவே கோழிகளை வளர்த்துப் பயிற்சி அளித்து வருவர். "என் கோழி வெல்லும்; உன் கோழி வெல்லாது" என்று தனித்தனியே இருவர் மாறுபட்டுத் தம் தம் கோழியைக் கொண்டுவந்து பலர்முன் நிறுத்திப் போர் நடத்துவதும் உண்டு. அவ்வாறு நடத்தும் அப் போரைத் தொடங்குவதிலும் முடிப்பதிலும் கோழிகளுக்கு உரிமை இல்லை. நடத்துவோர்க்கே உரிமை உண்டு. அவர் கள் விரும்பும்போது போர் செய்யுமாறு கோழிகளைத்

---

*குறுந். 202. அள்ளூர் நன்முல்லையார்.

நோம் - வருந்தும். புலத்து - நிலத்தில். அமன்ற - நெருங்கி வளர்ந்த. கட்கு இன் - கண்ணுக்கு இனிய.

தூண்டிவிடுவர். விரும்பாதபோது போரினிடையே புகுந்து கோழிகளைப் பிரித்துக்கொள்வர். ஆனால் குப்பைகளில் கோழிகள் தம் விருப்பமாக நடத்தும் போர் அடிமைப் போர் அன்று; உரிமைப்போர். கூலிப்போர் அன்று; வீரப்போர். ஒருமுறை போர் தொடங்கிவிட்ட பிறகு அந்த உரிமைக் கோழிகள் வெற்றி தோல்வி கண்டால் அல்லது போரை நிறுத்துவதில்லை. ஆகவே குப்பைக் கோழிப் போர் பிறர் வந்து தடுத்து நிறுத்தும் வாய்ப்பு உடையது அன்று. தொடர்ந்து நடத்தி அழிந்து முடிவதாகும்.

உய்த்தனர் விடாஅர் பிரித்திடை களையார்
குப்பைக் கோழித் தனிப்போர் போல
*விளிவாங்கு விளியின் அல்லது**

புலவர் ஒருவர் - பெயர் அறியப்படாதவர் - இத்தகைய கோழிப் போரின் சிறப்பியல்பைத் தெளிய உணர்ந்து இப் பாட்டில் சில சொற்களால் படமாக்கியுள்ளார். குப்பைக் கோழிப் போரைக் கண்ட அவருடைய உள்ளத்தில் புறத்தே கண்ட அந்த நிகழ்ச்சிக்கு ஒத்த அகத்தின் போராட்டம் நினைவுக்கு வந்தது. அடுத்தடுத்துள்ள இரண்டு வீட்டார் முரண்பட்டுச் சண்டையிடுவாராயின் பிறர் குறுக்கே புகுந்து தடுக்க முடியும். ஒரே குடும்பத்திற்குள் தந்தையும் மகனும், அல்லது தாயும் மகளும், அல்லது உடன் பிறந்தார் இருவர் மாறுபட்டுச் சண்டையிடும்போதும் பிறர் தலையிட்டுத் தடுக்க முயல்வர். ஒரு குடும்பத்தின் தலைவனும் தலைவியும் உலகறிய மணம் செய்து கொண்டு வாழும் வாழ்க்கையில் ஏதேனும் கசப்பு நேர்ந்து பிணங்குவாராயினும் அந்

*குறுந். 305.

நிலையிலும் நெருங்கிப் பழகிய ஒருசிலர் தலையிடுதலும் உண்டு. உலகறியத் திருமணம் செய்துகொள்ளாமல் உள்ளத்தே காதல் வளர்த்து வாழும் இருவர்க்கிடையே இத்தகைய மாறுபாடு தோன்றின் என்ன செய்வது? அந்நிலையில் மாறுபாடும் இன்னலும் காதலரால் விளைவதில்லை. மகளின் நற்பெயரைக் காக்க அவளை வீட்டில் நிறுத்திச் சிறைவைக்கும் பெற்றோரும், மகளின் உள்ளம் அறிந்து மணம் செய்விக்காமல் காலம் கடத்தும் பெற்றோரும் ஆகிய இவர்களே காதலரின் வாழ்வில் வரும் இன்னலுக்குக் காரணம். காதலர் இருவருள் வெளி உலக உரிமை மிகுந்த ஆடவன் எய்தும் இன்னல் குறைவு. வெளிஉலக உரிமை இழந்து வீட்டினுள் சிறைப்பட்டுக் கிடக்கும் பெண்ணின் இன்னலே பெரிது. அவளுடைய இன்னலைத் தீர்க்க முயல்பவர் எவரும் இல்லை. பிறர் அறியாமல் உள்ளத்தே வளரும் காதல் ஆதலின், தொடங்கிய இன்னல் முடிவின்றி வளர்வதாகின்றது. திருமணம் ஒன்று தவிர, வேறு முடிவே அதற்கு இல்லை. அந்நிலையில் திருமணமும் இல்லை எனில் அழிவு தவிர வேறு வழியும் இல்லை. உரிமைப் போர் செய்து அழியும் குப்பைக் கோழிகளைக் கண்ட புலவர்க்கு இத்தகைய காதலியின் துன்ப நிலை நினைவுக்கு வருகின்றது.

> ***கண்தர வந்த காம ஒள்ளெரி***
> ***என்புற நலியினும் அவரொடு பேணிச்***
> ***சென்றுநாம் முயங்கற்கு அருங்காட் சியமே***
> ***வந்தஞர் களைதலை அவர்ஆற் றலரே***
> ***உய்த்தனர் விடாஅர் பிரித்திடை களையார்***
> ***குப்பைக் கோழித் தனிப்போர் போல***

விளிவாங்கு விளியின் அல்லது
*களைவோர் இலையான் உற்ற நோயே.**

கபிலர் மலைநாட்டில் பல்லாண்டு வாழ்ந்த புலவர். மயில்கள் வாழும் வாழ்வு முதல் குரங்குகளின் ஆடல்வரை யில் அனைத்தும் கண்டு வியந்து போற்றிய புலமைஉள்ளம் படைத்தவர். ஒருநாள் காலை ஒரு பாறை அருகே நின்றிருந்த போது கருங் குரங்கின் குட்டி அங்கு வெயிலில் விளையாடுவ தனைக் கண்டார். அது தனியே விளையாடவில்லை. உருளும் பொருள் ஒன்றை உருட்டி விளையாடியது. கபிலர் அதன் விளையாட்டைக் கண்டு மகிழ்ந்தவாறே உருளும் பொருளை உற்று நோக்கினர். அது மயிலின் முட்டை என அறிந்தார். காட்டுமயில் ஒன்று அந்தப் பாறையின் அருகே முட்டை இட்டுச் செல்ல அது இந்தக் குரங்குக்குட்டியின் கையில் அகப்பட்டுவிட்டது. முட்டையினுள் ஓர் உயிர் வளர்வதை அவர் உள்ளம் உணர்ந்தது. தன் உயிரினும் பெரிதாகப் போற்றிப் பாறையை அடுத்த ஒரு மரப் பொந்தில் அந்த முட்டையை இட்டுச் சென்ற தாய்மயிலின் அன்பை எண்ணினர். தன் அருமை முட்டை குரங்கின் கையில் அகப்பட்டு உருளுவதைத் தாய்மயில் கண்டால் எவ்வளவு வருந்துமோ என்று உருகினர். ஒன்றனுக்குத் துன்பம் பயப்பது மற்றொன்றனுக்கு விளையாட்டாக இருக்கும் உல கின் பெற்றி அவருக்கு விளங்கியது. காதலி கண்ணீர் விட்டு வருந்திக் கிடக்க அவளைப் பிரிந்து வேறு ஏதோ கடமையில் மூழ்கிக் கிடக்கும் ஒருவனுடைய வாழ்க்கை அவர்நினைவில்

---

*குறுந். 305. குப்பைக்கோழியார்.

எரி - நெருப்பு. அஞர் - துன்பம். உய்த்தனர் - உய்த்து - செலுத்தி. விளிவாங்கு-அழியும் வகையில். களைவோர்-நீக்குவோர்.

தோன்றியது. அவனும் அக் குற்றத்தை அறிந்து செய்யவில்லை. அறியாமல் செய்கின்றான். கடமையில் ஈடுபட்ட மனத்தோடு அவளைப் பிரிந்து வாழ்கின்றான். மயிலின் துன்பத்தை அறியாமல் முட்டையை உருட்டும் குரங்குக் குட்டியின் மனமும் அவனுடைய மனமும் ஒரே வகையானவை என்று புலவர்க்குத் தோன்றியது. காதலியின் கண்ணீருடன் ஒன்றுபட்ட உள்ளத்தினராய், அவள் கூறும் கூற்றாகவே கபிலர் பாடிய பாட்டு ஒன்று உள்ளது.

கான மஞ்ஞை அறையீன் முட்டை
வெயிலாடு முசுவின் குருளை உருட்டும்
குன்ற நாடன் கேண்மை என்றும்
நன்றுமன் வாழி தோழி உண்கண்
நீரொடு ஓராங்குத் தணப்ப
*உள்ளா தாற்றல் வல்லு வோர்க்கே.**

நெருஞ்சியின் முள், குப்பைக்கோழியின் போர், குரங்குக் குட்டியின் விளையாட்டு இவைகள் எல்லாம் எளிய நிகழ்ச்சிகள். ஆயினும் புலவர்உள்ளத்திற்கு அரிய கருத்துக்களை உணர்த்துகின்றன. கண்டு பழகிய காட்சிகளேயாயினும் புலவர்கண்ணிற்குப் புதுவிருந்தாக உள்ளன. பெற்றதாய் குழந்தையைக் காணும்போது நெஞ்சமெல்லாம் கண்ணாகக் கண்டு உணர்வது போல் புலவர்களும் கண்வழியாக உள்ளந் திறந்து காண்பதால் ஏனையோர்க்கு எட்டாத உண்மைகளும் உணர்வுகளும் அவர்களுக்குமட்டும் எட்டுகின்றன; புதுமையாய் வியப்பு விளைக்கின்றன.

---

*குறுந். 38, கபிலர்.

மஞ்ஞை - மயில். அறை - பாறையில். ஈன் - ஈன்ற. முசு - கருங்குரங்கு. குருளை - குட்டி. தணப்ப - பிரிய.

பிறருள்ளம் உணர்தல்

கூடுவிட்டுக் கூடுபாய்தல் ஓர் அரிய வித்தை என்று சிலர் கூறுவர். அது கைகூடாத வித்தையாகவே இருந்து வருகின்றது. புலவர்பெருமக்களுக்கோ மற்றொரு வகையில் அது கைதேர்ந்த கலையாக இருந்துவருகிறது. புலவர் தம் கூட்டை (உடம்பை) விடாமலே மற்றொருவர் கூட்டின் (உடம்பின்) உணர்ச்சிகளை உணர்ந்து விளக்க வல்லவர்களாக உள்ளனர். புலவர் ஆடவராக இருக்கலாம்; ஆயின் இளநங்கை ஒருத்தியின் உள்ளத்தின் குமுறலைப் பாட்டாக வடித்துத்தர வல்லவராக உள்ளார். புலவர் பெண்பாலாராக இருக்கலாம்; வீரன் ஒருவனுடைய உள்ளத்து எழுச்சியை உள்ளவாறு உணர்ந்து காட்ட வல்லவராக உள்ளார். இல்வாழ்க்கை அறியாத புலவர் ஒருவர் குடும்பத் தலைவன்தலைவியரின் அன்பின் பெற்றியை அருமையாக எடுத்துரைக்க வல்லவராக உள்ளார். இவ்வாறு கூடுவிட்டுக் கூடுபாயும் கற்பனைத் திறன் கொண்டு புலவர் உணர்த்துவன பல.

ஒருவனுக்குத் தன் வாழ்க்கையை உரிமையாக்கி அவன் வழியே தன் வழி என வாழும் காதலி, கண்மூடித் தன்மை உடையவள் அல்லள். தொடக்கத்தில் அவனுடைய பண்புகள் இன்ன இன்ன என்று ஆராய்ந்து உணர்ந்தே காதல் கொண்டாள். ஆகையால் அவனைப் பற்றி அசைக்க ஒண்ணாத நம்பிக்கை அவள்உள்ளத்தே ஏற்பட்டது. அத்தகைய நம்பிக்கை இருத்தலால்தான் கற்பு எனும் நல்ல ஒழுக்கம்

இயல்பாக அமைந்தது; 'ஒருமை மகளிரே போல' என்று உவமையாக்கிப் போற்றப்படும் பெருமை வாய்த்தது.

காதல் வளரும் தொடக்க நிலையில் காதலியின் உள்ளத்தைப் பண்படுத்தும் கடமை உடையவள் தோழி. திருமணம் செய்துகொள்ளாமல் காதலன் நாள் கடத்தியபோது காதலி கவலையுற்றாள். அந்நிலையில் ஒருபால் காதலனுக்குக் கடமை யுணர்ச்சியூட்டி மற்றொருபால் காதலியின் உள்ளச் சோர்வைப் போக்கிவந்தாள் தோழி. உள்ளத்தே எவ்வளவு சோர்வுற்ற போதிலும் சில ஆழ்ந்த நம்பிக்கைகள் அசைக்க ஒண்ணாதனவாக விளங்கும். அவற்றைக் குறித்த பேச்சு எழும்போதெல்லாம் உள்ளச் சோர்வு நீங்கிவிடும். இந்த உண்மையை உணர்ந்த தோழி காதலியின் சோர்வைப் போக்கக் கருதி ஒரு முயற்சி செய்தாள். காதலியின் பெரு நம்பிக்கைக்கு உரியவனான காதலனுடைய பண்புகள் சிலவற்றைப் பற்றி ஐயுற்றவள் போல் பேசத் தொடங்கினாள். "அவனை நம்புதல் தகுமோ?" என்று ஐயுறுவாள் போல் தோழி கூறிய சொல் காதலியின் உள்ளத்தில் எழுச்சியை விளைவித்தது. சோர்வு இருந்த இடம் தெரியாமல் அகன்றது. "தலைவனுடைய நல்லுறவைக் குறித்து நீ ஐயுறுகின்றாயோ? ஒருகாலும் வேண்டா; அவனோடு யான் கொண்ட நட்பு பெரிது; உயர்ந்தது; அளத்தற்கு அரியது" என்றாள். கற்பொழுக்கத்திற்கு வித்தாகிய உண்மைக் காதல் அவள் உள்ளத்தே நிறைந்திருந்தமையால் அவ்வாறு கூறினாள். அவள் உள்ளத்தின் நிறைவு, கூறிய சொற்களில் புலனாகுமாறு அமைந்தது. காதலனோடு கொண்ட உறவின் பெருமையை நினைத்த அவள் நெஞ்சத்தில் பெரிய நிலவுலகம் உவமையாக நின்றது. அந்த உறவின் உயர்வை நினைத்த

போது வானம் தோன்றியது. அளத்தற்கரிய பெற்றியை நினைத்தபோது கடல்நீர் தோன்றியது. அவன் வாழும் மலையை நினைத்தபோதும் அவள்உள்ளம் பெருமிதம் எய்தியது. அந்த மலையில் இழைக்கப்படும் தேன் பெருந்தேனாக, அவற்றைத் தந்த மலர்கள் உயர்ந்த குறிஞ்சி மலர்களாக, அவளுடைய நினைவெல்லாம் சிறந்து விளங்கியது. கற்பு வழிப்பட்ட ஒரு பெண்ணின் உரமான நம்பிக்கையைப் புலவர் தேவகுலத்தார் இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்:

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.*

மிளைப்பெருங்கந்தன் என்ற புலவர் ஒருவர் குடும்பத் தலைவியாகிய இளநங்கை ஒருத்தியின் பிரிவாற்றுத் துயரத்தை ஒரு பாட்டில் எடுத்துரைத்துள்ளார். தலைவன் ஒரு பெருங் கடமை மேற்கொண்டு வெளியூர்க்குச் சென்று நாள்பல ஆயின; திங்கள் பல சென்றன. அவன் இன்னும் திரும்பி வரவில்லை. வருவான் வருவான் என்று நாள்தோறும் மாலைக் காலத்தில் எதிர்பார்த்து இருந்து இருந்து ஏமாற்றம் அடைந்தாள். படிப்படியே அவள் துயரம் வளர்ந்து பெருகி விட்டது.

மாலைக் காலம் மனத்தில் நெகிழ்ச்சி மிகும் காலம். உள்ளத்தின் சிறுகுறையும் அப்போது பெரிதாக வளர்ந்து

---

*குறுந். 3. தேவகுலத்தார்.

உயர்ந்தன்று - உயர்ந்தது. ஆரளவின்று - அரிய அளவிற்று, அளத்தற்கு அரியது.

விடும். சிறு குழப்பமும் பெரிதாகக் கலக்கிவிடும். சிறு துயரமும் தாங்கமுடியாததாக ஆகிவிடும். பகல் எல்லாம் உடல்நலம் பெற்றதுபோல் ஒருவாறு எண்ணி மகிழும் நோயாளிகள் மீண்டும் நோயின் பிடிக்குள் அகப்பட்டாற் போல் உணர்ந்து வருந்தும் காலம் அது. பகல் எல்லாம் நோயால் வருந்துவோரும் மாலையில் நம்பிக்கை இழந்து பெருந்துன்பம் எய்துவர். பித்தரும் அமைதிகாணமல் மிகுதி யாக அலேயும் நேரம் அது. சிறு குழந்தைகளும் மகிழ்ச்சி யோடு சிரித்து ஆடமுடியாமல் மயங்கி அழுது போராடுவது வீடுதோறும் விளக்கு ஏற்றிய பின்னரே ஆகும். ஆகவே உணர்ச்சி மிக்க உள்ளத்தினராய காதலரின் பிரிவாற்ருத் துயரம் அந்த மாலைப்பொழுதில் மிகுதல் இயற்கையே ஆகும்.

உடல் மிகக் குழைந்த நிலையில் இருக்கும் பொழுது அது. ஆதலின் உள்ளமும் அப்போது உரம் இழந்து நெகிழ்ந்து வருந்தும் போலும்! 'காலை அரும்பிப் பகல் எல்லாம் போதாகி மாலை மலரும்இந் நோய்' என்று காதல் நோய் மாலைக்காலத்தில் மிகுவதாகத் திருவள்ளுவர் கூறியது மிக மிகப் பொருந்துவதாகும்.

மிளைப்பெருங்கந்தன் பாடிய பாட்டில் உள்ள தலைவி யின் மனம் இந்த நிலையையும் கடந்து பிரிவாற்ருத் துயரத் தால் வருந்தியது. ஒருநாள் அவளுடைய தோழி அவள் நிலை உணர்ந்து இரங்கி ஆற்றுவிக்கும்பொருட்டு வந்தாள். "மாலைக் காலம் ஆதலின் நீ மிக வருந்துவாய் என்று வந் தேன். பிரிந்து வருந்துவார்க்கு இது பொல்லாத பொழுது. எவ்வாறேனும் நீ ஆற்றியிருத்தல் வேண்டும்" என்ருள். தலைவி தன் நிலையையும் அவள் ஆற்றுவித்தலையும் ஒருங்கே எள்ளி உரைப்பவள் போல் மறுமொழி கூறத் தொடங்கி

ஞள். "கதிரவன் மேற்கே மறைய அந்திவானம் சிவக்க ஒளி மங்கும் ஒரு பொழுதைக் கண்டு, அப்போது முல்லை மலர்வதையும் கண்டு, 'அதுதான் மாலைக் காலம்' என்று பலரும் கூறுகின்றனர். அவர்கள் அனைவரும் அறிவு மயங்கியவரே" என்முள்.

உண்மையாகத் துயரத்தால் அறிவு மயங்கியவள் இந்தத் தலைவியே. ஆயின் உணர்ச்சி மிகுந்த நிலையில் இருத்தலால் தான் உணர்வதே உண்மை என்றும், மற்றவர்கள் உண்மை உணராதவர்கள் என்றும் கூறிஞள். "அது மட்டும் மாலைப் பொழுது அன்று; வாழ்க்கைத் துணையைப் பிரிந்து வருந்தும் என்போன்றவர்க்கு எல்லாம் மாலைக்காலமே. கோழி கூவும் விடியற்காலையும் மாலைக் காலமே. பகற்பொழுதும் மாலைக் காலமே" என்முள்.

தொடக்கத்தில் முல்லை மலரும் மாலைப் பொழுதில் மட்டும் பிரிவாற்றுமல் வருந்தியவள், துயரம் படிப்படியே பெருகப் பெருக இரவும் பகலுமாகிய நாள் முழுவதுமே மாலைக்காலமாகத் துன்பம் செய்வதை உணர்ந்தாள்.

சுடர்செல் வானஞ் சேப்பப் படர்கூர்ந்து
எல்லறு பொழுதின் முல்லை மலரும்
மாலை என்மனுர் மயங்கி யோரே
குடுமிக் கோழி நெடுநகர் இயம்பும்
பெரும்புலர் விடியலும் மாலை
பகலும் மாலை துணையி லோர்க்கே.*

---

*குறுந். 234. மிளைப்பெருங்கந்தன்.

சேப்ப - சிவக்க. படர் - துன்பம். கூர்ந்து - மிகுந்து. எல் அறு - ஒளிஅற்ற. நகர் - வீடு.

பெண் ஒருத்தி உற்ற துயர் படிப்படியே மிக்கு வளர்ந்து கலக்குவதை ஆண்பாலாராய புலவர் மிளைப்பெருங் கந்தன் உணர்ந்து பாடிய திறன் போற்றத் தக்கது.

ஒருதாய் தன் மகளை வீட்டில் வளர்த்துக் காக்கும் போது தன் வாழ்வின் ஒரு பகுதியாகவே அவளைப் போற்று கின்றாள். திருமணம் நடத்தி அவளைப் புக்ககத்திற்கு அனுப்பும்போது பிரியமுடியாத உயிரின் பகுதியைப் பிரிவது போல் உணர்ந்து வருந்துகிறாள். ஆயினும் அவளுடைய வேட்கை, தன் மகள் கணவனுடன் ஒன்றுபட்டுப் பிரியா வாழ்க்கை நடத்தல் வேண்டும் என்பதே யாகும். "உன் மகளை விட்டுப் பிரியாமல் உன் மருமகன் காத்துவருகின் றான்" என்று பிறர் கூறும் சொல் ஒன்றே தாயின் செவி யில் அமிழ்தம் பாய்ச்சுவதாகும். இத்தகைய தாய்உள் ளத்தை உணர்ந்த புலவர் குழல்தத்தன் என்பவர்.

பெற்ற தாய் செவிலியை மகள் வாழும் வீட்டிற்குப் போய்ப்பார்த்துவர அனுப்பினாள். செவிலி அங்குச் சென்று மகளும் மருமகனும் நடத்தும் அன்புவாழ்க்கையை உணர்ந்து அகம் மகிழ்ந்தவளாய்த் திரும்பினாள். தாயின் செவி குளிரும் வகையில் அவள் மகிழத்தக்க நற்செய்தி எடுத்துரைத்தாள். "மகள் அந்தச் சிறிய ஊரில் நலமாக வாழ்கின்றாள்" என்று தெரிவித்தாள். இதுமட்டும் கூறி னால் தாயின் உள்ளம் மகிழாது. தன் மகளை அவளுடைய கணவன் அன்புகொண்டு போற்றுகின்றான் என்பதை அறிந்தால்தான் தாய்மனம் மகிழும் என்பதை உணர்ந்த செவிலி அதையும் எடுத்துரைத்தாள். "அரசருடைய ஆணை மேற்கொண்டு ஒரு கடமையின் காரணமாக வெளியூர்க்குச் சென்றுவர நேர்ந்தாலும் நம் மருமகன் மகளை விட்டுப்

பிரிந்து அங்கே தங்குவதில்லை. அவன் ஏறிச் செல்லும் தேர் வெளியூரில் தங்கி அறியாதது" என்றாள்.

சீறூ ரோளே மடந்தை வேறூர்
வேந்துவிடு தொழிலொடு செலினும்
சேந்துவரல் அறியாது செம்மல் தேரே.*

ஆடவராகிய குழல்தத்தன் இவ்வாறு தாயின் மனதினை உணர்ந்து அவள் மகிழும் செய்தி அமைத்துப் பாடியுள்ளமை கருதத்தக்கது.

*குறுந். 242. குழற்றத்தன்.

சீறூரோள் - சின்ன ஊரில் உள்ளாள். சேந்து - தங்கி. செம்மல் - தலைவன்.

குறுந். 3

சொல்லும் திறன்

அகப்பொருட் பாடல்களுள் வரும் தோழி அநுபவம் மிக்கவள். அநுபவத்தால் அறிவும் திறனும் பெற்றவள். அவளுடைய உறவு, தலைவியின் வாழ்வுக்கு உறுதுணையானது. தலைவியின் காதல் ஏமாற்றம் இன்றி வெற்றிபெற்று இல்லறமாய் விளங்கவேண்டும் என்னும் பேரார்வம் தோழிக்கு உண்டு. அதனாலேயே பொறுப்பு உணர்ந்து கடமையைச் செய்வாள். தலைவிக்கும் தலைவனுக்கும் அவ்வப்போது தக்க முறையில் அறிவுரை கூறுவாள். சோர்வுற்ற போது ஊக்கம் ஊட்டியும், கடமையை மறந்த போது இடித்துரைத்தும் அவர்களைத் திருத்துவாள்.

காதல் வளர்ந்தபின் விரைந்து திருமணம் செய்து கொள்ளுதல் தலைவனுடைய கடமையாகும். ஏதோ காரணத்தால் அவனுடைய முயற்சிகள் வெற்றி பெறவில்லை. சிறிது சோர்வுற்றுக் காலம் தாழ்த்தான். அவன் சோர்வைப் போக்கிக் கடமையில் முனையுமாறு தோழி அறிவுரை கூறினாள். அவன் உள்ளம் கொள்ளும்வகையில் வாழ்வின் இருவகை நிலைகளை இரண்டு உவமைகளைக் கொண்டு விளக்கினாள். திருமணம் செய்துகொள்ளாமலே வாழும் காதல் வாழ்வு பல இடையூறுகளை உடையது என்பதை ஒருவகைக் காட்சியாலும், திருமணம் செய்துகொண்டு வாழும் காதல் வாழ்வு இடர்ப்பாடு அற்றது என்பதை மற்றொரு வகைக் காட்சியாலும் அவனே உணர்ந்து தெளியுமாறு எடுத்துரைத்தாள்.

அவள் மலைநாட்டுப் பெண். மலைகளில் பலாமரம் மிகுதி. ஒருவகைப் பலாமரம் கிளைகளிலே காய்கள் காய்த்துப் பழுப்பது. காய்கள் பெருகப் பெருக, கிளைகள் சுமக்க முடியாமல் வருந்தும். பெரும பழங்கள் தொங்கும் சிறு கிளைகள் முறிதலும் உண்டு. மற்றொருவகைப் பலாமரம் வேர்களில் காய்கள் பல காய்த்துப் பழுப்பது. அந்தப் பழங்கள் எவ்வளவு பெருகினும் மரத்திற்கு இடையூறு இல்லை. அவற்றின் சுமையை நிலம் தாங்கிக்கொள்ளும்.

இந்த இருவகைப் பலா மரங்களையும் அவனுடைய சிந்தனைக்குக் கொண்டுவந்தாள் தோழி. கோட்டுப் பலாவைப் போல் (கிளைகளில் பழங்களை உடைய மரங்களைப் போல்) முறிந்து போவதற்கு இடம் தரும் இன்னல் உடைய வாழ்வு வேண்டா என்று உணர்த்தினாள். வேர்ப்பலாவைப் போல் எவ்வளவு இடர்வரினும் பொருட்படுத்தாமல் எளிதில் தாங்கிக்கொண்டு கவலையின்றி வாழும் வாழ்வு வேண்டும் என்பதைத் தானே உணருமாறு செய்தாள்.

" மூங்கிலை வேலியாக உடைய, வேரிலே காய்கொள்ளும் பலாமரங்கள் வளர்ந்த மலைச்சாரல் உடைய நாட்டின் தலைவனே! திருமணம் செய்துகொள்ளும் செவ்வி உடையவனாக ஆகுக. யார் அதனை அறிய வல்லவர் ? மலைச்சாரலில் சிறிய கிளைகளில் பெரும் பழங்கள் தொங்குவது போல இவள்உயிர் மிகச் சிறிதாக உள்ளது, இவள் கொண்ட காதலோ பெரிதாக உள்ளது " என்று தலைவனுக்கு அறிவுறுத்தினாள்.

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை ஆகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரல்

சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்
*உயிர்தவச் சிறிது ; காமமோ பெரிதே.**

உள்ளம் புண்படாதவகையிலும், வாழ்வின் அரிய உண்மைகளை உணரும் வகையிலும், கடமை யுணர்ச்சி கொள்ளும்வகையிலும் தலைவனுக்கு அறிவுரை கூறிய தோழியின் பேச்சுத்திறன் போற்றத் தக்கதாகும்.

பலாமரங்கள் கண்ணாரக் காண்பவை ; கற்பனை அல்ல. இவ்வாறு உண்மைக் காட்சிகளை எடுத்துரைத்து அறிவுரை புகட்டுவதோடல்லாமல் பொய் சேர்த்தும் கற்பனை கலந்தும் தோழி தலைவனுக்கு அறிவுரை கூறுதல் உண்டு. மக்கள்வாழ்க்கைக்கும் மற்ற உயிர்களின் வாழ்க்கைக்கும் வேறுபாடுகள் பல உண்டு. விலங்குகளின் வாழ்க்கையில் இன்ப துன்ப விளைவுகள் குறைவு. மக்கள்வாழ்க்கையில் அவை மிகுதி. மக்கள்வாழ்க்கையில் உள்ளவை எல்லாம் விலங்குகளுக்கும் இருப்பதாகக் கூறுதல் படைத்து மொழிதலே யாகும். ஆண் குரங்கு இறந்தால் பெண் குரங்கு சில நாழிகை அல்லது சில நாள் வருந்தும் ; அந்த வருத்தமும் சிறிதளவே யாகும். மீண்டும் மற்றொரு குரங்கின் துணைதேடி வாழத் தொடங்கும். கணவனை இழந்த மனைவியோ விதவையாவாள் ; தாங்கொணாத் துயரத்தால் நலிவாள். வயிற்றில் பிறந்த மக்களுக்காக வெறுப்புடன் வாழ்க்கை நடத்துவாள். அல்லது, மக்களைச் சுற்றத்தாரிடம் விட்டுவிட்டு மாய்வாள். மக்கள்வாழ்க்-

---

*குறுந். 18. கபிலர்.

வேரல் - சிறுமூங்கில். கோள் - காய்கொள்ளுதல். கோடு — கொம்பு. தூங்கியாங்கு - தொங்கினாற்போல். தவ - மிக.

கையில் உள்ள இவ்வளவும், விலங்குகளின் வாழ்க்கையில் காணமுடியாதவை. இவையனைத்தும் விலங்கின் வாழ்க்கையில் இருப்பதாகப் படைத்துக் கூறும் பாட்டுக்களும் உண்டு.

தலைவன் திருமணம் செய்துகொள்ளாமலே தலைவியை நாடிவந்து கண்டு திரும்பும் வழக்கம் உடையவனாக இருந்தான். சிலநாள் இரவில் வரத் தொடங்கினான். அவன் வந்த வழி இடர் மிகுந்த மலைவழி. நள்ளிரவில் பாம்பும் புலியும் வழங்கும் வழி. காதல் உள்ளத்தால் அச்சம் அறியாமல் வந்து செல்லக் கற்றான் அவன். தலைவியோ அவ்வழியில் உள்ள இடர்ப்பாடுகளையே நினைந்து நினைந்து பெரிதும் வருந்தினாள். அவனைக் காண்பதால் வரும் இன்பத்தைவிட அவ்வழியை நினைப்பதால் வரும் துன்பமே மிகுதியாக இருந்தது. இதை அறிந்தாள் தோழி. அவன் இரவில் வருவதைத் தடுக்க முனைந்தாள். "மலைநாட்டுத் தலைவனே, நீ நள்ளிரவில் வரல்வேண்டா. அதனால் யாம் வருந்துகின்றோம்" என்றாள். நேர் அறிவுரையாக இவ்வளவு கூறுதல் மட்டும் போதாது; அதனால் போதிய பயன் விளையாது என்ற எண்ணம் கொண்ட தோழி, கணவனை இழந்த ஒரு பெண்குரங்கின் வாழ்க்கையைக் கற்பனையில் படைத்து, அதன் துயர வாழ்க்கையை அவன்உள்ளத்தில் படியுமாறு எடுத்துரைத்தாள். "கரிய கண்களை உடைய வலிய ஆண் குரங்கு இறந்துவிட, விதவைவாழ்விலிருந்து உய்யமுடியாத அழகிய பெண் குரங்கு அறிவற்ற தன் குட்டியைச் சுற்றத்திடம் சேர்த்துவிட்டு, உயர்ந்த மலைப்பகுதியில் ஏறிக் கீழே பாய்ந்து உயிரை மாய்த்துக்கொள்ளும்" என்று எடுத்துரைத்தாள்.

கருங்கண் தாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துஉயிர் செகுக்கும்
சாரல் நாட நடுநாள்
வாரல் வாழியோ வருந்துதும் யாமே *

தலைவியின் உடல் மெலிவுக்குக் காரணம் யாதோ என்று தாய் கட்டுவிச்சியை அழைத்துக் கேட்டுக்கொண்டிருந்தாள். அவள் இது முருகனால் வந்த நோய் என்று கூறிப் பூசை முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்யச் சொல்வாள் போல் தெரிந்தது. அந்த நிலையில் தோழி அங்குச் சென்று, தலைவியின் மெலிவுக்கு உண்மையான காரணம் இன்னது என அறிவிக்க முயன்றாள். காதல் என்னும் காரணத்தை வெளிப்படையாகக் கூறவும் முடியவில்லை. அதனால் கட்டுவிச்சி பாடியபோது அவளோடு கலந்தாற்போலவே, குறிப்பால் புலப்படுத்தினாள்.

" அகவன் மகளே! பாடு, பாடு. இன்னும் பாடு அந்தப் பாட்டை; அவருடைய (காதலருடைய) நல்ல பெரிய மலையைப் பாடிய அந்தப் பாட்டை இன்னும் பாடு" என்றாள்.

அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே†

*குறுந். 69. கடுந்தோட்கரவீரன்.

தா - வலிமை. பெரும்பிறிது - சாவு. பறழ் - குட்டி. கிளைமுதல் - சுற்றத்தினிடம்.

†குறுந். 23 ஔவையார்.

அவர்குன்றம் என்பதை முருகன் குன்றம் என்ற வெளிப் படைப் பொருளுடனும், காதலன்குன்றம் என்ற குறிப்புப் பொருளுடனும் அமைத்து, இவ்வாறு உண்மையைப் புலப் படுத்தினாள்.

திருமண ஏற்பாட்டுக்காகப் பிரிந்த தலைவன் இன்னும் வராமையால் தலைவி துயருற்றாள்; வாடினாள். அவளு டைய துயரத்தைப் போக்க முயன்ற தோழி, பலவாறு கூறியும் தேற்ற முடியாமல் இருத்தல் கண்டு, வேறொரு வழி செய்தாள். தலைவனைப் பற்றித் தலைவிக்கு நம்பிக்கை யும் நல்லெண்ணமும் வளரவேண்டும்; துயரமும் குறைய வேண்டும். இதற்கு உரிய வழி செய்தாள். தலைவனைப் பழித்தாள்; தலைவி அதை மறுத்துக் கூறுவாள் என்றும், அதன் வாயிலாக எழுச்சி பெறுவாள் என்றும் எண்ணியே பின்வருமாறு தோழி பழித்தாள்.

“பழைய அழகு இழந்து தோள் மெலிய, துன்ப நெஞ்சுடன் நாள்தோறும் உறங்காமல், பசலை பரவும் நிலை யாகி முடிவதுதானோ, தலைவனோடு (காதல் தொடங்கிய காலத்தில்) சிரித்து விளையாடிய பயன்?” என்றாள்.

தொல்கவின் தொலைந்த தோள்நலம் சாஅய்
அல்லல் நெஞ்சமொடு அல்கலும் துஞ்சாது
பசலை ஆகி விளிவது கொல்லோ...
விலங்குதிரை உடைதரும் துறைவனொடு
இலங்குஎயிறு தோன்ற நக்கதன் பயனே.*

*குறுந். 381.

தொல் - பழைய. கவின் - அழகு. சாஅய் - மெலிந்து. அல் கலும் - நாள்தோறும். விளிவதுகொல் - முடிவதோ. விலங்கு-

தலைவியின் மெலிவுக்குக் காரணம் முருகனால் வந்த நோய் என்று பூசாரி வேலன் சொன்னான். அதைப் பெற்றோர் நம்பி வெறியாட்டம் (முருக பூசை) நிகழ்த்தினார்கள். அப்போது தலைவி தெய்வத்தை வணங்க வேண்டிய நெருக்கடி ஏற்படும் நிலையில், தோழி குறுக்கிட்டு அதைத் தடுக்க முயன்றாள். உண்மையைக் குறிப்பாகப் புலப்படுத்தித் தலைவிக்கு உள்ளது காதல் நோய் என்பதை எல்லோரும் உணருமாறு செய்தாள்.

" முருகனை வழிபட்டு வரும் அறிவுள்ள பூசாரியே! சினம் கொள்ள வேண்டா. ஒன்று கேட்கின்றேன். பல் வேறு உரு உடைய சோறுகளோடு சின்ன ஆட்டையும் கொன்று இவளுடைய நெற்றியையும் தடவி நீ வணங்கிப் பலி கொடுப்பாயானால், இவளைத் துன்புறச் செய்த மலை நாட்டுத் தலைவனுடைய மாலை அணிந்த மார்பும் இந்தப் பலியை உண்ணுமோ?" என்று வேலனைக் கேட்டாள்.

முருகுஅயர்ந்து வந்த முதுவாய் வேல!
சினவல் ஓம்புமதி; வினவுவது உடையேன்;
பல்வேறு உருவின் சில்அவிழ் மடையொடு
சிறுமறி கொன்றுஇவள் நறுநுதல் நீவி
வணங்கினை கொடுத்தி ஆயின் அணங்கிய
விண்தோய் மாமலைச் சிலம்பன்
ஒண்தார் அகலமும் உண்ணுமோ பலியே?*

குறக்கிடும். திரை - அலை. இலங்கு - விளங்கு. எயிறு - பல். நக்கதன் - சிரித்ததனுடைய.

*குறுந். 362. வெம்பற்றூர்க் கண்ணன் கூத்தன்.

முதுவாய் - அறிவுடைமை வாய்த்த. அவிழ் - சோறு. அகலம் - மார்பு.

இவ்வாறு குறிப்பால் புலப்படுத்துதல் அல்லாமல், செவிலி நேரே கேட்டலும், தோழி அவளுக்கு நேரே விடை அளித்தலும் உண்டு. "இவள் இவ்வாறு மெலிந்து வாடக் காரணம் என்ன?" என்று கேட்ட செவிலிக்குத் தோழி பின்வருமாறு கூறினாள்.

"ஊழ் ஏற்படுத்தி அமைத்தல் அல்லாமல், அவருடைய உயர்ந்த தன்மையை அளந்து அறிவதற்கு நாம் யார்? வெறியாடுகிறவள் இது முருகனால் வந்த நோய் என்று கூற அதற்கு இவள் உடன்படவில்லை. அதன் பிறகு, சுனையில் மலர்ந்த நீலமலரைப் பார்த்து உள்ளத்தில் வருந்தி அழு கண்ணோடு என்னவோ துணிந்திருக்கிறாள். அவளுடைய துணிவு பழுது அன்று என்றே கூறவேண்டும்" என்றாள்.

பால்வரைந்து அமைத்தல் அல்லது அவர்வயின்
சால்புஅளந்து அறிதற்கு யாஅம் யாரோ?
வெறியாள் கூறவும் அமையாள் அதன்தலைப்
பைங்கண் மாச்சுனைப் பல்பிணி அவிழ்ந்த
வள்இதழ் நீலம் நோக்கி உள்அகைபு
அழுத கண்ணள் ஆகிப்
பழுதன்று அம்ம ஆயிழை துணிவே.*

சில வேளைகளில் - நெருக்கடியான வேளைகளில் - உண்மையைச் சொல்லி வாழ்வைக் காக்கவேண்டியுள்ளது. அதற்கு அஞ்சாமை வேண்டும். அத்தகைய அஞ்சாமையுடன் கலந்த அறிவாற்றலைத் தோழியிடம் காணலாம்.

*குறுந். 366. பேரிசாத்தனார்.

பால் - ஊழ். பைங்கண் - பசிய இடத்தை உடைய. பிணி - முறுக்கு. அவிழ்ந்த - மலர்ந்த. அகைபு - வருந்தி. ஆயிழை - அழகிய அணிகலன் அணிந்த தலைவி.

திருமண ஏற்பாடு செய்து வருவதாகக் கூறிச்சென்ற தலைவன் இன்னும் வரவில்லை. வேறு குடும்பத்தார் (அயலார்) யாரோ பெண் கேட்க வீட்டிற்குள் வந்திருந்தார்கள். பெற்றோர் ஒருகால் அவர்களின் வேண்டுகோளுக்கு இசைந்துவிட்டால் என் செய்வது என்று தலைவி வருந்தினாள். இந்த நெருக்கடியில் உண்மையைத் தவறாமல் அறிவித்தல் நல்லது என்று துணிந்தாள் தோழி. தலைவியிடம் பேசுவதுபோல் நடித்துப் பெற்றோர்செவியில் விழுமாறு பின்வருமாறு கூறினாள்.

"இன்று எங்கே உள்ளானோ அவன்? உனக்கு அறிவு முதிரும் பருவத்தில் எம் வீட்டிற்கு நீ வருவாய் என்று கூறிக் கூந்தலைத் தடவிச் சென்றானே அவன் இன்று எங்கேயோ?" என்றாள்.

இன்றுயாண் டையனோ தோழி... நாடன்
அறிவுகாழ்க் கொள்ளும் அளவைச் செறிதொடி
எம்இல் வருகுவை நீஎனப்
பொம்மல் ஓதி நீவி யோனே.*

இவ்வாறு தோழி தலைவியிடம் பேசும் சொற்களைப் பெற்றோர் கேட்டு உண்மை உணர்ந்தார்கள். அயலார்க்குக் கொடுக்க மறுத்துவிட்டார்கள்.

திருமண ஏற்பாட்டுக்காகப் பிரிந்து செல்லும் தலைவனுடைய நெஞ்சில் கடமையுணர்ச்சி குறையாதபடி தோழி

---

*குறுந். 379.

காழ்க்கொள்ளும் அளவை - முதிரும் காலம். செறி தொடி! - நெருங்கிய தொடி அணிந்தவளே! பொம்மல் - பொங்கிய. ஓதி - கூந்தல்.

கூறிய சொற்கள் போற்றத்தக்கவை. செல்லும் ஊரில் வேறு கடமைகளை முன்னிட்டு இதை மறத்தலோ, தள்ளிவைத்தலோ நேரின், பிறகு நேரும் துன்பங்களுக்குத் தலைவி ஆளாகி வருந்துவாள் என எண்ணி, அவ்வாறு நேரா வண்ணம் தலைவன் காக்கவேண்டும் என்ற முயற்சி இது.

"தாய் சினம் கொண்டு வருந்தும் காலத்திலும் வாய் விட்டு 'அம்மா' என்றே அழுகிற குழந்தை போல், நீ துன்பமே செய்தாலும் நல்ல வகையில் காப்பாற்றினாலும், உன் பொறுப்பில் உள்ளவள் இவள். இவளுடைய துன்பத்தைத் தீர்க்க வல்லவர் வேறு யாரும் இல்லை" என்று தலைவனிடம் கூறினாள்.

தாய்உடன்று அலைக்கும் காலையும் வாய்விட்டு
அன்னாய் என்னும் குழவி போல
இன்னா செயினும் இனிதுதலை யளிப்பினும்
நின்வரைப் பினள்என் தோழி
தன்னுறு விழுமம் களைஞரோ இலளே.*

தலைவி சோர்ந்து வருந்தும் காலத்தில் அவளைத் தோழி வெளியே அழைத்துச் சென்று, அவனுடைய மலையைக் காட்டுதல் உண்டு. மலையைக் கண்டால் அவளுள்ளம் ஆறுதல் பெறும் என்று நம்பியே அவ்வாறு செய்வாள்.

"அதோ பார் தோழி. அங்கே வந்து பார். நெகிழ்ந்து பெருமழை பெய்யத் தொடங்கியதால் அவர்நாட்டில் ஆர

---

*குறுந். 397. அம்மூவனார்.

உடன்று - மாறுபட்டு, சினம்கொண்டு. தலையளிப்பினும் - அருள் செய்தாலும். வரைப்பினள் - எல்லையில் நிற்பவள். விழுமம் - துன்பம். களைஞர் - தீர்ப்போர்.

வாரமான மகளிர் கூட்டம் விரும்பி நீராடும் அருவியுடன், கழுவப்பட்ட நீலமணிபோல் தோன்றும் குளிர்ந்த நறுமணமுள்ள பொற்றைக் கற்கள் ஓங்கிய மலையை வந்து பார்" என்பாள்.

உவக்காண் தோழி அவ்வந் திசினே
தொய்யல் மாமழை தொடங்கலின் அவர்நாட்டுப்
பூசல் ஆயம் புகன்றிழி அருவியின்
மண்ணுறு மணியின் தோன்றும்
தண்ணறுந் துறுகல் ஓங்கிய மலையே.*

தலைவி தலைவனது பிரிவை நினைந்து வருந்தும்போதெல்லாம் அவளுக்கு ஆறுதல் கூறித் தேற்றுவது தோழியின் கடமையாகும். நாள்தோறும் பற்பலவாறு கூறித் தலைவியின் மெலிந்து சோர்ந்த மனத்தைத் தேற்ற வேண்டியுள்ளது. என்ன சொல்லியும் தலைவி தேறாத நிலையில், தோழி அவள் மனத்தில் ஒரு மாறுதலை ஏற்படுத்தியாவது துயரத்தைக் குறைக்க முயல்வாள். வீட்டை விட்டு வெளியே வருதலும் துயரத்தைக் குறைக்கும் வழியாகும் என்று எண்ணி வெளியே அழைத்துச் செல்ல முயல்வாள்.

"முல்லை ஊர்ந்த பாறையின்மேல் ஏறிப்பார்த்து வருவோம், புறப்படு. மாலையில் ஊர்க்குத் திரும்பும் காளையுடன் வரும் பசுக்கூட்டத்தின் மணி ஓசையோ? அல்லது, எடுத்த கடமையை முடித்த தலைமையுள்ளத்தோடு, ஏவலாளர் பக்கத்

---

*குறுந். 367. மதுரை மருதனிளநாகனார்.

வந்திசின் - வருக. தொய்யல் - நெகிழ்ச்சி. பூசல்-ஆரவாரம். ஆயம் - மகளிர் கூட்டம். புகன்று - விரும்பி. மண்ணுறு - கழுவி ஒளி செய்யப்பட்ட.

தில் போற்றிவர, ஈரமணலை உடைய காட்டு வழியில் வரும் தலைவருடைய தேரின் மணி ஓசையோ? அங்கு ஒலிக்கின்ற ஓசைகள் கேட்கின்றன. போய்ப் பார்த்து வருவோம்" என்பாள்.

முல்லை ஊர்ந்த கல்உயர் ஏறிக்
கண்டனம் வருகம் சென்மோ தோழி!
எல்ஊர்ச் சேர்தரும் ஏறுஉடை இனத்துப்
புல்ஆர் நல்ஆன் பூண்மணி கொல்லோ?
செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு
வல்வில் இளையர் பக்கம் போற்ற
ஈர்மணற் காட்டாற்று வரூஉம்
தேர்மணி கொல்ஆண்டு இயம்பிய உளவே.*

தலைவன் தலைவியைப் பிரிந்து பரத்தையின் வீட்டில் சிலநாள் தங்கியிருந்து, பிறகு தன் வீட்டிற்குத் திரும்பினான். அதற்குமுன், தலைவியின் மனம் வெறுத்து ஊடல் கொள்ளாதிருப்பதற்காகச் சிலரிடம் சொல்லியனுப்பினான். அவன் சார்பாக வந்தவர்களை நோக்கித் தோழி தக்க இடித்துரை கூறினாள். நயமான சொற்களால் தலைவன் கேட்டு வருந்தும் வகையில் கூறினாள்.

" காலையில் எழுந்து தேரை ஆயத்தம் செய்து பரத்தையரைத் தழுவுவதற்காகச் சென்ற தலைவன் மிக விளக்கமான தோற்றத்தோடு இருக்கிறான் என்று அவனுடைய மனைவி

*குறுந். 275. ஒக்கூர் மாசாத்தியார்.

சென்மோ - செல்க. எல் - மாலை. ஏறு - காளை. ஆர்-தின்ற. ஆன் - பசு. செம்மல் - தலைமை. இளையர் - ஏவலாளர். இயம்பிய- ஒலித்தவை.

யாகிய இவள் மனம் கலங்குகிருள். இதற்குக் காரணம் இவள் பிறந்த குடியின் பண்பே. இவ்வாறு உயர்குடியில் பிறத்தல் துன்பம் தருவதாக உள்ளது" என்ருள்.

காலை எழுந்து கடுந்தேர்ப் பண்ணி
வாலிழை மகளிர்த் தழீஇய சென்ற
மல்லல் ஊரன் எல்லினன் பெரிதுஎன
மறுவரும் சிறுவன் தாயே;
தெறுவது அம்மஇத் திணைப்பிறத் தல்லே.*

குடியைப் பழிப்பதுபோல், தலைவனுடைய தீய நடத்தை யைக் கடிந்து கூறினுள்.

பரத்தையை நாடித் தலைவன் வாழும் வாழ்வை நயமுறக் கடிந்துரைத்த தோழி, தலைவி தன் கடமை தவருமல் வாழும் வாழ்வையும் எடுத்துரைத்து, அவன் உணர்ந்து உருகும் வகையில் கூறினுள். "உலகத்தில் சிலர் காதலரை உற்று இன்புறுகிருர்கள்; தலைவியின் நிலைமை உள்ளத்தே காதலை வளர்த்து இன்புறும் அளவினது. ஊர்ந்து இன்புருமல் இழுத்து இன்புறும் சிறுவர்களின் நடைவண்டி போன்றது இந்தக் காதல்" என்ருள்.

தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்துஇன் புருஅர் ஆயினும் கையின்
ஈர்த்துஇன் புறாஉம் இளையோர் போல
உற்றுஇன் புறேஎம் ஆயினும் நல்தேர்ப்

*குறுந். 45. ஆலங்குடி வங்கனுர்.

கடு - விரைந்து செல்லும். வாலிழை - தூய அணிகலன்கள். தழீஇய - தழுவும் பொருட்டு. மல்லல் - வளம். எல் - விளக்கம். மறுவரும் - கலங்கும். சிறுவன் தாய் - மனைவி.

பொய்கை ஊரன் கேண்மை
செய்துஇன் புற்றனெம்; செறிந்தன வளையே.*

எண்ணத்தளவில் உள்ள இந்தக் காதலின் மகிழ்ச்சியாலேயே கைகள் மெலியாமல் வளையல்கள் செறியுமாறு உள்ளன என்று குறிப்பால் இகழ்ந்தாள்.

இல்லறம் மேற்கொண்ட தலைவன் தலைவியுடன் அன்பாக வாழ்ந்துவந்தான். அவன் கலைஉணர்ச்சி உடையவன். ஆதலின் இசைக்கலை வல்ல பாணன் ஒருவன் அவன்உள்ளத்தைக் கவர்ந்து நெருங்கிப் பழகினான். இப்பழக்கம் எவ்வாறோ சிறு தீமைக்கும் காரணம் ஆயிற்று. பாணன்நட்பால் பரத்தையின் உறவு வாய்த்தது. சிலநாள் தவறான வாழ்க்கையில் தலைவன் ஈடுபட்டான். தவறு உணர்ந்து திருந்தும் நாள் வந்தது. வீட்டிற்குத் திரும்ப அஞ்சித் தயங்கினான். அதே பாணனுடைய உதவி பெற்றுத் திரும்ப எண்ணினான். முன்னே பாணனை அனுப்பித் தலைவியின் வெறுப்பைப் போக்க முயன்றான். சென்ற பாணன்; தலைவியும் தோழியும் ஒருங்கிருந்தபோது தலைவனுடைய இனிய பண்புகளைத் திரும்பத் திரும்பப் பாராட்டி எடுத்துரைத்தான். அவன் சொன்னவற்றை எல்லாம் பொறுமையாகக் கேட்ட தோழி உடன்படுவாள்போல் தலையசைத்து, “ஆம்; தலைவன் எல்லோரினும் இனியவன்; பேரன்பு உடையவன்; இந்த இனிமையும் அன்பும் வாழ்க்கையில் விளங்கக் கண்டிலேம்; பாணன்வாயால்தான் விளங்கக் காண்கின்றோம்” என்று எள்ளி நகையாடினாள். பாணன்குற்றத்தையும் தலைவன்தவற்றையும் இவ்வாறு

*குறுந். 91. தும்பிசேர் கீரனார்.
வையம் - வண்டி. செறிந்தன - இறுகிப் பொருந்தின.

ஒருங்கே கடிந்துரைத்த திறன் போற்றத்தக்கதாகும். தலைவனுக்கு அப் பண்புகள் இல்லை என்று மறுத்ததோடு பாணன்வாய் பொய் கூறும் வாய் என்று கடிந்துவிட்டாள். அதனோடு நிற்கவில்லை. அறிவற்ற சிறு பறவைகளின் வாழ்க்கையில் காணப்படும் கடமையுணர்ச்சியும் தலைவனுக்கு இல்லை என்பதைக் குறிப்பால் அறிவுறுத்தினாள். தன் மனைவி வீட்டினுள் தனித்திருந்து வருந்துமாறு விட்டுவிட்டுத் தலைவன் ஆடல் பாடல்களில் திளைத்துப் பரத்தையின் வீட்டில் காலங்கழித்தல், அன்புடைமையும் அன்று, அறிவுடைமையும் அன்று என்பதைக் கூறாமல் கூறிவிட்டாள். ஊர்க்குருவியின் அன்பான இல்வாழ்க்கையை எடுத்துக்காட்டி அத்தகைய அன்புவாழ்க்கை நடத்தும் பெற்றி தலைவனுக்கு அமையவில்லை என்று உணர்த்தினாள். "துள்ளும் நடை உடைய ஆண்குருவி (சூல்)கருப்பம் முதிர்ந்த பெண்குருவிக்கு முட்டை இடும் கூடு கட்டுவதற்காக இனிய கரும்பின் வெண்ணிறப் பூவைக் கொழுதிக் கொண்டு வந்து கடமையைச் செய்கின்றது; அதுவன்றோ அன்பான இல்வாழ்க்கை ?" என்றாள்.

யாரினும் இனியன் பேரன் பினனே
உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூல்முதிர் பேடைக்கு ஈனில் இழைஇயர்
தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாறா வெண்பூக் கொழூதும்
யாணர் ஊரன் பாணன் வாயே.*

*குறுந். 85. வடமன் தாமோதரன்.

குரீஇ - குருவி. சூல் - கருப்பம். ஈன்இல் - முட்டையிடும் கூடு. இழைஇயர் - இயற்ற. யாணர் - புதுவருவாய், வற்றாவளம்.

அறிவற்ற குருவி தன் துணை துன்பமுறாமல் வாழ்வதற்காக முயற்சி செய்வதும், அதற்கு உரிய கூடு கட்டும்போது முட்டை இடுவதற்கு உரிய இடம் மெத்தென்று அமைவதற்காகக் கரும்பின் மெல்லிய பூவைக் கொழுதிக் கொண்டுவருவதும் வியத்தற்குரிய செயல்களாகும். இவற்றை எடுத்துரைப்பதன் வாயிலாகத் தலைவனுடைய மாறான ஒழுக்கம் - துணைவியைப் புறக்கணித்து அவள் தனித்துத் துன்புறுமாறு செய்த தீமை - தோழியால் கடிந்துரைக்கப்பட்டது. இவ்வாறு நயமுற எடுத்துரைத்த தோழியின் பேச்சுத்திறன் பாராட்டிற்கு உரியதாகும்.

இத்தகைய திறன் வாய்ந்த தோழியுடன் பழகிய தலைவியும் பேச்சுத்திறன் மிக்கவளே. அவள் தலைவனிடமும் பிறரிடமும் கூறும் சொற்களிலும் அறிவின் ஆழமும் நயமும் பொதிந்து கிடக்கின்றன.

பரத்தையை விட்டுப் பிரிந்த தலைவன் தலைவியுடன் இருந்து மீண்டும் அன்பான இல்வாழ்க்கை நடத்திவந்தான். தான் அவளை விட்டுப் பிரிந்து செய்த குற்றத்தை அவள் அடியோடு மறந்துவிட்டு அன்புடன் தன்னைப் போற்றுவதாக எண்ணிவிட்டான். தலைவி அந்த அளவிற்கு அவனிடம் அன்பு காட்டியது உண்மைதான். ஆனால் அவன் இழைத்த குற்றத்தை அவள் மறக்கவில்லை. அத்தகைய குற்றத்தை அவன் மீண்டும் செய்யாதவாறு தடுத்துக் காக்க வேண்டும் என்று விழிப்புடன் இருந்தாள். அவளுடைய அன்பைப் பாராட்டத் தொடங்கிய தலைவன், "நாம் இருவரும் என்றும் இவ்வாறு வாழ்தல் வேண்டும்" என்றான். தலைவி அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு தக்க மறுமொழி கூறினாள். "இப்பிறப்பில் மட்டும் அன்று; இப்பிறப்பு

மாறி மறுபிறப்பு வரினும் நீயே என் கணவன் ஆதல் வேண்டும். யானே உன் நெஞ்சம் விரும்புபவள் ஆதல் வேண்டும்" என்றாள்.

இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியர்எம் கணவனை
யாஅ கியர்நின் நெஞ்சுநேர் பவளே.*

"மறுமையிலும் நீயே என் கணவனாதல் வேண்டும்" என்ற தலைவி, "யானே நின் மனைவியாதல் வேண்டும்" என்று சொல்லி யிருந்தால் அது தலைவன் நெஞ்சை உறுத்தி யிருக்காது. "இத்தகைய உனக்கு மனைவியாகப் பிறப்ப தால் பயனில்லை; மனைவியை விட்டுத் துறக்கவல்லவன் நீ; உனக்கு மனைவியாய் அமைவதை விடப் பரத்தைபோல் உன் உள்ளத்தைக் கவரும் ஒருத்தியாக அமைவதே மேல். ஆதலின் மறுமையில் உனக்கு மனைவியாகப் பிறப்பதில் பயனில்லை" என்னும் இத்தனைக் கருத்துக்களையும் ஒரே தொடரால் - நெஞ்சு நேர்பவள் என்ற ஒரே தொடரால் - உணர்த்திவிட்டாள் தலைவி. புறத்தொழுக்கம் மேற்கொண்டு தவறிழைத்த தலைவனை இதைவிடக் கடுமையாகக் கடிந் துரைக்க வழி இல்லை. ஆயினும் இந்தக் கடிந்துரை வரம் வேண்டுதல் போன்ற நயமான முறையில் இனிய சொற்க ளால் அமைந்ததுதான் சிறப்பாகும்.

*குறுந். 49. அம்மூவனார்.

காதல் தந்த ஆற்றல்

காதல் ஓர் உயர்ந்த பண்பாகும். வாழ்க்கையில் பல படிகள் உண்டு. ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் துணையாக நாடி வாழும் படிக்கு இன்றியமையாதது காதல். அந்த நிலையில் மனம் மிக வேகமாக வளர்ந்து பண்படும். அவ்வாறு காதலால் பண்பட்டு வளரும் மனத்தில் அஞ்சாமை மிகும். தன்னலம் குறையும். துன்பத்தைத் தாங்கும் ஆற்றல் பெருகும்.

காதலன் காதலி இருவரும் குழந்தைகளாக இருந்து, சிறுவர்களாக மாறி, இளைஞர்களாக வளர்ந்தவர்களே. கண் பார்வை நுழையாத இருள் சிறுவர்களின் உள்ளத்தில் அச்சத்தை வளர்ப்பது. இருளிலே தெளிவின்றிக் காணும் காட்சியும், கேட்கும் ஒலியும், அவர்களை நடுங்கச் செய்வன. பகலிலும் சில விலங்குகள் வேகமாகப் பாயும்போது சிறுவர்களின் உள்ளம் துணுக்குறும். சிறுவனைவிடச் சிறுமி மிகுதியாக அஞ்சுபவள். இவ்வாறு வளர்ந்த அச்சம் இளமைப் பருவத்துக் காதலியின் உள்ளத்தை விட்டு இன்னும் நீங்கவில்லை. ஆனால் அவள் உள்ளத்தில் காதல் வளர்ந்துவிட்டது. பகலிலே கண்டு பழகிய அந்தக் காதலன் இரவிலும் அவளை நாடிவரத் தொடங்கினான். எல்லோரும் உறங்கும் நள்ளிரவில் அவன் வேலிப்புறத்தே மெல்ல வந்து நிற்பது வழக்கம். சிலநாள் இவ்வாறு வந்து சென்ற காரணத்தால், 'இன்றும் வருவான்; இன்றும் வருவான்' என்று காதலியின் நெஞ்சம் நாள்தோறும் எதிர்பார்க்கத் தொடங்கியது. ஒருநாள் நள்ளிரவில் அவனை எதிர்பார்த்தவாறே காதலி நின்றிருந்-

தாள். இரவின் அமைதியிலே இருளின் சூழலிலே அவ்வாறு தனியே அஞ்சாமல் நிற்க, அவளால் அப்போது முடிந் தது. ஒரு சில திங்களுக்கு முன்னே இந்த அஞ்சாமை அவளிடம் இல்லை. மலைக்கோட்டான் கத்தும் குரலைக் கேட்பினும் அவளுடைய உள்ளம் நடுங்கும். வீட்டு முற்றத் தில் வளர்ந்துள்ள பலாமரத்தின் பெரிய கிளையில் குரங்கு பாய்ந்து துள்ளுவதைக் காணினும் அவள் நெஞ்சம் நடுங்கி அஞ்சும். சில திங்களுக்கு முன்னே இவ்வாறு அஞ்சி நடுங்கும் நெஞ்சம் பெற்றிருந்தவள், இன்று நள்ளிரவில் காதலனுடைய வரவை எதிர்நோக்கிச் செறிந்த இருளில் அவன் வரும் வழியை உற்றுப் பார்க்கும் அஞ்சாமை பெற்றாள். தான் பெற்ற அஞ்சாமையை நினைந்து அவளே வியப்புற்றாள்.

குன்றக் கூகை குழறினும் முன்றில்
பலவின் இருஞ்சினைக் கலைபாய்ந் துகளினும்
அஞ்சுமன் அளித்தென் நெஞ்சம் இனியே
ஆரிருட் கங்குல் அவர்வயின்
*சாரல் நீளிடைச் செலவா னாதே.**

நள்ளிரவில் தன்னந்தனியே இருண்ட மலை வழியே வரும் அந்த இளைஞனுடைய அஞ்சாமையைப் பற்றிக் கூற வேண்டுவதே இல்லை. இவ்வாறு இருவர் உள்ளத்திலும் அஞ்சாமையை வளர்த்த பெருமை காதலுக்கு உரியதாகும்.

பெற்றோர் திருமணத்திற்கு இசைவார்களோ மாட்டார் களோ என்ற அச்சத்தால் காதலி தன் காதலனுடன் வெளி

---

*குறுந். 153. கபிலர்.

கலை - ஆண்குரங்கு. உகளினும் - துள்ளினும். நீள் இடை - நீண்டவழி. செலவு - செல்லுதல். ஆனாது - ஓயாது, விடாது.

பூர்க்குச் சென்றுவிடத் துணிந்தாள். பெற்றோர் அறியாமலே ஒருநாள் அவனுடன் சென்றுவிட்டாள். அவள் சென்ற வழியோ வளம் குறைந்த மலைப்பகுதி; காலமோ வெயில் மிகுந்த வேனில். உணவும் நீரும் இல்லாமல் யானைகளும் வருந்தும் கொடிய வழி அது. மேகம் இடிக்கும் குரலைக் கேட்கும்போதெல்லாம் மழை பெய்யுமோ, வேட்கை தணிக்க நீர் கிடைக்குமோ என்று யானைகள் ஏங்கி இடியின் குரலை உற்றுக் கேட்குமாம். எளிதில் வாடாத மூங்கிலும் தோல் சுருங்கி உலர்ந்து போகும் அளவிற்கு அந்தக் கொடிய வழியில் வெப்பம் மிகுந்திருந்தது. அத்தகைய வழியில் மகள் சென்றாள் என்று உணர்ந்தவுடன் தாயின் மனம் மிக மிக வருந்தியது. அவள் செல்வ மகளாய் வீட்டில் வளர்ந்த நல்வளர்ச்சியை எண்ணினாள். தோழியுடன் கூடி முற்றத்திலும் மரநிழலிலும் விளையாடி மகிழ்ந்த அவளுடைய இளமைப் பருவத்தை எண்ணி எண்ணி உருகியது தாயின் நெஞ்சம். பால் உண்ண அழைத்தாலும் மறுத்து, பந்து எடுத்துச் செல்லவும் மறந்து தோழியருடன் மகிழ்ந்து பொழுது போக்கிய அருமை மகள் இன்று கொடிய பாலை வழியில் சென்றதை எண்ணித் துன்புற்றாள். இன்பமாக மகிழும் மகிழ்ச்சியைத் துறந்து நீரும் நிழலும் அற்ற வழியில் வருந்தும் துன்பத்தை வலிய ஏற்றுக்கொண்டாளே என்று எண்ணி உருகினாள்.

பாலும் உண்ணாள் பந்துஉடன் மேவாள்
விளையாடு ஆயமொடு அயர்வோள் இனியே
எளிதென உணர்ந்தனள் கொல்லோ முளிசினை
ஓமை குத்திய உயர்கோட்டு ஒருத்தல்
வேனிற் குன்றத்து வெவ்வரைக் கவாஅன்

மழைமுழங்கு கடுங்குரல் ஓர்க்கும்
*கழைதிரங்கு ஆரிடை அவனொடு செலவே.**

துன்பத்தை ஒதுக்கி இன்பத்தை நாடுவது மனத்தின் இயல்பு. இந்தக் காதலியோ, இன்பத்தைத் துறந்து துன்பத்தைத் தானே ஏற்றுக்கொள்ள முனைந்தாள். துன்பம் தாங்கும் ஆற்றல், துன்பத்தைத் தானே வரவேற்கும் ஆற்றல் அரிய தொன்றாகும். இத்தகைய அரிய மாறுதல் ஓர் இளம் பெண்ணின் உள்ளத்தே ஏற்படுமாறு செய்தது காதல்.

உண்ணும்போது ' இது நன்றாக இல்லை ; அது நன்றாக இல்லை ' என்று குறை கூறி உண்ணாமல் விடுவது சிறுவர்களின் இயல்பு. தாய் தன் மக்களின் வளர்ச்சியைக் கண்ணும் கருத்துமாகப் போற்றித் தன் உள்ளத்து ஊறும் அன்போடு கலந்து சமைத்து அளிக்கும் நல்ல உணவையும் குறை கூறி மறுக்கின்றனர் மக்கள். ஒருநாள் மறந்தோ சிறிது தவறியோ சுவைப் பொருள் ஒன்று மிகினும் குறையினும் அன்று பெருங்குறை கூறி உணவு ஒதுக்கப்படுகின்றது. இவ்வாறு உணவிலே சுவை வேறுபாடு கண்டு சிறு குறையையும் பெரிதாக உணர்ந்து வளரும் மக்களின் மனம், அடுத்த நிலையில் — இல்வாழ்க்கைத் தொடக்க நிலையில் — பெரியதொரு மாறுதலை அடைகின்றது. தாயின் சமையலில் குறைகாணும் மகன், காதலியின் கைப்பட்டதெல்லாம் சுவை மிகுந்ததாக உணர்கின்றான்.

---

* குறுந். 396. கயமனார்.

மேவான் - விரும்பான். ஆயம் - தோழியர் கூட்டம். அயர்வோள் - விளையாடுபவள். முளி - உலர்ந்த. ஒருத்தல் - ஆண்யானை. கவான் - மலையடி. ஓர்க்கும் - உற்றுக்கேட்கும். கழை - மூங்கில். திரங்கு - உலர்ந்து சுருங்கும். ஆரிடை - அரிய இடம்.

திருமணம் செய்து இல்வாழ்க்கை தொடங்கிய ஒரு குடும்பத்தில் மனைவி தயிர்க்குழம்பு சமைத்தாள். முற்றிய தயிரைத் தன் மெல்லிய விரலால் பிசைந்தாள். சேர்ப்பன சேர்த்துத் தாளிக்கத் தொடங்கினாள். குறித்த நேரத்தில் விரைந்து தாளிக்கத் தவறினால் நறுமணமும் சுவையும் குன்றுமாதலின் தயிர் பிசைந்த கையைக் கழுவாமலே நெகிழ்ந்த தன் ஆடையை உடுத்திக்கொண்டாள். உடனே தாளிக்கத் தொடங்கினாள். தாளிப்புப்புகை மேல் எழுந்து கண்ணில் பட்டது. புகைக்காகத் தயங்கிச் சிறிது பொறுத்தாலும் சுவைப் பயன் கெடும் என்று அஞ்சி, புகைக்கு இடையே உற்று நோக்கித் துழாவிச் சமைத்து முடித்தாள். இவ்வாறு சமைத்த இனிய புளிச்சுவை உடைய குழம்பைக் கணவனுக்கு இட்டபோது அவன் 'நன்றாயிருக்கின்றது' என்று பாராட்டியவாறே உண்டான். அந்தப் பாராட்டுதலைக் கேட்ட மனைவியின் முகம் மகிழ்ச்சி யுற்றது. அகத்தே நிறைந்த மகிழ்ச்சி புறத்தே நுட்பமாகப் புன்முறுவலாக விளங்கியது.

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.*

*குறுந் 167. கூடலூர்கிழார்.

முளி - முற்றிய. காந்தள் - காந்தள்மலர் போன்ற. கலிங்கம்- ஆடை. உடீஇ - உடுத்து. குய் - தாளிப்பு. துழந்து - துழாவி. அட்ட - சமைத்த. பாகர் - குழம்பு.

திருமணத்திற்குமுன் இந்த இளைஞனுக்குத் தன் விருப்பு வெறுப்பே முன்னேங்கி யிருந்தன. அதனால்தான் தாயின் அன்பு கலந்த உணவையும் மகிழ்ந்து போற்ற முடியாத மகனாக இருந்தான். தாயின் அன்புக்கும் இல்லாத ஆற்றல் காதலுக்கு அமைந்திருத்தல் வியப்பே ஆகும். தாயின் அன்பு ஏற்படுத்தமுடியாத பெருமாறுதலை ஒருத்தியின் காதல் அவன்உள்ளத்தில் ஏற்படுத்திவிட்டது. தன் விருப்பு வெறுப்பை முன்னேங்க விடாமல் தன் காதலியின் மகிழ்ச்சியையே பெரிதாகப் போற்றும் மனம் அமைந்துவிட்டது. ஆதலின் போற்றத் தக்க சுவை அமையாத உணவையும் 'இனிது' எனப் போற்றி உண்டான்.

விருப்பு வெறுப்பு முன்னேங்குவதற்குக் காரணம் உள்ளத்தே குடிகொள்ளும் தன்னலமே யாகும். காதல் குடி புகுந்தபின் அங்குத் தன்னலத்தின் ஆட்சி செல்வதில்லை. தன்னலத்தின் விளைவான தன் விருப்பு வெறுப்பு மேல்எழுதல் இல்லை. பிறர் விரும்புமாறு சொல்லுதலும் செய்தலுமே இயல்பாக அமைந்துவிடுகின்றன. அதனால் இனிமை குறைந்த உணவிலும் இனிமை கண்டு போற்றும் மனப்பான்மை வருகின்றது.

புதுவாழ்க்கை தொடங்கிய இந்த இளம் பெண் நேற்று வரையில் எவ்வாறு வாழ்ந்தாள்? தன் மெல்லிய விரல்கள் காந்தள் மலர்போல் விளங்குமாறு மாசுபடாமல் காத்து வந்தாள். தாய் வீட்டில் தயிர் பிசைந்தாலும் விரல்களின் அழகுக்குக் குறைவு என்று எண்ணும் மனம் இருந்தது. உடுத்திய ஆடை ஒழுங்கு கெடாதவாறு, மாசு படாதவாறு காக்கும் ஆர்வம் இருந்தது. அழகிய கண்களுக்கு மைதீட்டி அவை குவளைமலர் போல் விளங்குமாறு காக்கும் அழ

குணர்ச்சி இருந்தது. தன் அழகைக் காத்துக்கொள்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டு, அதை ஒரு கலையாக்கி நாள் தோறும் அழகுபடுத்திக்கொள்வதற்காகச் சில நாழிகை செலவிட்டு வாழ்ந்த இளம் பெண், இன்று புக்ககத்தில் எத்தகைய பெருமாறுதல் உற்றாள்! தன் அழகு என்ற தன்முனைப்பு அவள்உள்ளத்தை விட்டு அகன்று, கணவன் மகிழ வேண்டும் என்ற வேட்கையால் தியாக உணர்வு வளர்ந்துவிட்டது. ஆகவே மெல்லிய விரல்கள் 'முளிதயிர்' பிசைந்தன. தூய ஆடையைத் தயிர் பிசைந்த கைகள் உடுத்தின. தாளிப்புப் புகையில் மையுண்ட கண்கள் மூழ்கின. அன்று அவள் விரும்பியது தன் அழகு அன்று; கணவன் மகிழ்ச்சியே ஆகும். விரும்பியதைப் பெற்றாள் ; அவள்உள்ளம் நிறைந்தது. அந்த நிறைவால் முகத்தில் நுண்ணிய புன்முறுவல் பொலிந்தது.

அவன்உள்ளத்திலும் தன்னலத்திற்கு இடம் இல்லை ; அவள்உள்ளத்திலும் தன்னலம் நீங்கிவிட்டது. ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் போக்கிக்கொள்ளுதற்கு அரிய தன்னலம் எளிதில் போகுமாறு பெரு மாறுதல் செய்தது காதல்.

ஏமாற்றம்

இளமையின் கவர்ச்சி இருவர் காதல் கொள்வதற்குக் காரணமாக இருக்கிறது. சொல்திறம்பாக் கற்பு ஆண் பெண் இருசாரார்க்கும் இருப்பின் இத்தகைய காதலால் இடர்ப்பாடு இல்லை ; சில நாள் கழித்துத் திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்தி இனிது வாழ வழி உண்டு. இல்லையேல் காதலர் இருவரும் இடர்ப்பட்டுத் துன்புற நேரும். அங்ஙனம் நேரும்போது ஆண் எளிதில் தப்பித்துக் கொள்ள இயலும். சமுதாயமும் இயற்கையும் அவனுக்கு நலம் செய்வனவாக உள்ளன. பெண் அவ்வாறு தப்பித்துக் கொள்ள வழி இல்லை. சமுதாயமும் அவளைப் பழிவாங்குகின்றது ; இயற்கையும் அதைவிடக்கொடிதாய்ப் பழிவாங்குகின்றது. ஆதலின் ஆணைவிடப் பெண்ணே மிக விழிப்பாய் இருந்து தன்னைத் தான் காத்துக்கொள்ள வேண்டியவளாய் இருக்கின்றாள்.

ஆயினும் நம்பிக்கை என்ற ஒன்று குறுக்கே நின்று பெண்ணின் அறிவை மயக்குகின்றது. காதலனுடன் சில நாள் பழகி அவனுடைய நற்பண்புகளை உணர்ந்து வாழ்க்கைத் துணை என அவனை நம்புகின்றாள். அவனும் நல்லவனே. ஆயினும் பெற்றோர்க்கு அடங்கி ஒழுக வேண்டியவனாக, சமுதாயத்திற்குக் கட்டுப்பட்டு வாழவேண்டியவனாக உள்ள நிலையில் அவன் என்ன செய்வான் ?

மிக மிக உறுதியானவனாக இருந்தால் தவிர, சுற்றுப்புறத்தின் கட்டுப்பாட்டையும் பெற்றோரின் ஆட்சியையும் கடந்து அவன் உரிமையுடன் வெளிவரல் இயலாது. விரும்பிய

நாகரிகம் பெற்றிருந்தால் அல்லாமல் சுற்றுப்புறமும் பெற்றோரும் அவனுக்கு உரிமை கொடுத்து அவன் காதல் வாழுமாறு விடுதலும் இயலாது. இந்நிலையில் என்ன செய்வது என்று அறியாமல் திகைத்து இளைஞன் நாள் பல கழிக்க நேரும். இவ்வாறு கழிக்கப் பெறும் ஒவ்வொரு நாளும் இவனை நம்பிய காதலியின் உள்ளத்தில் துயரச் சுமையை மிகுத்துவரும். துயரம் மிக மிக அவள் அவனிடம் கொண்ட நம்பிக்கை சிறிது சிறிதாகத் தளர்ந்துவரும். அவள் உடலிலும் பழக்க வழக்கங்களிலும் நேர்ந்திடும் மாறுதல்கள் அவளுடைய பெற்றோர்உள்ளத்தில் ஐயப் பாட்டை எழுப்பும். அதுவும் துயரத்தைப் பெருக்குவதற்குக் காரணமாகும். நம்பிக்கை தளரத் தளர, " ஒருகால் அவன் கைவிடின் – சொல்திறம்பின் – என்ன செய்வது? எதிர்கால வாழ்வு என்ன ஆவது? நடந்ததைப் பெற்றோர்க்கு எவ்வாறு உணர்த்துவது? இனி உயிர் வாழ்தல் இயலுமோ?" என்றெல்லாம் பற்பல எண்ணங்கள் எழுந்து அவளை அலைக்கும்.

அவ்வாறு வருந்திய காதலியின் நெஞ்சத் துயரினைக் கபிலரும் வெள்ளிவீதியாரும் பாடியுள்ளனர்.

"நிகழ்ந்ததற்குச் சான்று கூற வல்லவர் யாரும் இல்லை. அவனே ஒருவரும் அறியாமல் காதல் கொண்டு பழகிச் சொன்ன சொல் தவறிய கள்வனாக உள்ளான். சொன்னவாறு திருமணம் செய்துகொள்ளாமல் தவறிக் கைவிடுவானாயின் யான் என்ன செய்வேன்? தினைத்தாள் போன்ற சிறு பசுங் கால்களை உடைய நாரை அவனுடன் உறவு கொண்ட அப்போது அங்கே இருந்தது. ஓடும் நீரிலே ஆரல்மீனை

நாடிப் பார்த்திருந்த அந்தக் குருகுதான் உறவுக்குச் சான்றாக உள்ளது '' என்று காதலி வருந்தினாள்.

யாரும் இல்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே.*

வெள்ளிவீதியார் பாடிய ஒரு பாட்டிலும் காதலி இவ்வாறே வருந்தினாள். அவள் காதலனுடன் உறவு கொண்டபோது அங்கு இருந்தது ஒரு குரங்கு. அந்தக் குரங்கை நினைந்து வருந்தியது அவள் உள்ளம். "தகுதியற்றவன் போல அவன் நம்மைக் கைவிடினும், நம்வாழ்வுக்குத் தீமையான பொய்ம்மொழியே கூறினும், அன்று அங்கிருந்த ஓர் உயிர் தன் கண்ணால் கண்டதை மறைத்துப் பொய்க்காது அன்றோ? மலையில் விளையாடும் வலிய குட்டியின் தந்தையான அந்த ஆண் குரங்கு, நம்முடன் உறவுகொண்ட அந்தக் கொடியோனை அறியும் '' என்று வருந்தினாள்.

.........நாடன்
தகாஅன் போலத் தான்தீது மொழியினும்
தன்கண் கண்டது பொய்க்குவ தன்றே...
வரையாடு வன்பறழ்த் தந்தைக்
கடுவனும் அறியும்அக் கொடியோ னையே.†

---

*குறுந். 25.

ஒழுகும் - ஓடும். ஆரல் - ஒருவகை மீன். குருகு - நாரை. மணந்த - கூடிய.

†குறுந். 26.

பறழ் - குட்டி. கடுவன் - ஆண் குரங்கு.

மெலிந்த உள்ளம் எதையும் சார்பாகப் பற்றிக்கொள்ளும். நீந்தத் தெரியாதவன் நீரில் விழுந்தால் துரும்பையும் பற்றிக்கொள்ள முனைவான். அது துரும்பு என்று ஆய்ந்தறியும் வல்லமை அப்போது அவனுக்கு இருப்பதில்லை. மெலிந்த தலைவியின் உள்ளம் நாரையையும் குரங்கையும் சான்றாகத் தேடியது அதுபோன்றதுதான். நாரையும் குரங்கும் சான்று கூற முடியாதவை. அவைகளும் தத்தம் வாழ்வுக்குரிய கடமையில் ஈடுபட்டிருந்தனவே அல்லாமல் இந்த இளைஞர் இருவர் கொண்ட காதல்உறவை நோக்கி உணரவில்லை. குரங்கு மலையில் ஆடிக்கொண்டிருந்தது ; நாரை ஓடும் நீரில் ஆரல்மீனைப் பார்த்துக்கொண்டிருந்தது. இவைகள் சான்றாக வல்லனவோ ? காதல் நெஞ்சத்தின் ஏமாற்றமே இங்குப் புலனாகின்றது.

பாலையிலும் அன்பு

பாலைநிலத்தைக் கொடிய வெப்பமும் வறட்சியும் உடையதாகக் காட்டுதல் புலவர் மரபு. மரங்கள் எல்லாம் தீய்ந்து நிழல் அற்று நிற்பனவாகவும், சுனைகள் எல்லாம் நீர் அற்றுக் கொதிப்பனவாகவும், உயிர்கள் எல்லாம் பசித்து வாடுவனவாகவும் பாடுவர். தீய்ந்த மராமரத்தில் உயர்ந்த ஒருகிளையில் ஒரே ஒரு பூங் கொத்து இருந்ததாம். அதில் தேன் இருக்கும் என்று ஊதச்சென்றதாம் ஒரு தும்பி. ஆனால் நுகர்வதற்கு அதனுள் தேன் இல்லை ; வெப்பமே மிகுந்திருந்தது. தேன் உண்ணாமல் வெப்பம் தாங்க முடியாமல் அது திரும்பி வந்துவிட்டதாம். காவன்முல்லைப் பூதனார் என்ற புலவர் பாலையின் கொடுமையைப் பாடியுள்ளார்.

தீய்ந்த மராஅத் தோங்கல் வெஞ்சினை
வேனில் ஓரிணர் தேனோ டூதி
ஆராது பெயருந் தும்பி
நீரில் வைப்பில் சுரன்................*

மலர்ந்த மலர்களில் இசை பாடித் தினையளவு தேனை நுகர்ந்து இன்புறும் தும்பிக்கும் வாழ்வு இல்லாத கொடுமை மிகுந்த பாலை நிலத்தில் ஆணும் பெண்ணு

---

* குறுந். 211. காவன் முல்லைப்பூதனார்.

இணர் - பூங்கொத்து. ஆராது - உண்ணாமல். வைப்பு - இடங்கள். சுரன் - பாலைநிலம்.

மாக வாழும் உயிர்கள் அன்பான வாழ்க்கை நடத்துவ தாகப் பாடுவதில் புலவருக்குத் தனி ஆர்வம் உண்டு. கணவனும் மனைவியுமாகக் காதலர் நடத்தும் இல் வாழ்க்கை அன்பால் சிறந்து விளங்கவேண்டும் என்று புலவர்கள் கொண்ட ஆசையே அவர்கள் இவ்வாறு பாடுவதற்குக் காரணமாகும். வளமிழந்து வறட்சியும் வெப்பமும் மிக்க பாலைநிலத்திலும் அறிவற்ற உயிர்கள் இன்பமாகக் கூடி வாழும் போது, வளமான குடும்ப வாழ்க்கை நடத்தும் இருவர் - அறிவுடை இருவர் - அன் பால் ஒன்றுபட்டு உயர்தல் ஆகாதா என்று அறிவுறுத்தும் கருத்தே இப்பாடல்களில் அமைந்துள்ளது. புறத்தே உள்ள வறட்சிக்கிடையே அகத்தே ஈரம்; புறவெப்பத்திற்கிடையே நெஞ்சத்தின் தண்மை; சுற்றுப்புறக் கொடுமைக்கு இடையே சிந்தையின் இனிமை; இவ்வாறு படம் பிடித்துக் காட்டி யுள்ளனர் புலவர்கள்.

பாலைக்காடு, கள்ளி மரங்கள் மிகுந்தது. ஆறலைகள்வர் கள் ஆங்காங்கே மறைந்திருந்து வழிப்போக்கரைக் கொல்ல முயல்வர். இரும்புமுனை உடைய அம்புகளைத் தீட்டிக் கூர்மைப் படுத்திக்கொண்டிருப்பர்; நகத்தின் முனையில் அந்த அம்புகளைப் புரட்டிப்பார்ப்பர். அந்த ஓசை ஒருவகை யானது. அது போலவே கேட்கும் மற்றோர் ஓசையும் அந்தப் பாலைக்காட்டில் உண்டு. அது கள்ளி மரங்களில் உள்ள பல்லியின் ஓசையாகும். பல்லி தன் துணையை அன்போடு அழைக்கும்போது அத்தகைய ஒலி எழுப்பும்.

> பொன்புனை பகழி செப்பம் கொண்மார்
> உகிர்நுதி புரட்டும் ஓசை போலச்

செங்கால் பல்லி தன் துணை பயிரும்
அங்கால் கள்ளியங் காடு........*

பாலைபாடிய பெருங்கடுங்கோ பாடிய இப்பாட்டில் ஒருபுறம் ஆறலைகள்வரின் கொடுமை கலந்த ஓசை கேட்கின்றது. மற்றொரு புறம் பல்லியின் காதல் கலந்த ஓசை கேட்கின்றது. கொடுமைக்கு இடையே கொடிய பாலைநிலத்தில் அன்பு வாழும்போது, அன்புக்கு இடையே பண்பாடு அமைந்த குடும்பத்தில் காதல் வாழ்தல் கூடாதா என்று புலவர்நெஞ்சம் அவாவுகின்றது.

அவர் பாடிய இன்னொரு பாட்டில் மற்றோர் அரிய காட்சி அன்பின் சிறப்பை விளக்கி நிற்கிறது. கொடிய பாலையில் உணவும் கிடைக்காமல் யானைக் குடும்பம் ஒன்று வாடி வருந்துகின்றது. பெண்யானையின் பசியைக் களை வதற்காக ஆண்யானை முயல்கின்றது. தழைஉணவோ மூங்கிலோ எங்கும் கிடைக்காமையால், யாமரத்தின் மெல்லிய கிளையை ஒடித்து அதன் பட்டையை உரித்துத் தன் துணை தின்னுமாறு தருகின்றது.

பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழி அவர்சென்ற ஆறே.†

---

*குறுந். 16. பாலைபாடிய பெருங்கடுங்கோ.

பொன் - இரும்பு. பகழி - அம்பு. கொண்மார் - கொள்வதற்காக. உகிர் - நகம். பயிரும் - அழைக்கும். கால் - அடி.

†குறுந். 37. பாலைபாடிய பெருங்கடுங்கோ.
களைஇய - போக்க. பொளிக்கும் - உரிக்கும்.

புறத்தே வளம்குன்றினும் அகத்தே அன்பு குன்றாமல் கிடைத்ததைக் கொண்டு மகிழ்ந்து வாழ வேண்டும் என்று புலவர் கொண்ட ஆர்வம் இப்பாட்டால் விளங்குகின்றது.

பேரிசாத்தன் என்னும் புலவரின் பாட்டில் ஒரு குரங்குக் குடும்பம் வாழும் அன்புவாழ்க்கை விளக்கப் படுகிறது. உயர்ந்தோங்கிய ஒரு மரத்தில் இனிய கனிகள் பல கனிந்து கிடந்தன. குட்டியை உடைய குரங்கு மரத்தின் மேல் ஏற இயலாமல் கீழே கிடந்து மரத்தில் தொங்கிய கனிகளைப் பார்த்து ஏங்கியது. அதன் வேட்கையை உணர்ந்த ஆண் குரங்கு உடனே மரம் ஏறிக் கனிகளை உதிர்க்கத் தொடங்கியது. கீழே இருந்த பெண் குரங்கு தன் துணை உதிர்த்த கனிகளில் தக்கவற்றைத் தேர்ந்தெடுத்து உண்டது.

.........கடுவன்
ஊழுறு தீங்கனி உதிர்ப்பக் கீழிருந்து
ஏற்பன ஏற்பன உண்ணும்
*பார்ப்புடை மந்திய மலையிறந் தோரே.**

புலவர்கள் கூறும் நிகழ்ச்சிகளில் பல உண்மையாக இருத்தல் கூடும். ஒருசில புனைந்துரையாகவும் இருத்தல் கூடும். உள்ளதை உள்ளவாறு கூறுதல் மட்டும் புலவர்தொழில் அன்று. உள்ளதை உணர்ந்தவாறு உரைப்பதும் அவர் தொழிலாகும். உள்ளதை உள்ளவாறு கூறாமல் உள்ளம் விரும்புமாறு உயர்த்திக் கூறுவதும் அவர் இயல்பு ஆகும்.

---

*குறுந். 278. பேரிசாத்தன்.

கடுவன் - ஆண்குரங்கு. ஊழுறு - முறையாக முற்றிய. பார்ப்பு - குட்டி.

குறுந். 5

ஆதலின் மான் குரங்கு முதலிய விலங்குகள் உணராத உணர்ச்சிகளை எல்லாம் அவைகள் உணர்வன போலக் கற்பனை செய்து கூறுவதும் உண்டு.

பசுமையற்ற பாலைநிலத்தில் மான்களுக்கும் உணவு இல்லை. வெப்பத்தை நெடுநாள் தாங்கி வாழ வல்ல மரங்கள் தவிர மற்றவை எல்லாம் அழிந்தன. அந்த மரங்களிலும் கிளைகளில் பசுமை இல்லை. அடிமரப் பட்டையிலும் வேரிலுமே ஈரம் இருந்தது. வேறு உணவு அற்று வருந்திய ஆண் மான் அந்தப் பட்டையைத் தானும் தின்று தன் துணையும் தின்னச் செய்து உயிர் வாழ விரும்பியது. தன் காலால் உதைத்துப் பெரிய மரப்பட்டைகளை வளைத்து எடுத்துத் தன் துணை தின்னக் கொடுத்தது. அது தின்று மிகுந்ததைத் தானும் தின்றது. வெய்யில் வெப்பம் தாங்க முடியாமல் வாடி வருந்திய தன் குட்டிக்கு நிழல் இல்லாமை கண்டு வெயில் எரிக்கும் பக்கத்தில் தான் நின்று தன்நிழலைக் குட்டிக்குத் தந்தது.

கவைத்தலை முதுகலை காலின் ஒற்றிப்
பசிப்பிணிக்கு இறைஞ்சிய பருஉப்பெருந் ததரல்
ஒழியின் உண்டு வழுவில் நெஞ்சில்
தெறித்துநடை மரபின்தன் மறிக்குநிழல் ஆகி
நின்றுவெயிற் கழிக்கும் என்பநம்
இன்துயில் முனிநர் சென்ற ஆறே.*

---

* குறுந். 213. கச்சிப்பேட்டுக் காஞ்சிக்கொற்றன்.

கவை - இரண்டாகப் பிரிந்த. கலை - ஆண்மான். ஒற்றி - உதைத்து. இறைஞ்சிய-வளைத்த. ததரல்-மரப்பட்டை. தெறித்து-துள்ளி. மறி - குட்டி. முனிநர் - வெறுத்துப் பிரிந்தவர்.

மானுக்கு இத்தகைய அறிவு இல்லாதிருக்கலாம்; மற்ற உயிரின் துன்பம் உணராதிருக்கும் ஆற்றல் இல்லாதிருக்கலாம்; ஆனால் மக்கள் இவ்வாறு அன்புடைய காதலராய்த் துன்பம் தீர்க்கும் ஆற்றல் உடையவராய் வாழ்தல் வேண்டும் என்று விழைந்த புலவரின் மனத்தில் எழுந்த கற்பனை இது. இந்தக் கற்பனைமான், அன்பான வாழ்க்கை பற்றி மக்களுக்கும் அறிவூட்ட வல்லதாக விளங்குகின்றது.

துன்பத்திற்குத் துணை

'துன்பத்துள் துன்பம் உறுதல்' இல்லாத சான்றோர் சிலர் உள்ளனர். அவர்கள் மட்டுமே துன்பம் வரும்போது தனித்திருந்து அதைத் தாங்கவும் வல்லவர். ஏனையோர்க்குத் துன்பம் வரும்போது தனிமைநிலையே கொடுமையாகத் தோன்றும். இன்பம் வரும்போது துணை வாய்த்தால் அந்த இன்பம் இருமடங்கு ஆகும் என்றும், துன்பம் வரும்போது துணை வாய்த்தால் அந்தத் துன்பம் பாதியாய்க் குறையும் என்றும் அநுபவம் மிக்கவர் கூறுவர். ஆதலின் மக்கள் பெரும்பாலோர் துன்பம் நேரும்போது அதைப் பங்கிட்டுக் கொள்ள நெருங்கிப் பழகிய நண்பர் முதலியோரிடம் செல்வர். தக்க நட்போ துணையோ வாய்க்காத போதுதான் ஒரு சிலர் தற்கொலை செய்துகொள்ளவும் முனைகின்றனர். இந்தப் பரந்த உலகத்தில் நமக்காக இரக்கம் கொள்வோர் இன்னின்னார் உள்ளனர் என்று ஒரு சிலரையேனும் நம்பும் பேறு பெற்றவர் தற்கொலைக்கு என்றும் துணியார். ஆதலின் வாழ்க்கையில் துணையும் நட்பும் இன்றியமையாதன ஆகின்றன.

போர்க்களத்தில் சாகும் ஒருவன் தனக்காக வருந்தும் ஒரு முகத்தையேனும் காண விழைகின்றான். தொலை நாட்டில் சென்று வாழ்க்கை நடத்துவோன் தன் உற்றார் பெற்றாரிடம் பழகியவர்களையேனும் கண்டு பேச விழைகின்றான். மருத்துவ நிலையத்தில் நோயுற்று வருந்தும் ஒருவன் தன் அன்பிற்கு உரியவர்களை அடிக்கடி காண விழைகின்றான்.

இவர்களுக்கு உள்ள வாய்ப்பும், காதல் நோயுற்றுத் தனித்து வருந்துகின்றவர்க்கு இல்லை. காதலனுடைய அன்பு ஒன்று தான் காதலியின் நோய்க்கு மருந்தாக இருக்கின்றது. இந்த அவல நிலையை வேறு எவரிடமும் எடுத்துரைக்க முடியாத வள் காதலி. நெருங்கிப் பழகும் உயிர்த் தோழி ஒருத்தியே அவளுடைய காதல் வாழ்க்கையை அறிந்தவள். காதல் தனி வகையானது. உயிர்த் தோழியிடமும் முற்றும் சொல்ல இயலாதது. உள்ளம் திறந்து எவரிடமும் உரையாட இடந் தராதது. அதனால்தான் மற்றத் துன்பங்களைவிடக் காதலரின் பிரிவாற்றுத் துன்பம் தாங்கொணததாக வளர் கின்றது.

காதலி ஒருத்தி தன் உள்ளத் துயரை ஒருவாறு தோழி யிடம் தெரிவித்தாள். இவ்வாறு தெரிவிக்கும் வாய்ப்பு, பகலில் மட்டும் கிடைத்தது. இரவில் வழக்கம்போல் தோழி உறங்கிவிட்டாள். துயர் குடிகொண்ட நெஞ்சின ளாகிய காதலிக்கோ உறக்கம் வரவில்லை. பகலில் ஒரு சிறி தேனும் தோழியிடம் சொல்லி ஆறுதல் பெற்றவள் இரவில் தனித்திருந்து துயருற நேர்ந்தது.

"இருள் செறிந்த நள்ளிரவு ஆயிற்று. மக்கள் எல்லோ ரும் பேச்சு அடங்கி அமைதியுற்று இனிது உறங்கினர். பரந்த இந்த உலகமும் கவலையில்லாமல் உறங்குகின்றது. உறங்காதவள் யான் ஒருத்திதான்" என்று நெஞ்சம் நெக் குருகினள்.

நள்ளென் றன்றே யாமம் சொல்அவிந்து
இனிதடங் கினரே மாக்கள் முனிவின்று

நனந்தலை உலகமும் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே.*

நள்ளிரவு இருள் செறிந்து அமைதியாய்க் கிடப்பதும் காதலிக்குத் துன்பம் தந்தது. செறிந்த இருள், விழித்திருந்த அவள்கண்ணிற்கும் தொழில் தராமல் செய்துவிட்டது. உலகம் தன்னை நாடி வராதபோதும் தானே உலகத்தை நாடி உறவு கொள்வதற்குக் கண்ணும் செவியும் பயன்படுவன. கண்ணின் வாயிலாக மண்ணையும் விண்ணையும் ஆங்காங்கு உள்ள பொருள்களையும் கண்டேனும் காதலியின் நெஞ்சம் உறவாடலாம். அதற்கும் இடம் இல்லாதவாறு இருண்ட நள்ளிரவு செய்துவிட்டது. அதனால்தான் 'நள்ளென் றன்றே யாமம்' என்று வருந்தினாள்.

முன்னிரவில் மக்கள் சிலர் ஆங்காங்கே திண்ணையிலும் தெருவிலும் கூடிப் பேசிக்கொண்டிருந்தனர். விழித்திருந்த காதலியின் செவியில் அந்தப் பேச்சொலி விழுந்தது. அந்த மக்கள் அவளைப் பற்றிப் பேசவில்லை. அவர்களுக்கு அவளிடம் இரக்கமும் இல்லை. அவர்கள் என்னென்ன பேசினார்கள் என்பதும் அவளுடைய செவியில் தெளிவாகக் கேட்கவில்லை. என்னென்னவோ பேசினார்கள். பேச்சின் ஒலி மட்டும் அவளுக்குக் கேட்டது. அதுவே ஒருவகையில் அவளுக்கு ஆறுதலாக இருந்தது. "இந்த ஊரில் நம்மைப் போன்ற மக்கள் இருக்கின்றனர்; நம்மைப் போல் அவர்களும் விழித்திருக்கின்றனர்" என்று ஆறுதல் பெறுவதற்கு

---

*குறுந். 6. பதுமனார்.

நள்ளென்றன்று - நள்ளென்றது-இருள் செறிந்தது. முனிவு இன்று - வெறுப்பு இன்றி.

அந்தப் பேச்சொலி துணை செய்தது. இத்தகைய ஆறுதலால் அவளுடைய உள்ளத்துயர் ஓர் அளவில் கட்டுண்டு நின்றது. பேசிக்கொண்டிருந்த மக்கள் சிறிது நேரத்தில் ஒவ்வொருவ ராகப் பேச்சை நிறுத்தி உறங்கச் சென்றனர். அந்த ஒலியும் அடங்கிற்று. தனிமைத் துயரம் தலையெடுத்தது. பேச்சொலி கேட்டபோது பலர் வாழும் ஊரில் பலரிடையே தானும் இருப்பதாக உணர்ந்த உணர்ச்சி இப்போது இல்லாமல் போயிற்று. அதனால், "சொல் அவிந்து இனிது அடங்கினரே மாக்கள்" என்று வருந்தினாள். அவர்கள் அடங்கிப் படுத் திருப்பதில் இனிது - இன்பம் - விளங்க, தன் அடக்கத்தில் துன்பம் பெருகுவதை உணர்ந்து வருந்தினாள். ஆதலின் பொறுமையுடன் 'இனிது அடங்கினரே' என்றாள்.

இவ்வாறு பேச்சின் ஒலி அடங்கிய பிறகு அவளுடைய கண்களும் செவிகளும் ஊரைக் கடந்து அப்பால் நாடத் தொடங்கின. காணத்தக்க ஒளி எங்கும் இல்லாதது போலவே கேட்கும் ஒலியும் எங்கிருந்தும் எட்டவில்லை. ஊர் மட்டும் அல்லாமல் பரந்த பெரிய உலகம் முழுவதும் உறங்கு வதுபோல் தோன்றியது. உலகத்தில் ஒருத்தியாகப் பிறந்த தன்னைப் பற்றி ஒரு சிறிதும் கவலையின்றி, வெறுப்பு இன்றி உலகம் அமைதியாய்க் கிடக்கும் நிலை அவள் துயரத்தைப் பெருக்கியது. வீட்டிற்கு (வெளியார்) ஒருவர் விருந்தின ராக வந்தபோது வீட்டார் எல்லோரும் அவர்க்கு உதவி செய்வதைக் கடமையாகக் கொள்வதைக் கண்டவள் அவள். பரந்த உலகம் தன்னோடு தொடர்பு கொண்டதாக இருந்தும் தன்னைப் புறக்கணித்துத் துஞ்சுகின்றதே என்று நொந்தாள். "முனிவின்று நனந்தலை உலகமும் துஞ்சும்" என்றாள். மிகப் பெரிதாகிய உலகத்தில் பலர்க்கிடையே

பிறந்தும் தன்னந்தனியே ஒரு சிறு தீவில் வாழ்பவள்போல் உணர்ந்து "ஓர் யான் மன்ற துஞ்சாதேனே" என்று ஆற்றாமை யுற்றாள்.

காதலியின் கண்கள் மடை திறந்தாற்போல் கண்ணீர் சொரிந்தன. தனிமைத் துயரம் தாங்கமுடியாத தாயிற்று. ஊதைக்காற்று சில்லென்று வீசியது. மழைத் துளியும் அந்தக் காற்றுடன் கலந்து வந்தது. ஒரு குரல் கேட்டது. அது மக்களின் குரலாக இருந்தாலும் அவளுக்கு ஒருவகை ஆறுதலாக இருந்திருக்கும். அது மக்கள் குரலன்று; மணியின் குரல். அந்த மணியும் மக்கள் கையால் அசைக்கப்பட்டு ஒலிக்கவில்லை. ஆதலின் அவ்வகையிலும் ஆறுதலுக்கு இடம் இல்லை. அது மாட்டின் கழுத்தில் கட்டி யிருந்த மணியின் குரல். அந்த மாடும் மகிழ்ச்சியுடன் விரும்பி அந்த மணியை அசைக்கவில்லை. அதன் அமைதியான உறக்கத்தைக் கெடுத்த ஈயின்மேல் வெறுப்புக் கொண்டு தலையை ஆட்டிய தால் அந்த மணி ஒலித்தது. அவ்வாறு ஒலித்த மணி ஓசையும் மெல்லியதாய் வரவரக் குறைந்து அமைதியுற்றது. அவளுடைய உள்ளத்தின் துயரம் ஏதேனும் ஓசையால் சிறிது தணியக்கூடும் என்று எதிர்பார்த்ததற்கு மாருக மெல்ல ஒலித்து அடங்கிய மணியின் குரலால் மேலும் பெருகி விட்டது. "கண்ணீர் சொரிந்து தாங்கமுடியாத் துயரத் தால் வருந்தி யான் கேட்கும் இந்த ஒற்றை மணிக் குரலை என்போல் கேட்பவர் பிறர் உளரோ" என்று அலமந்தாள்.

சிறைபனி யுடைந்த சேயரி மழைக்கண்
பொறையரு நோயொடு புலம்பலைக் கலங்கிப்
பிறரும் கேட்குநர் உளர்கொல் உறைசிறந்து
ஊதை தூற்றும் கூதிர் யாமத்து

ஆனுளம்பு உலம்புதொறு உளம்பு
நாநவில் கொடுமணி நல்கூர் குரலே.*

நள்ளிரவில் உறக்கம் வராமல் விழித்திருக்கும் நோயாளி, பக்கத்தே அமைதியாக உறங்குபவரைக் கண்டு பொறாமைப்படுதல் இயற்கை. தன்னைப் பற்றி அவர்கள் சிறிதும் கவலைப்படவில்லை என்று வெறுப்பும் கொள்வாள். ஏதேனும் காரணத்தால் அவர்கள் திடுக்கிட்டு எழ நேர்ந்தால் அதைக் கண்டு மகிழ்ச்சியும் அடைவாள். அவ்வாறு எழக் காரணமில்லாமல் அவர்கள் அமைதியாக நெடுநேரம் உறங்கிக் கிடந்தால் ஒரு காரணம் உண்டாக்கி அவர்களை எழுப்பி விடுவோமா என்று அவளுடைய உள்ளம் தூண்டும். தொடர்ந்து பல நாட்களாக உறக்கம் இன்றி விழித்து வருந்துவோர்க்கு இத்தகைய எண்ணமும் ஏற்படுதல் இயற்கை.

காதலியின் நெஞ்சம் இவ்வகை எண்ணத்திற்கு இடம் கொடுத்தது. தென்றல்காற்று வந்து வீசுவதும் அதனுடைய அமைதியற்ற தன்மையைக் காட்டுவதாக அவளுக்குத் தோன்றியது. அமைதியற்றுச் சுழலும் அந்தக் காற்று, தன் அமைதியையும் கெடுத்து வருத்துவதாக உணர்ந்தாள். இந்த நிலையில் தன் துயரத்தைச் சிறிதும் அறியாமல் ஊரார் உறங்குவதை அவளால் பொறுக்க முடியவில்லை. "உடல் கொண்டு மோதி முட்டுவேனு, அல்லது ஏதேனும் கருவி

*குறுந். 86. வெண்கொற்றன்.

சிறைபனி - தடுக்கப்பட்ட நீர். சேயரி-செவ்வரிகள். உறை-மழைத்துளி. ஊதை - வாடைக்காற்று. ஆன் - மாடு. நுளம்பு-ஈ. உலம்புதொறு - ஒலிக்குந்தோறும். உளம்பும் - அசைக்கின்ற. நல்கூர் - மெலிந்த.

கொண்டு தாக்குவேனே? என்ன செய்வது என்று எனக்குத் தெரியவில்லை. ஏதேனும் ஒரு பொய்க் காரணத்தை மேற் கொண்டு 'பாம்பு பாம்பு' என்றோ, 'நெருப்பு நெருப்பு' என்றோ, 'ஆ' 'ஓ' என்றோ கூவுவேனே? என்ன செய்து இந்த ஊராரை எழுப்புவேன்?" என்று கலங்கினாள்.

முட்டு வேன்கொல் தாக்கு வேன்கொல்
ஓரேன் யானுமோர் பெற்றி மேலிட்டு
ஆஅ ஒல்எனக் கூவு வேன்கொல்
அலமரல் அசைவளி அலைப்பஎன்
உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே.*

கடற்கரையில் உள்ள ஊரில் வாழும் காதலி ஒருத்தி நள்ளிரவில் இவ்வாறு தனித்துத் துயர் உற்றாள். ஆனால் அவள்நிலை இவ்வளவு வருந்தத் தக்கதாக இல்லை. உலக மெல்லாம் அடங்கி அமைதியுற்ற போதிலும் ஓயாமல் ஒலித் துக்கொண்டிருக்கும் ஒன்று அவளுக்குப் பெருந்துணையாக இருந்தது. அலை மோதுகின்ற கடல் நள்ளிரவிலும் அமைதி யாக இல்லை. உறங்காமல் விழித்துத் துயர் உற்ற காதலியின் செவியில் அந்தக் கடலின் ஒலி 'ஓ' என்று அழுது புலம்பும் துயரக் குரலாகக் கேட்டது. உள்ளம் நொந்து வருந்தும் ஒருத்திக்கு மற்றொருத்தியும் அவ்வாறு வருந்திப் புலம்பும் நிலையைக் கண்டால் துயரம் சிறிது குறையும். இருவர் துயரமும் கூடி இருமடங்கு ஆதல் இல்லை. துயரம் உடை யார் இருவர் கூடும்போது ஒரு பங்கு குறைதலே இயல்பு. கடலின் துயரக் குரல் என்று கற்பனை செய்யப்பட்ட

*குறுந். 28. ஔவையார்.

பெற்றி - காரணம். அலமரல் - சுழலுதல். உயவு - துன்பம்.

ஒலியைக் கேட்ட காதலி தன் துயரைச் சிறிதளவு மறந்து அதன் துன்பத்திற்காக இரங்குதலுற்றாள். பிறர் துயரை நினைத்தாலே நினைப்பவரின் துயர் ஓரளவு குறையும் அன்றோ? அவ்வகையில் காதலியின் கற்பனையும் அவளுக்கு நன்மை ஆயிற்று. கடலை நோக்கி விளித்தாள்: "ஏ, கடலே, நீ யாரால் இந்த வருத்தம் உற்றாய்? நள்ளிரவிலும் நின் குரல் கேட்கின்றதே" என்றாள்.

யார்அணங் குற்றனை கடலே........
நள்என் கங்குலும் கேட்கும் நின்குரலே.*

---

*குறுந். 163. அம்மூவனார்.

அணங்கு - வருத்தம்.

குடும்பப் பண்பாடு

சொல்லித் திருத்துதல் அரிது. பெரும்பாலும் அது பயன் தருதல் இல்லை. வாழ்ந்து காட்டுதல் பலரைப் பண் படுத்துகிறது. சிறுவராயினும், இளைஞராயினும், ஏனையோ ராயினும் குறையுடையோரைத் திருத்துவதற்குத் தக்கவழி அவர்களின் உள்ளம் கவருமாறு நல்ல நெறியில் வாழ்ந்து காட்டுதலே யாகும். சொல்லித் திருத்தும் முயற்சி பெரும் பாலும் பயன்படாமல் போவதற்கு வீடுகளும் பள்ளிகளும் அறநிலையங்களும் அரசியல் அமைப்புகளும் சான்றுகளாக உள்ளன. 'இது செய்யற்க', 'அது செய்யற்க' என்று சிறுவர்க்கு அடிக்கடி அறிவுறுத்தல் தவறு என்பது உள நூலார் கொள்கை. 'இது குற்றம்; அது தவறு' என்று இளைஞர்க்கு வற்புறுத்திக் கூறின் அவர்கள் எதிர்பார்த்த தற்கு மாறாகத் தீய வழியிலேயே ஆர்வம் கொண்டு நடக்கத் தொடங்குகின்றனர். 'இது பாவமானது' 'இது நரகத்துக்கு ஏது' என்று பன்முறை கேட்டிருந்தும், கள், காமம், பொய் முதலிய தீமைகளை விட்டொழிப்பவர் ஒருசிலராகவே உள்ள னர். கள்ள வாணிபம், பொதுநல இடையூறு முதலிய வற்றை வெறுஞ் சொற்பொழிவுகள் வாயிலாகக் கடிந் துரைத்தும், அரசியல் தலைவர்கள் எடுத்தெடுத்துரைத்தும், மக்களின் வாழ்வில் முன்னேற்றம் காணப்படவில்லை. சட்டங்களின் வாயிலாக வற்புறுத்தும் துறைகளிலும் கடுமையாக ஒறுத்தல் இல்லாதபோது குறுக்குவழி தேடிச் சட்டங்களை மீறுவதிலேயே பலர் நாட்டம் செலுத்து கின்றனர். வழிவழியாகப் பலர் செய்யும் முயற்சி எல்லாம்

போதிய பயன் விளைக்காமலே போகிறது. ஆகவே சொல்லித் திருத்த முடியும் என்று முயலுதல் வீண் முயற்சியேயாகும். சொல்லித் திருத்துதலில் திருந்துவோர்க்கு உரிமை குறைவு; சொல்வோர்க்கு உரிமை மிகுதி. ஆதலின் உரிமை உணர்ச்சி - மான உணர்ச்சி - ஒருவகையில் தடையாக நிற்கின்றது போலும்! பொறுமையுடன் வாழ்ந்து காட்டுதல், திருந்துவோர்க்குப் பெரிய வாய்ப்பு அளிக்கின்றது; உரிமையோடு கூடிய வாய்ப்பு அளிக்கின்றது. சூழ்நிலையின் நெருக்கடி இல்லையேல் அதனால் பலர் எளிதில் திருந்தவும் கூடும்.

நல்ல குடும்பங்கள் என்று போற்றப்படுகிற வீடுகளில் பெற்றோரின் நல்வழிகளை மக்கள் பார்த்துக் கற்கின்றனர். சொல்லித் திருத்துதலும் சுற்றுப்புறத் தீமையும் இல்லாத போது அந்தக் குடும்பங்களில் வழிவழியாக மேன்மக்கள் பிறந்து வாழ்கின்றனர். ஒரு குடும்பத்தில் பிறந்து வளரும் மகளைவிட மகன் சுற்றுப்புறத்தில் நெருங்கிப் பழகுகின்றான். தாய் மகளுக்கு அறிவுறுத்துதலை விடத் தந்தை மகனைக் கடிந்துரைத்தல் மிகுதியாக உள்ளது. ஆதலின் நற்குடியில் பிறக்கும் மக்களுள் ஆடவர் சிலர் வழுக்கி விழுந்து கீழ்மக்களாகப் போதலும் உண்டு. அவர்களுடன் பிறந்த மகளிரோ குடும்பப் பண்புகளை விடாமல் போற்றிக் கற்பொழுக்கம் உடையவர்களாய் உயர்ந்து விளங்குகின்றனர். சுற்றுப்புறமும் குடும்பங்களும் பலவகையிலும் மாறுதல் அடைந்து குழம்பி வரும் இந்த நூற்றாண்டிலும் நற்குடியில் பிறந்த மகளிர் இன்னும் உயர்ந்த பண்புகளோடு விளங்கிவருதலைக் காணலாம். வழிவழியாக வரும் உயரிய பண்புகள் இம்மகளிர்க்கு இயல்பாக அமைந்து விளங்குகின்றன.

அன்பாய் ஒன்றுபட்டுக் கணவனுடன் வாழ்ந்து இல்லறம் நடத்தும் மனைவி, அவனிடம் உள்ள சிறு குறைகளை மறந்தும் மறைத்தும் வாழ்தல் இந்நாட்டுக் குடும்பப் பண்பாடுகளில் ஒன்றாகும். குற்றத்தை உடனே எடுத்துரைத்துக் கடிதல் அல்லது தூற்றுதல் உரிமையின் பயனாகக் கொள்ளப்படலாம். ஆனால் அதனைப் பொறுத்தலும் மறத்தலும் மறைத்தலுமே அன்பின் நெறியாகும்.

அன்புடன் வாழ்ந்துவந்த கணவன் ஏதோ காரணத்தால் தவறிச் சிலநாள் ஒழுக்கக் கேட்டிற்கு ஆளானபோது மனைவியின் நெஞ்சம் வருந்தியது. சிலநாள் கழித்துத் திரும்பிய கணவன், குற்றம் உணர்ந்து குறைபட்ட நெஞ்சுடன் தோழியை அணுகினான். குற்றம் செய்த கணவனும் பண்பாடு உடையவன் ஆதலின் இவ்வாறு வருந்தும் நெஞ்சுடன் திரும்பும் தன்மை அமைந்திருந்தது. அவனுடைய குறையைக் கேட்ட தோழி மனைவியின் பெருந் தன்மையை எண்ணி வியந்தாள். வாழ்க்கையில் இவ்வாறு நேர்ந்த மாறுதலை உயிர்த் தோழியாகிய தன்னிடமும் சொல்லாமல் மறைத்து ஒழுகும் ஒழுக்கத்தின் பெருமையை எண்ணினாள். கணவனைப் பிரிந்து தனித்துவருந்தும் துன்பத்தைத் தனக்குள் பொறுத்துத் தாங்கிக்கொண்டும், குடும்பத் தலைவன் செய்த தவற்றைப் பிறர் அறியாமல் உயிர்த்தோழிக்கும் அறிவிக்காமல் மறைத்தும் வாழும் மனைவியின் பண்பாடு தோழிக்கு வியப்பூட்டியது. பல ஆண்டுகள் இல்லறம் நடத்தி உயர்ந்த பண்புகளின் உருவமாக விளங்கும் தாய்க்கு இவ்வாறு பொறுத்தலும் மறைத்தலும் எளியவை; ஆயின் விளையாட்டுப் பெண்ணாக இருந்து திருமணம் செய்துகொண்டு இல்லறம் நடத்தும் இளமங்கைக்கு இந்தப் பண்புகள் எவ்வாறு

அமைந்தனவோ என்று வியந்தாள். "இந்த இளம்பெண் நம் தாயின் அரிய பண்புகளை எளிதில் பெற்று உயர்ந்துவிட்டாளே" என்று பாராட்டினாள்.

"மாமை நிறம் உடைய இந்த இளம்பெண் நம் தாய் போன்ற கற்பொழுக்கம் உடையவளாகிவிட்டாள். மூடிய செம்பில் தனித்துக் கிடந்து பிறர் சூடிக்கொள்ளாமலே அழகும் மணமும் இழந்து வாடும் மலர்களைப் போல், தனித்துத் துயருற்று உடல் மெலிந்தாள். கணவன் செய்த கொடுமையை நமக்குச் சொல்லவும் நாணி மறைத்து நடக்கின்றாள்" என்று வியந்து பாராட்டினாள்.

யாயா கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பில் தமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய்சா யினளே...
... ...
தண்ணந் துறைவன் கொடுமை
நம்முன் நாணிக் கரப்பா டும்மே.*

கணவன் மெல்ல வீட்டிற்குள் நுழைந்தான். தான் செய்த குற்றம் நெஞ்சத்தை வருத்த மெல்ல உள்ளே சென்றான். தன் மனைவி தன்னை வெறுத்துக் கடிந்துரைப்பாள் என்றும், அவளுடைய சினத்தை மாற்ற என்ன செய்வது என்றும் எண்ணியவாறே சென்றான். அவளோ அவன் எதிர்பார்த்ததற்கு மாறாக முகமலர்ச்சியோடு எதிரே

---

*குறுந். 9. கயமனார்.

யாய் - எம்தாய் - தாய்போல் கற்பு உணர்ந்தவள். மாயோள்- மாமை நிறத்தாள் - இளம் பெண். மடை - மூட்டுவாய்-மேல்மூடி. சாயினள் - மெலிந்தாள். கரப்பு - மறைத்தல்.

வந்து இன்சொல் கூறி அன்புடன் வரவேற்றாள். அதனால் தலைவன்நெஞ்சம் அவனை மேலும் வருத்தத் தொடங்கியது. இத்தகைய பெருந்தன்மை உடையவளுக்குத் தவறு இழைத் தோமே என்று நாணினான். இந்தக் காட்சியை ஒதுங்கி யிருந்து கண்ட தோழி அவளுடைய பண்பாட்டை நினைந்து மேலும் போற்றினாள்: "மகிழ்ந்து விளையாடும் விளையாட் டில் திளைத்துக் கிடக்கும் இளம் பெண்ணான இவள் நம் தாய்போல் நிறைந்த பண்பாடு பெற்றுவிட்டாளே. கண வன் செய்த கொடுமையை மறைத்தவளாகலின் அவனே நாணுமாறு அன்புடன் எதிர்கொள்ள வருகின்றாள்" என்று பாராட்டினாள்.

காஞ்சி யூரன் கொடுமை
கரந்தனள் ஆகலின் நாணிய வருமே.*

தாயின் உயர்ந்த பண்பாடு மகளுக்கு எளிதில் அமை கின்றது. ஆண்டும் அநுபவமும் முதிர்ந்தவள் தாய். விளை யாட்டை விட்டு இல்லறம் ஏற்ற இளம்பெண், மகள். அவளுடைய பண்பாடு இவளுக்கு எளிதில் அமைந்தது. அது சொல்லித் திருத்தும் முயற்சியால் அன்று; வாழ்ந்து காட்டிய வழியால் ஆகும். அதனால்தான் குடும்பப் பண்பாடு எளிதில் நீங்காமல் வழிவழியாக வருகின்றது.

*குறுந். 10. ஓரம்போகியார்.

காஞ்சி - காஞ்சி மரங்களை உடைய. கரந்தனள் - மறைத்து நடந்தாள். நாணிய - அவன் நாணுமாறு.

உணர்வோவியம்

உள்ளத்தால் உணரும் உணர்ச்சிகளைச் சொற்களால் புலப்படுத்தல் அரிது. ஆயின், கற்பனைத் திறன் மிக்க புலவர்கள் அந்த உணர்ச்சிகளைத் தம் பாட்டில் வடித்து உணர்த்தும்போது, அவற்றை உணர்ந்து போற்றுகிறோம். குறுந்தொகையில் காதலரின் உள்ளத்து உணர்ச்சிகளும் தோழி முதலியவரின் உணர்ச்சிகளும் சொல்லோவியமாக அமையும் திறன் போற்றத் தக்கது.

எடுத்துக்காட்டாக :

இருண்ட நள்ளிரவில் பெருமழை பொழிகிறது. தலைவன் தலைவியை நாடி வந்து நிற்கிறான். அவனைக் கண்ட தோழி வியந்து, "இந்த இருளிலும் மழையிலும் நீ எவ்வாறு வந்தாய்" என்கிறாள்.

"மழை இடமெல்லாம் மறைப்பதால் வானம், தெரியவில்லை. நீர் பரந்து ஓடுவதால், நிலம் தெரியவில்லை. ஒளி போய்விட்டமையால், இருள் மிகுதியாக உள்ளது. பலரும் உறங்கும் நள்ளிரவில் இந்நிலையில் நீ எவ்வாறு வந்தாயோ? வேங்கைமரம் பூத்து மணம் கமழும் எம் சிற்றூரை எப்படித் தேடி அறிந்து வந்தாயோ? மலர்மணம் அறிந்து அதன் வாயிலாக அறிந்து வந்தாய்போலிருக்கிறது. உன் முயற்சித் துன்பத்தை நினைக்கும்போது, என் மனம் வருந்துகிறது" என்கிறாள்.

பெயல்கண் மறைத்தலின் விசும்புகா ணலையே ;
நீர்பரந் தொழுகலின் நிலம்கா ணலையே ;
எல்லை சேறலின் இருள்பெரிது பட்டன்று ;

குறுந். 6

பல்லோர் துஞ்சும் பானாட் கங்குல்
யாங்குவந் தனையோ ஓங்கல் வெற்ப
வேங்கை கமழும்எம் சிறுகுடி
*யாங்குஅறிந் தனையோ நோகோ யானே.**

மனம் ஒன்றில் ஈடுபட்டு அதையே நினைந்து ஏங்கும் போது, அந்தப் பொருளின் உருவம் கண்ணெதிரே தோன்றுவது போல் இருக்கும். அது உருவெளி எனப்படும். அவ்வாறே அந்தப் பொருளின் தொடர்பான ஒலியும் கேட்பது போலவே இருக்கும். அது மனத்தின் கற்பனையே; மனத்தின் ஈடுபாட்டின் மிகுதியால் அமையும் கற்பனையே.

தலைவி தலைவனை நினைந்து ஏங்குகிறாள். அவனுடைய தேர் வரும்வரும் என்று எண்ணி ஏங்குகிறாள். நள்ளிரவின் அமைதிக்கு இடையே அவனுடைய தேர் வருவதுபோன்ற ஒலியே கேட்கிறது. அந்த ஒலியைக் கேட்பதிலேயே சிந்தனை செல்ல, உறக்கமும் போய்விடுகிறது. செவியின் ஈடுபாட்டால், கண்கள் தம் உறக்கத்தையும் மறந்துவிடுகின்றன.

...பானாட் கங்குல்
மன்றம் போழும் இனமணி நெடுந்தேர்
வாரா தாயினும் வருவது போலச்

---

*குறுந். 355. கபிலர்.

பெயல் - மழை. கண் - இடம். எல்லை - ஒளி. சேறலின் - செல்லுதலின், சென்றதனால். பட்டன்று - பட்டது. நோகு - வருந்துகிறேன்.

செவிமுதல் இசைக்கும் அரவமொடு
*துயில்மறந் தனவால் தோழிஎன் கண்ணே.**

பிரிவாற்ருமையால் துயருறும் தலைவி தன் தோளை நோக்குகிருள். தோள் வாடி நெகிழ்ந்திருப்பதை உணர்கிருள். தலைவன் பிரிந்தபோது இவ்வாறு மெலிந்து வாடும் தோள்கள், அவன் இருந்தபோது பூரித்து அழகு மிக்கு விளங்கியதை எண்ணிப் பார்க்கிருள். "அவன் இருந்தால் பூரிப்பும், பிரிந்தால் மெலிவும் அடைய இந்தத் தோள்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? தலைவனேடு இவைகளா காதல் கொண்டன? கண்கள் அவனைக் கண்டன; செவிகள் அவன்சொல்லைக் கேட்டன. இவ்வாறு கண்களாலும் செவிகளாலும் வளர்ந்தது எம் காதல். இவ்வாறு இருக்க, இந்தத் தோள்கள் என் பூரிப்படைய வேண்டும்? இன்று ஏன் மெலிய வேண்டும்" என்கிருள்.

...கொண்கன்
கண்டன மன்எம் கண்ணே; அவன்சொல்
கேட்டன மன்எம் செவியே; மற்றுஅவன்
மணப்பின் மாண்நலம் எய்தித்
தணப்பின் நெகிழ்பஎம் தடமென் தோளே.†

இப்போது அந்தக் கண்கள் அவனைக் காண வழியில்லையே, அந்தச் செவிகள் அவன்சொல்லைக் கேட்க வழியில்லையே

*குறுந். 301. குன்றியனுர்.

செவிமுதல் - செவியில். அரவம் - ஒலி. மறந்தனவால் - மறந்தன. ஆல் - அசை.

†குறுந். 299. வெண்ணிப்பூதி.

கொண்கன் - கணவன். தணப்பின் - பிரியின். நெகிழ்ப - மெலிவ. தட - பெரிய.

என்ற ஏக்கத்தை மன் என்ற சொல் புலப்படுத்துகிறது.

சில பாட்டுக்கள் மிக எளிய நடையில்-எளிய சொற்களால் - அமைந்துள்ளன. ஆயினும் ஆழ்ந்த உணர்ச்சியை வடித்து உணர்த்த வல்லனவாக உள்ளன.

எடுத்துக்காட்டாக :

தலைவியிடம் காதல் கொண்ட தலைவன் அவளை அணுகுவதற்கும் பேசுவதற்கும் வாய்ப்பு இல்லாமல் வருந்துகிறான். அவன் தன் நெஞ்சை நோக்கிப் பின்வருமாறு கூறுகிறான் :—

"பொருள் இல்லாதவன் இன்பத்தை விரும்பியதுபோல், பெறுவதற்கு அரியதை நீ விரும்பினாய் ; நெஞ்சே ! காதலி நல்லவளாக இருப்பதை நீ அறிந்துகொண்டாயே ! அதுபோல், அவள் அரியவளாக இருப்பதை அறியவில்லையே" என்கிறான்.

இல்லோன் இன்பம் காமுற் றாஅங்கு
அரிதுவேட் டனையால் நெஞ்சே காதலி
நல்லள் ஆகுதல் அறிந்தாங்கு
அரியள் ஆகுதல் அறியா தோயே.*

திருமணத்தின் பொருட்டு ஏற்பாடு செய்துவருவதாகக் கூறிச் சென்ற தலைவன் இன்னும் திரும்பவில்லை. யாரிடமும் ஒன்றும் சொல்லியனுப்பவுமில்லை. தலைவி தோட்டத்திற்குச் சென்று வேங்கை மரத்தடியில் இருந்து அதை நினைந்து

*குறுந். 120. பரணர்.

காமுற்றாங்கு - விரும்பினாற் போல. வேட்டனை (ஆல்) - விரும்பினாய். அறிந்தாங்கு - அறிந்தாற்போல.

ஏங்குகிறாள். அந்த வேங்கைமரம் அவளுக்குப் பழைய நினைவைக் கொண்டுவந்து நிறுத்துகிறது. அந்த மரத்தடியில்தான் தலைவன் பலநாள் இரவில் வந்து தலைவியைக் காணுவதற்காகக் காத்திருந்தான். இப்படிப் பலநாளும் இரவில் தலைவனுக்குத் துணையாக இருந்த வேங்கைமரமும் வாளா இருக்கிறது; அதுவும் தலைவனைப் பற்றி ஒன்றும் கூறவில்லை. அது எப்படிக் கூறும்? தலைவன் அந்த மரத்திற்கும் செய்தி ஒன்றும் சொல்லியனுப்பியிருக்க மாட்டான்.

காதலர் பறவைகளைத் தூது அனுப்புவதாகச் சொல்லப்படுகிறது. அந்த வேங்கைமரத்தை நாடிப் பல பறவைகள் வருகின்றன. ஏதேனும் ஒரு பறவையிடம் செய்தி சொல்லியிருந்தாலும் அது மரத்திடம் வந்து சொல்லியிருக்கும். மரத்திற்கும் பறவைக்கும் உறவு உண்டு. அதையும் எண்ணாமல், தலைவன் எந்தப் பறவையிடமும் தூது அனுப்ப மறந்துவிட்டான்.

இவ்வாறு எண்ணி வருந்துகிறாள் தலைவி.

நமக்குஒன்று உரையார் ஆயினும் தமக்குஒன்று
இன்னா இரவின் இன்துணை ஆகிய
படப்பை வேங்கைக்கு மறந்தனர் கொல்லோ
துறத்தல் வல்லியோர் புள்வாய்த் தூதே.*

வாழ்க்கையில் ஓர் உயர்ந்த நிலை - நல்ல நிலை - அடைய வேண்டும் என்று முயலலாம். அதற்கு வேண்டிய வழிகளும் வகுக்கலாம். ஆனால், நம் எண்ணம்போல் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. சுற்றுப்புறத்தின்

*குறுந். 266. நக்கீரர்.

படப்பை - தோட்டம். வல்லியோர் - வல்லவர். புள் - பறவை.

போக்கு அதற்கு மாறுக இருந்தால், எண்ணியது நிறை வேறுமல் ஏமாற்றமும் நேரும். அப்போது நம் உள்ளம் அதை நினைந்து நினைந்து வருந்தி ஏங்கும். 'நாம் எதிர்பார்த்த அந்த வாழ்வு வீணுக வருந்துகின்ற நினைப்பு ஆகிவிட்டதே; வாழ்வு வெறு நினைப்பாக முடிந்துவிட்டதே' என்று மனம் வேதனையுறும்.

காதலன் திருமண ஏற்பாடு செய்யாமல் காலம் நீட்டித்த போது தன் வாழ்வை எண்ணித் தலைவி இவ்வாறு வருந்துகிருள்.

சுருங்கிய சில சொல்லிலே பெருந் துன்பம் புலப்படுமாறு புலவர் அமைத்துள்ளார்.

சூர்மலை நாடன் கேண்மை
நீர்மலி கண்ணெடு நினைப்புஆ கின்றே.*

தான் கொண்ட காதல் திருமணமாய் இல்லறமாய் வளர்ந்து நிலைபெற வேண்டும் என்று ஏங்கிய தலைவி, அதற்குப் பல இடையூறுகள் ஏற்படுவது கண்டு ஏமாற்றம் அடைந்து கலங்கிச் சோர்கிருள். தலைவன் தக்க முயற்சிகளை மேற்கொள்ளாமல் தன்னைக் கைவிடுவானே என்ற ஏக்கம் அவளுள்ளத்தை வாட்டுகிறது.

"யான் இங்கே உள்ளேன். என் அழகு தீராத் துன்பத்தோடு கடற்கரைச் சோலையில் உள்ளது. தலைவன் தன் ஊரில் உள்ளான். யாரும் அறியாமல் யாம் கொண்ட களவுக்காதல், இப்போது அலராய் வெளிப்பட்டு ஊர்மன்றத்தில் உள்ளது" என்கிருள்.

---

*குறுந். 105. நக்கீரர்.

சூர் - அச்சம். கேண்மை - உறவு, காதல். மலி - நிறைவு.

யானே ஈண்டை யேனே; என்நலனே
ஆனா நோயொடு கானலஃதே;
துறைவன் தம்மூ ரானே;
மறைஅல ராகி மன்றத் தஃதே.*

உரைநடையில் புலப்படுத்த முடியாத அவ்வளவு துயரத்தையும் இந்தப் பாட்டின் சில சொற்களில், சில ஏகாரங்களில் புலப்படுத்த முடிகிறது. பாட்டின் ஆற்றல் இது.

தலைவனுடைய பிரிவின்போது, அவனைக் காண முடியாமல் வருந்துகிறாள் தலைவி. அவனைக் காண முடியாத நிலையில், அவனுடைய மலையைக் காண்பதும், அங்கிருந்து வரும் அருவியைக் காண்பதும், அருவி நீரில் அடித்து வரும் பொருள்களைக் காண்பதும் அவளுக்கு எவ்வளவோ ஆறுதலாக உள்ளன.

மாலையில் பெய்த மழையின் வெள்ளத்தினால் காலையில் அவன்மலையிலிருந்து காந்தள் செடி ஒன்று கிழங்கோடு அடித்து வரப்படுகிறது. அதைக் கண்ட தலைவி அவ்வாறே இலையோடு எடுத்துத் தழுவிக்கொள்கிறாள். வீட்டிற்குக் கொண்டுசென்று நடுகிறாள். அவளுடைய தாய் அதைக் கண்டு கடிந்துரைக்கவில்லை. அவள் அதை உணர்ந்து மகிழ்கிறாள். தாய்க்கு என்ன கைம்மாறு செய்வது என்று உருகுகிறாள். மேலுலகத்தையே அவளுக்குத்

*குறுந். 97. வெண்பூதியார்.

ஈண்டையேன் - இவ்விடத்தேன். நலன் - அழகுமுதலியன. ஆனா - தீரா. நோய் - துன்பம். கானலஃது - கானலது. மறை - களவு. மன்றத்தஃது - மன்றத்தது.

தந்தாலும் தக்க கைம்மாறு ஆகாது என்கிருள். அவளுடைய உள்ளத்தின் காதல்வேட்கைக்கு அந்தக் காந்தள்செடியும் அவ்வளவோ உதவுவதாக உணர்கிருள்.

அம்ம வாழி தோழி அன்னைக்கு
உயர்நிலை உலகமும் சிறிதால் ; அவர்மலை
மாலைப் பெய்த மணங்கமழ் உந்தியொடு
காலை வந்த முழுமுதற் காந்தள்
மெல்லிலை குழைய முயங்கலும்
இல்உய்த்து நடுதலும் கடியா தோளே.*

தலைவன் பிரிவால் தலைவி மிக வருந்தித் துயருறுகிருள். இவ்வாறு தனக்குள் எவ்வளவு துயருற்றபோதிலும், வெளியார்க்குப் புலப்படாதவாறு காக்க முயல்கிருள். தலைவன் இவ்வாறு பிரிந்து கொடுமை செய்தான் என்பதை அயலார் அறியலாகாது என்று விரும்புகிருள்.

“கடற்கரைச் சோலையிலே கூடி என் தோழியர் கூட்டம் ஆராய்ந்து அழகுபடுத்திய என் அழகை இழந்ததைவிட மிகத் துன்பமானது; தலைவன் செய்த கொடுமை பலரும் அறியுமாறு பரவி வெளிப்படுமானல் அதுவே என் அழகை இழந்ததைவிட மிகத் துன்பமானது” என்கிருள்.

கடலங் கானல் ஆயம் ஆய்ந்தஎன்
நலம்இழந் ததனினும் நனிஇன் னாதே...

---

*குறுந். 361. கபிலர்.

உந்தி - சுழித்து ஓடும் ஆறு. முழுமுதல் - முழுக்கிழங்குடன் கூடியது. உய்த்து - கொண்டுசென்று. கடியாதோள் - கண்டிக் காதவள்.

மெல்லம் புலம்பன் கொடுமை
பல்லோர் அறியப் பரந்துவெளிப் படினே.*

சில பாட்டுக்களில் முன்ஞென்றும் பின்ஞென்றுமாக இரண்டு சொல்லோவியங்கள் தீட்டப்படுவதும் உண்டு. இந்த இரண்டு ஓவியங்களும் ஒன்று மற்ருென்றைச் சிறப் பிக்க அமைவன. படங்களில் கருநிறம் வெண்மையை எடுத்துக்காட்ட, வெண்மை கருமையை நன்கு விளக்க, இருநிறமும் ஒன்றனுக்கு ஒன்று விளக்கமாக உள்ளது போன்ற அமைப்பு இது.

எடுத்துக்காட்டாக:

தலைவி தன் தாய்வீட்டில் செல்வ மகளாக வளர்ந் தவள். பொன்கலத்திலே பொரிகலந்து பால் வார்த்து எடுத் துச் சென்ருல், "வேண்டா, போ. இவ்வளவு மிகுதியான பால் எனக்கு வேண்டா" என்று மறுத்துவிடுவாள். தளிர் போன்ற மேனியை உடைய அவள் இப்போது நிழலும் இல் லாமல் நீரும் இல்லாமல் வறண்ட பாலைவழியில் காதலன் ஒருவனே துணையாக விரைந்து நடக்கிருள்! நீரற்ற சுனை யில் வற்றி வெம்மையுற்ற கலங்கிய நீரைத் தவ்வென்று குடிக்க அவளால் எவ்வாறு இயலுமோ என்று செவிலி வருந்துகிருள்.

நிழல்ஆன்று அவிந்த நீர்இல் ஆரிடைக்
கழலோன் காப்பக் கடுகுபு போகி
அறுசுனை மருங்கின் மறுகுபு வெந்த
வெவ்வெங் கலுழி தவ்வெனக் குடிக்கிய

---

*குறுந். 245. மாலைமாறன்.

ஆயம் - தோழியர் கூட்டம். நனி - மிக. புலம்பன் - நெய் தல்நிலத் தலைவன்.

யாங்குவல் லுநள்கொல் தானே ; ஏந்திய
செம்பொன் புனைகலத்து அம்பொரிக் கலந்த
பாலும் பலஎன உண்ணாள்
கோலமை குறுந்தொடித் தளிர்அன் னோளே.*

மகளைத் தேடிச் செல்லும் செவிலித்தாய், வழியில் வருவாரை எல்லாம் பார்த்துப் பார்த்து ஏமாற்றம் அடைகிறாள். தொலைவில் வரும்போது, மகள் போலவே தோன்ற உற்றுப் பார்க்கிறாள். நெருங்கி வர வர, வேறு யாரோ என்பதை உணர்கிறாள். இவ்வாறே வழியில் வருவார் எல்லாரையும் உற்று நோக்கி நோக்கிக் கண்கள் ஒளியிழந்தன ; நடந்து நடந்து கால்களும் நடை ஓய்ந்தன. 'அம்மம்ம ! வானத்தில் விண்மீன்களை எண்ணினாலும் எண்ணலாம் ; இந்த உலகத்தில் உள்ள மற்றவர்கள் எண்ண முடியாத தொகையினராகப் பலராக இருக்கிறார்களே' என்று பெருமூச்சு விடுகிறாள்.

காலே பரிதப் பினவே ; கண்ணே
நோக்கி நோக்கி வாள்இழந் தனவே ;
அகலிரு விசும்பின் மீனி னும்
பலரே மன்றஇவ் வுலகத்துப் பிறரே.†

பாட்டின் ஓசையும் நடையும் செவிலியின் களைப்பையும் சோர்வையும் புலப்படுத்துகின்றன. திரும்பத் திரும்ப வரும்

---

*குறுந். 356. கயமனார்.

ஆன்று - அற்று. ஆரிடை - அரிய வழி. கடுகுபு - விரைந்து. மறுகுபு - உலர்ந்து. கலுழி - கலங்கல் நீர். பல - மிகுதி. கோல் - திரட்சி.

†குறுந். 44. வெள்ளிவீதியார்.

பரி - நடை. வாள் - ஒளி. மன்ற - திண்ணமாக.

ஏகார ஒலியும் நோக்கி நோக்கி என்னும் அடுக்குத்தொடரும் சோர்ந்த உணர்ச்சியைப் புலப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.

கார்காலம் வந்தபோதும் வரவில்லை என்று நம்பி மறுத்துக் கூறும் கூற்றாக அமைந்த பாட்டுக்களிலும் கற்பனைக்காக மேற்கொண்ட அறியாமை புலப்படும்.

கொன்றைமரங்கள் கொத்துக் கொத்தாகப் பூத்து விளங்குகின்றன. பருவமல்லாத இடைக்காலத்துப் பெய்த புதுமழையைப் பருவமழை என்று தவறாக எண்ணிவிட்டன அந்த மரங்கள். அதனால்தான் கார்காலம் வந்துவிட்டதாகத் தவறாக எண்ணிப் பூத்துள்ளன. உண்மையாகக் கார்காலம் வந்திருந்தால், சொன்ன சொல்லின்படி தலைவரும் வெளிநாட்டிலிருந்து திரும்பிவந்திருப்பார். கொன்றைமரங்கள் இதை உணரவில்லை; அவைகள் அறிவில்லாதவை என்று தோழி கூறுவதாகப் பாட்டு அமைந்துள்ளது.

மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை
கல்பிறங்கு அத்தம் சென்றோர் கூறிய
பருவம் வாரா அளவை நெரிதரக்
கொம்புசேர் கொடியிணர் ஊழ்த்த
வம்ப மாரியைக் காரென மதித்தே.*

கார்காலத்து மழை பெய்தவுடன் முல்லைக்கொடிகள் செழித்து அரும்பு ஈன்று விளங்குவது மற்றவர்களுக்கு அழகான காட்சியாக உள்ளது. ஆனால் அந்தக் கார்காலத்

*குறுந். 66. கோவத்தன்.

மடவ - அறியாமை உடையன. மன்ற - திண்ணமாக. தடவு - வளைவு. பிறங்கு - விளங்கு. அத்தம் - பாலைவழி. கொடி - ஒழுங்கான. ஊழ்த்த - முறையாக மலர்ந்தன. வம்பு - புதுமை.

தின் புது அழகினை நுகர முடியாமல் தலைவனை நினைந்து ஏங்கும் தலைவிக்கு அது பொறுமையாக உள்ளது. "யான் இவ்வாறு வாடி வருந்துகிறேன். இந்தக் கார்காலம் தன் செழுமைச் செருக்கினால் என் வாட்டத்தைக் கண்டு எள்ளி நகைக்கிறது. அதோ அந்த முல்லை யரும்புகள் கார்காலத்தின் பற்கள். அந்தப் பற்களைக் காட்டி என்னை நோக்கிச் சிரிப்பதைப் பார்" என்கிறாள்.

பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை இலங்குஎயிறு ஆக
நகுமே தோழி நறுந்தண் காரே.*

துயரம் மிகும்போது தான்மட்டும் துயருறுவதாகவும் மற்றவர்களுக்குத் துயரம் இல்லை என்றும் எண்ணுவது மனத்தின் இயற்கை.

மாலைக்காலம் வந்ததும் பிரிவாற்றாத் துயரம் தலைவிக்கு மிகுகிறது. இவ்வாறு மாலைதோறும் தான்மட்டும் வருந்துவதாகஎண்ணுகிறாள்."தலைவரும் அவ்வாறு வருந்தினால் உடனே புறப்பட்டு வரக்கூடுமே. ஒருகால் அவர் சென்றுள்ள நாட்டில் மாலைக்காலம் என்பது இல்லையோ. மாலைத்துயரமும் அந்நாட்டில் இல்லையோ" எனத் தோழியிடம் கூறுகிறாள்.

புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொல் தோழிஅவர் சென்றநாட்டே.*

---

*குறுந். 126. ஒக்கூர் மாசாத்தியார்.

பெயல் - மழை. புறந்தந்த - காப்பாற்றிய. இலங்கு - விளங்கு. எயிறு - பற்கள்.

*குறுந். 330. கழார்க்கீரனெயிற்றியன்.

புன்கண் - துன்பம். புலம்பு - தனிமைத்துயரம். இன்று கொல் - இல்லையோ.

கதிரவன் மேற்கு வானத்தில் சாய்ந்து மறைந்துவிட்டான். வளைந்த சிறகுகளை உடைய பறவைகள் விரைந்து பறந்து செல்கின்றன. தொலைவில் வழிப்பக்கத்தே உள்ள உயர்ந்த மராமரங்களில் தங்கியுள்ள தம் குஞ்சுகளின் வாயில் ஊட்டுவதற்காக இரை எடுத்துக்கொண்டு செல்கின்றன. அதனால்தான் இவ்வாறு விரைந்து பறக்கின்றன, பாவம்!

ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து
அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை
இறையுற ஓங்கிய நெறியயல் மராஅத்த
பிள்ளை உள்வாய்ச் செரீஇய
*இரைகொண் டமையின் விரையுமால் செலவே.**

இந்த அளவில் பாட்டைப் படித்தால், மாலைக்காலத்துக் காட்சி ஒன்றைப் பற்றிப் புலவர் பாடியதாகத் தோன்றுகிறது. ஆனால் இது குஞ்சுகளுக்கு இரைகொண்டு பறக்கும் பறவைகளைப் பற்றிப் பாடியது அன்று. தலைவனது பிரிவை நினைந்து வருந்தும் தலைவியின் துயரத்தைப் பாடிய பாட்டு இது.

உணர்ச்சி மிக்க நிலையில், உள்ளத்தில் எழுந்த எல்லாக் கருத்துக்களும் வாயில் வெளிப்படுவதில்லை. வழியில் பாம்பு ஓடக் கண்ட ஒருவன், "இதோ வழியில் பாம்பு ஓடுகிறது. பயமாக இருக்கிறது. யாராவது வாருங்கள்" என்று

---

*குறுந். 92. தாமோதரன்.

அகல்வாய் - அகன்ற இடம். அளிய - இரங்கத்தக்கன (இக் காலத்தில் அய்யோ பாவம் என்று கூறுதல் போன்றது.) கொடுஞ் சிறை - வளைந்த சிறகுகள். இறையுற - தங்குதல் பொருந்த. பிள்ளை - குஞ்சு. செரீஇய - செருகுவதற்கு. விரையும் (ஆல்) - விரைந்து போகும்.

எண்ணும் அவ்வளவையும் சொல்வதில்லை. உணர்ச்சி மிகுதியால் முன்னும் பின்னும் உள்ளவற்றைவிட்டு, "பாம்பு பாம்பு" என்று அலறுகிறான்.

சென்ற தைப்பொங்கலன்று மகனை இழந்த தாய், இந்தப் பொங்கல் வந்தபோது துயர உணர்ச்சி மிக்கவளாய் வருந்துவாள். "சென்ற பொங்கலில் என் மகன் இருந்தான். இந்தப் பொங்கலில் அவன் இல்லையே. மகன் இல்லாத பொங்கலை நான் காண நேர்ந்ததே" என்ற அவ்வளவு கருத்துக்களையும் வாயால் சொல்லமுடியாமல், "போன பொங்கலில் என் மகன் இருந்தானே" என்று கதறுவாள். இதுவே அவளுடைய துயரம் முழுமையும் அறிவிக்க வல்லதாகும்.

அவை போலவே, மாலைக்காலத்தைக் கண்ட தலைவி வருந்திக் கூறும் இக்கூற்றும், அவளுடைய உள்ளத்துயர் முழுதும் புலப்படுத்துகிறது. "மாலைக்காலம் வந்ததும், பறவைகள் கூடு நோக்கிப் பறக்கின்றனவே! என் காதலர் இன்னும் வீடு நோக்கி வரவில்லையே. குஞ்சுகளை நினைந்து பறவைகள் விரைகின்றன. காதலர் என்னை நினைக்கவில்லையே! மறந்துவிட்டாரே!" என்ற அவ்வளவு ஏக்கமும் துயரமும் இந்தப் பாட்டில் பொதிந்து கிடக்கின்றன.

நுண்ணிய உணர்ச்சி மிக்க பாட்டு இது.

வெள்ளிவீதியார் பாடிய ஒரு பாட்டில் மாலைக்காலத்தைக் குறித்து நுட்பமான துன்ப உணர்ச்சியைப் புலப்படுத்துகிறாள் தலைவி.

"தலைவன் பிரிவதற்கு முன்பு, பெண்கள் விழாவுக்கு உரிய அலங்காரங்களைச் செய்கின்ற மாலைக் காலத்தை அறிவேன். நிலமெல்லாம் பரவிய துன்பத்தோடு தனிமைத்

துயருடையதாக மாலைக்காலம் இருத்தலை அப்போது யான் அறியேன்" என்கிருள்.

தண்ணந் துறைவன் தணவா வூங்கே
வால்இழை மகளிர் விழவணி கூட்டும்
மாலையோ அறிவேன் மன்னே ; மாலை
நிலம்பரந் தன்ன புன்கணோடு
*புலம்புஉடைத் தாகுதல் அறியேன் யானே.**

"இப்பொழுதுதான், மாலைக்காலம் இத்தகைய துன்ப முடைய பொழுது என்பதை உணர்கிறேன்" என்பதைப் புலப்படுத்துகிருள்.

தலைவன் பிரிந்த பிரிவால் துயறுருகிருள் தலைவி. மாலைக் காலத்தில் அவளுடைய துயர் பெருகுகிறது. வர வர, மாலைக்காலம் வருமுன்பே துயரம் பெருகி வருந்துகிருள். அந்நிலையில், "சிறிது நேரம் உளதாகிய புல்லிய மாலைக்காலம் என்று ஒன்று இருத்தலை முன்பு அறிவேன் - தலைவரைக் கண்டு காதல் கொள்வதற்கு முன்பு அறிவேன்" என்கிருள்.

சிறுபுன் மாலை உண்மை
*அறிவேன் தோழிஅவர்க் காணு வூங்கே.**

இப்பொழுதெல்லாம் அத்தகைய 'சிறுபுன்மாலை'யை அறியவில்லை என்கிருள். இப்பொழுது பெருந்துயர் தரும்

---

*குறுந். 386. வெள்ளிவீதியார்.

தணவா வூங்கு - பிரியா முன்பு. வால் இழை - தூய அணிகலன். புன்கண் - துன்பம். புலம்பு - தனிமைத் துயர்.

*குறுந். 352. கடியலூர் உருத்திரங் கண்ணனுர்.

உண்மை - உள்ளது என்பது, உளதாகும் தன்மை. காணு வூங்கே - காண்பதற்கு முன்பு.

மாலையே அவளுடைய அனுபவம்; அதுவும் குறித்த சிறு பொழுதின் அளவில் நில்லாமல், பகலும் இரவுமாகத் துயர் பெருகுமளவிற்கு நீள்கிறது என்று உணர்கிறாள்.

மாலைக்காலம் சிறிதுநேரம் உள்ள சிறுபொழுதாக இல்லாமல், எல்லா நேரத்தையும் கவர்ந்து நீளும் துன்பம் மிக்க பொழுதாகத் தோன்றுகிறது. அதை நினைந்து தலைவி வருந்திப் பின்வருமாறு கூறுகிறாள்.

"கதிரவன் மறைந்த அந்தி வானம் சிவக்க, துன்பம் மிகுந்து ஒளி மங்கும் பொழுதினை முல்லை மலரும் மாலைப் பொழுது என்பார்கள். அவர்கள் அறிவு மயங்கியவரே. கோழி கூவும் விடியற்காலையும் மாலையே; பகலும் மாலையே; துணை இல்லாதவர்க்கு எல்லாப் பொழுதும் மாலையே" என்கிறாள்.

சுடர்செல் வானம் சேப்பப் படர்கூர்ந்து
எல்அறு பொழுதின் முல்லை மலரும்
மாலை என்மனார் மயங்கி யோரே;
குடுமிக் கோழி நெடுநகர் இயம்பும்
பெரும்புலர் விடியலும் மாலை;
பகலும் மாலை துணையி லோர்க்கே.*

தலைவன் தலைவியின் அன்பைப் பெறுவதற்கு முன்பு, அவளை நினைந்து வருந்திக்கூறும் சொற்களிலும், இத்தகைய உணர்ச்சியைக் காணலாம். காலை, பகல், சோர்வான மாலைக்

---

*குறுந். 234. மிளைப்பெருங்கந்தன்.

சேப்ப - சிவக்க. படர் - நினைப்புத் துயர். கூர்ந்து - மிகுந்து. எல் - ஒளி. குடுமி - உச்சிக்கொண்டை. நகர் - வீடு. இயம்பும் - ஒலிக்கும். பெரும்புலர் - நன்றாகப் புலர்ந்த.

காலம், ஊரார் உறங்கும் யாமம், விடியல் என்று கூறப்படும் இந்தப்பொழுதுகளுக்கு இடையே ஒருவனுக்கு வேற்றுமை தெரிந்தால், அவன் கொண்டது உண்மையான காதல் அன்று என்கிறான்.

காலையும் பகலும் கையறு மாலையும்
ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்றுஇப்
*பொழுதிடை தெரியின் பொய்யே காமம்.**

அப்பொழுதுகளிடையே ஒரு வேறுபாடும் உணராதவனாகி, தான் எல்லாப் பொழுதுகளிலும் நிறைந்த காதல்நோய் கொண்டு வருந்துவதால், தன் காதல் உண்மைக் காதல் என்கிறான்.

மாலைப்பொழுதும் ஒருவாறு கழிந்துபோகிறது. அதை நினைந்து தலைவியின் உள்ளம் ஒருவகையில் விடுதலை பெற்றது போல் உணர்கிறது. ஆயின், அடுத்து வருவது இராக்காலம் என்று உணர்ந்தவுடன், அந்த இராக்காலத்தை எவ்வாறு கடந்து வாழப் போகிறோம் என்று துயருறுகிறாள்.

" பகல் நீங்க, முல்லை மலர, கதிரவன் வெப்பம் தணிந்து சோர்வான மாலைக்காலமும், இராக்காலம் வரும் எல்லையாகவும் கடந்துவிட்டோம் என்றால், பயன் என்ன ? அடுத்து வரும் இரவு என்னும் வெள்ளம் கடலைவிடப் பெரிதாயிற்றே. அதை நீந்திக் கடப்பது எவ்வாறு ?" என்கிறாள்.

எல்லை கழிய முல்லை மலரக்
கதிர்சினந் தணிந்த கையறு மாலையும்
இரவரம் பாக நீந்தினம் ஆயின்

---

*குறுந். 32. அள்ளூர் நன்முல்லையார்.
கையறு - சோர்வுறுகிற. துஞ்சு - உறங்கும்.

எவன்கொல் வாழி தோழி
*கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே.**

புலவர், 'மாலையும் நீந்தினம்' என்று பாடியவுடனே, நீந்தினோம் என்ற சொல்லின் ஆற்றலால், அடுத்துவரும் இராக்காலம் வெள்ளமாய் உருவகமாயிற்று. 'கங்குல் வெள்ளம்' என்ற அதன் சிறப்பால் புலவர் 'கங்குல் வெள்ளத்தார்' ஆனார்.

காதல் பெரியது. இன்பப் பொருள்களால் துன்பம் ஆக்கவும் அதனால் முடியும். துன்ப நிலைகளால் இன்பம் ஆக்கவும் அதனால் முடியும். சிறந்த பாலும் கசக்குமாறு செய்துவிடும். வெறு நீரும் தேன் போல் இனிக்குமாறு செய்துவிடும். இன்ப துன்பங்கள் பொருள்களிலும் சூழ்நிலையிலும் மட்டும் இல்லை. நுகர்வோரின் மனத்தை ஒட்டி அவை பெரிதும் மாறுகின்றன. காதலன் பிரிந்து செல்ல, தனியே வீட்டில் வாழும் வாழ்வை எண்ணுகிறாள் தலைவி. வீட்டில் பஞ்சணை உண்டு; இனிய உறவு உண்டு; சுற்றத்தின் துணை உண்டு; இருந்தாலும், காதலன் இல்லாமையால் பிரிவுத் துயர் நெஞ்சில் குடிகொண்டு எல்லாவற்றையும் வெறுக்கச் செய்யும். அதைவிட அவனுடன் காட்டு வழியின் - வறண்ட காடாகிய பாலை வழியில் - சென்றாலும், அங்கு உள்ள துன்பங்கள் துன்பங்களாகத் தோன்றாதவாறு மனம் மகிழுமே; காதலன் உடன் வரும் காரணத்தால், துன்பங்களைப் பொருட்படுத்தாமல் மகிழலாமே என எண்ணுகிறாள் தலைவி.

---

*குறுந். 387. கங்குல் வெள்ளத்தார்.

எல்லை - பகல். கையறு - சோர்வுறுகிற. இரா - இராக்காலம். கங்குல் - இரவு.

> காடு, இன்று என்றி ராயின்
> இனியவோ பெரும தமியோர்க்கு மனையே.*

என்று தலைவனிடம் சொல்கிறாள்.

யானை உணவு கிடைக்காமல் பசித் துன்பத்தால் தன் கையை மடித்து வருந்தும் நிலையில் உள்ளது கொடிய பாலை வழி. எனினும், தலைவனோடு செல்லும் நிலை நேர்ந்தால் தலைவிக்கு அந்தப் பாலைக்காடுகளும் இனியவை ஆகும் என்கிறாள் தோழி.

> யானை கைம்மடித்து உயவும்
> கானமும் இனியவாம் நும்மொடு வரினே.†

தலைவன் இன்றியமையாத கடமையை மேற்கொண்டு பிரிந்து சென்றிருத்தலால், அவன் வரும்வரையில் ஆற்றியிருத்தலே கடமை என்பதைத் தலைவி உணர்கிறாள். ஆயினும் அவளுடைய அன்பு நெஞ்சம் வருந்துவதை அவளால் தடுக்க முடியவில்லை. கடமையின் உறுதி பற்றிய எண்ணத்திற்கும் நெஞ்சத்தின் அன்பால் நெகிழும் நெகிழ்ச்சிக்கும் இடையே உள்ள போராட்டம் இது.

" உயர்ந்த மலைகளை உடைய அரிய வழியில் கடந்து சென்ற தலைவரை நினைந்து நினைந்து இருள் மிக்க நள்ளிரவிலும் கண்கள் துயிலவில்லை. என் மலர் போன்ற கண்களுக்குக் கண்ணீர்த்துளிகள் எளியனவாக உள்ளன" என்கிறாள்.

---

*குறுந். 124. பாலை பாடிய பெருங்கடுங்கோ.

என்றிராயின் - என்று சொல்வீராயின்.

†குறுந். 388. ஔவையார்.

உயவும் - வருந்துகிற.

தான் அழக்கூடாது என்று உறுதியாக எண்ணியபோதிலும் கண்கள் நீர்த்துளிகளைச் சிந்துகின்றன என்கிருள்.

பிறங்குமலை அருஞ்சுரம் இறந்தவர்ப் படர்ந்து
பயில்இருள் நடுநாள் துயில்அரி தாகித்
தெண்ணீர் நிகர்மலர் புரையும்
*......மழைக்கணிற்கு எளியவால் பனியே.**

இளவேனிற் காலத்தில் குயில்கள் கூடி மகிழ்வதோடு, காதலரை விட்டுப் பிரிந்தவர்களின் உள்ளம் வருந்துமே என்ற எண்ணமே இல்லாமல் இனிய குரலால் கூவிக்கொண்டிருக்கின்றன. "இதைக் கேட்டும், இன்னும் பிரிந்திருக்கின்ருர் தலைவர். அவர் இனிமேல் திரும்பி வருவாராயின், 'மலர்களால் நீ என் அடர்ந்த கூந்தலையும் புனையாதே! என்னையும் தொடாதே' என்று சொல்லப்போகிறேன்" என்கிருள்.

நோன்சினை இருந்த இருந்தோட்டுப் புள்ளினம்
தாம்புணர்ந் தமையின் பிரிந்தோர் உள்ளா
தீங்குரல் அகவக் கேட்டும் நீங்கிய
ஏதி லாளர் இவண்வரின் போதின்
பொம்மல் ஓதியும் புனையல்
எம்மும் தொடாஅல் என்குவம் மன்னே.†

---

*குறுந். 329. ஓதலாந்தையார்.

பிறங்கு - உயர்ந்து விளங்கும். இறந்தவர் - கடந்து சென்றவரை. படர்ந்து - நினைந்து. நடுநாள் - நள்ளிரவு. அரிதாகி-இல்லையாகி. நிகர் - ஒளி. புரையும் - போன்ற. மழை - குளிர்ந்த. பனி-நீர்த்துளி, கண்ணீர்.

†குறுந். 191.

நோன்சினை - வலிய கிளை. இரு - கரிய. தோடு - தொகுதி. உள்ளா - கருதாத. தீ - இனிய. ஏதிலாளர் - அயலார் தன்மை

நண்பன் ஒருவன் பிரிந்து வெளிநாட்டிற்குச் சென்றான் என்றால், அவனை மீண்டும் காண விரும்பும் மனம், அவனுடைய கடிதத்தைக் கண்டாலும் மகிழும். அவன் கனவில் வந்ததாகக் கண்டாலும் ஒருவகை ஆறுதல் பிறக்கும்.

தலைவன் வீட்டை விட்டு வெளிநாட்டுக்குப் பிரிந்து போனவிடத்தில், தலைவியை நினைந்து வருந்துகிறான். ஒரு நாள் அவன் காணும் கனவில் தலைவியைக் காண்கிறான். உடனே, உறக்கம் கலைகிறது. எழுந்து பார்த்து, தான் கண்டது கனவுதான் என்று உணர்ந்த பிறகும், உறக்கம் கலைந்ததே என்று வருந்தாமல், கலைத்த கனவைப் போற்றுகிறான்.

நுண்பூண் மடந்தையைத் தந்தோய் போல
இன்துயில் எடுப்புதி கனவே
எள்ளார் அம்ம துணைப்பிரிந் தோரே.*

"துணையைப் பிரிந்து வருந்துகிறவர்கள், நீ வெறுங் கனவு தான் என்று உன்னை எள்ளமாட்டார்கள்; உன்னைப் போற்றுவார்கள் ; உன்னால் ஆறுதலும் பெறுவார்கள்" என்கிறான்.

உடையவர், அன்பு நீங்கிய தலைவர். இவண் - இங்கே. போதின் - மலர்களால். பொம்மல் - பொங்கிய. ஓதி - கூந்தல். புனையல் - புனையாதே. தொடாஅல் - தொடாதே.

*குறுந். 147. கோப்பெருஞ்சோழன்.

பூண் - அணிகலன். தந்தோய் - கொண்டுவந்து சேர்த்தாய். எடுப்புதி - எழுப்புகிறாய்.

பழக்க வழக்கங்கள்

கற்பனை என்று என்ன புனைந்து கூறப்படினும், அத னுடன் வாழ்க்கையின் பகுதிகள் கலந்தே விளங்கும். பாடும் புலவர், தம் காலத்து மக்களின் பழக்க வழக்கங் களைக் கலந்து கற்பனைகளை அமைத்தல் இயல்பு. அவர்கள் படைத்து நல்கும் கற்பனைகள், யாதொரு பற்றும் இன்றி வானத்தில் திரியும் கோட்டைகள் அல்ல; மண்ணில் வேரூன்றி விண் நோக்கி எழும் மரங்களையும், மரங்களில் கூடு கட்டி வானில் பறந்துலவும் பறவைகளையும் போன்ற வைகள் அவர்களின் கற்பனைகள். ஆதலின், அவர்களின் காலத்துப் பழக்க வழக்கங்கள் பலவும் பாட்டுக்களில் இடம் பெற்று விளங்கும். குறுந்தொகைப் பாட்டுக்களிலும், பழந்தமிழரின் பேச்சுவழக்குகளும் சடங்குகளும் பழக்க வழக்கங்களும் கூறப்படுதல் காணலாம்.

மனைவி சொன்னபடி நடக்கிறான் ஒருவன். 'அவள் எழு என்றால் எழுகிறான், இரு என்றால் இருக்கிறான்' என்று உலகில் அப்படிப்பட்டவனைக் குறைகூறுவது வழக்கம்.

தோலால் செய்த பாவையைக் கண்ணடிக்குள் வைத் துக் கயிற்றால் இயக்குவார்கள். பொம்மையாட்டம் அல்லது பாவைக் கூத்து என்று அது கூறப்படும்.

கையையும் காலையும் ஆட்டிவைத்தபடி ஆடுகின்ற அந்தப் பாவைபோல், மனைவி விரும்பிச் சொன்னபடி அந்தக் கணவன் நடக்கின்றானும்.

கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யுந்தன் புதல்வன் தாய்க்கே.*

முன் பழகியறியாத ஒருவனும் ஒருத்தியும் தக்க இளமையில் ஒருவரை ஒருவர் கண்டு பழகிக் காதல் கொண்டு மணப்பது உண்டு.

அவ்வாறு காதல்கொண்ட தலைவன் தலைவியைப் பார்த்துப் பின்வருமாறு கூறுகிறான்.

"என் தாயும் உன் தாயும் யார் யாரோ? என் தந்தையும் உன் தந்தையும் எந்த முறையில் உறவினர்? யானும் நீயும் இதற்குமுன் எவ்வகையில் ஒருவரை ஒருவர் அறிவோம்? செந்நிலத்திலே பெய்த மழைநீர் பிரியாவண்ணம் கலத்தல் போல், அன்புடைய நம் நெஞ்சங்கள் (ஒருவகைத் தொடர்பும் இல்லாமலே) கலந்து ஒன்றுபட்டனவே" என்கிறான்.

யாயும் ஞாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே.†

பாட்டில் உள்ள உவமைச் சிறப்பால், புலவர் 'செம்புலப் பெயனீரார்' எனப்பட்டார்.

---

*குறுந். 8. ஆலங்குடி வங்கனார்.

தூக்க - அசைக்க. தூக்கும் - அசைக்கும். ஆடி - கண்ணாடி. மேவன - விரும்புவன. தன் புதல்வன் தாய் - தன் மகனுடைய தாய், தன்மனைவி.

†குறுந். 40. செம்புலப் பெயனீரார்.

ஞாய் - உன்தாய். நுந்தை - உன்தந்தை. கேளிர்-உறவினர். பெயல் - மழை. புலம் - நிலம்.

தலைவனும் தலைவியும் இளமை முதல் பழகியவர்களாக இருந்து, உற்ற வயது வந்தபோது காதல் கொண்டு காதலராவதும் உண்டு.

மோதாசனார் பாடிய பாட்டு இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறு சிறுவர்களாக இருந்தபோதே பழகிய இருவர் காதலராகிப் பெற்றோர் அறியாமல் வெளியூர்க்குப் புறப்பட்டுச் செல்கின்றனர். அவர்களை வழியில் கண்டவர்கள் பின்வருமாறு தம்முள் சொல்லிக்கொள்கின்றனர்.

"இவன் இவளுடைய கூந்தலைப் பற்றி இழுக்கவும், இவள் இவனுடைய சிறிய தலையின் முடியை இழுத்துவிட்டு ஓடவும், அன்புடன் வளர்க்கும் செவிலித்தாயர் விலக்கவும் நீங்காமல் காரணமற்ற சிறு சண்டைகள் செய்துகொண்டிருப்பார்கள். அந்தக் காலம் கழிந்தது. ஊழ்வினையே! நீ நல்லது செய்துள்ளாய்! மென்மையான இரட்டைமலர்களால் தொடுத்த மாலை போன்ற இந்த இருவரும் மணந்து மகிழும் இயற்கையைக் காட்டினாய்" என்கிறார்கள்.

இவன் இவள் ஐம்பால் பற்றவும் இவள் இவன்
புன்தலை ஓரி வாங்கினள் பரியவும்
காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது
ஏதில் சிறுசெரு உறுப மன்னோ;
நல்லை மன்ற பாலே மெல்லியல்
துணைமலர்ப் பிணையல் அன்ன இவர்
மணமகிழ் இயற்கை காட்டி யோயே.*

*குறுந். 229. மோதாசனார்.

ஐம்பால் - மகளிர்கூந்தல். ஓரி - ஆண்தலைமயிர். வாங்கினள்- வாங்கி - இழுத்து. தவிர்ப்ப - விலக்க. ஏதில் - காரணமற்ற.

தலைவன் பிரிந்து சென்றிருந்த நாட்களில் தலைவி தன்னைப் புனைந்துகொள்ளாமலும் கூந்தலில் மலர் சூடாமலும் இருந்தாள் என்று அறியப்படுகிறது.

வெளிநாட்டுக்குச் சென்ற தலைவர் விரைவில் திரும்பி வருவார் என்று தோழி ஆறுதல் கூறுகிறாள். அதைக் கேட்டுத் தலைவி, "நான் எவ்வாறு அழாமல் இருப்பேன்? பொன் உரைக்கும் கட்டளைக் கல் போல் தோன்றுமாறு குயில் மாமரக் கிளைகளில் நறுமணமான மலர்ப் பொடிகளைக் கொழுதும் இந்த இளவேனிற் காலத்திலும் (அவர் இல்லாமையால்) மலர் இல்லாமல் வறிதாக உள்ள கூந்தலைத் தடவுகின்றேனே" என்கிறாள்.

ஈங்கே வருவர் இனையல் அவர்என
அழாஅற் கோ இனியே? நோய்நொந் துறைவி!
மின்னின் தூவி இருங்குயில் பொன்னின்
உரைதிகழ் கட்டளை கடுப்ப மாச்சினை
நறுந்தாது கொழுதும் பொழுதும்
*வறுங்குரற் கூந்தல் தைவரு வேனே.**

ஏதேனும் ஒரு பயன் கருதிச் சகுனம் பார்த்தலும், நற்சொல் கேட்டலும் பழங்காலத்தில் உண்டு. அவற்றோடு,

---

செரு - சண்டை. மன்ற - திண்ணமாக. பால் - ஊழ். துணை - இரட்டை. பிணையல் - மாலை.

*குறுந். 162. கச்சிப்பேட்டு நன்னாகையார்.

இனையல் - வருந்தாதே. என-என்று நீ சொல்ல. அழாஅற்கோ - அழாமல் இருப்பேனோ. நோய் நொந்துறைவி - என் துன்பத்திற்காக நோகின்றவளே! தூவி - சிறகு. குரல் - கொத்து. தைவருவேன் - தடவுவேன்.

கொற்றவை வழிபாடும் உண்டு. மலையில் சூலம் ஏந்திய கொற்றவைக்குப் பிரார்த்தனைசெய்துகொள்வதும், கருதிய பயன் கைகூடினால் இன்ன கடன் (பிரார்த்தனை) நிறைவேற்றுவோம் என்று கையில் நூல்காப்புக் கட்டிக் கொள்ளுதலும் வழக்கம்.

விடர்முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்
கடனும் பூணும் கைந்நூல் யாவாம்
புள்ளும் ஓராம் விரிச்சியும் நில்லாம்...*

" நம்மை மறந்து வாழும் கல்மனம் உடைய தலைவர்க்காகச் செய்யவேண்டிய இவற்றையும் செய்ய மாட்டோம்" என்று ஒருத்தி கூறுவதாக உள்ள பாட்டு இது.

இள மங்கையர் தம் தம் தொழில்களைச் செய்து வந்ததோடு, மகிழ்ச்சியான விளையாட்டுக்களில் பொழுதுபோக்கியும் வாழ்ந்தனர்.

பச்சை நெல்லால் அவல் இடித்து, இடித்த கரிய வயிரமான உலக்கையை நெற்பயிர் உள்ள வரப்பில் சாய்த்து விட்டு, பொம்மைகளை வைத்து விளையாடி மகிழ்ந்தார்கள் (தொண்டி என்னும் துறைமுகத்தில்).

---

*குறுந். 218. கொற்றன்.

விடர் - பிளப்பு. முகை - குகை. அடுக்கம் - அடுக்கிய மலை. விறல் - வெற்றி. கடன் - பிரார்த்தனை. பூணும் - மேற்கொள்ளோம். நூல் - காப்பாகக் கட்டும் நூல். யாவாம் - கட்டோம். புள் - சகுனம். விரிச்சி - நல்ல சொல் கேட்டல்.

பாசவல் இடித்த கருங்காழ் உலக்கை
ஆய்கதிர் நெல்லின் வரம்பணைத் துயிற்றி
ஒண்டொடி மகளிர் வண்டல் அயரும்...*

கடற்கரையில் உள்ள பெண்கள் உப்பங்கழியில் காவி மலர்களைப் பறித்தும், வெண்ணிற அலைகளை உடைய கடலில் நீராடியும், பிரியாத கூட்டமாய் மிக மகிழ்ந்தார்கள்.

கழியில் காவி குற்றும் கடல
வெண்தலைப் புணரி ஆடியும் நன்றே
பிரிவில் ஆயம் உரியதொன்று அயர...†

ஏதேனும் ஒன்றைக் கருதிச் சத்தியம் செய்தலும் ஆணை யிடுதலும் இக்காலத்திலும் நாட்டுப்புறங்களில் உள்ளன. அவை பழங்காலத்தில் சூள் எனக் கூறப்படும். சூள் சொல்லியவர், அதை நிறைவேற்றத் தவறினால், பிழைபட்டால், தெய்வம் வருத்தும் என்ற நம்பிக்கை இருந்துவந்தது. அதனால் தவறாமல் நடக்க முயன்றனர். இக்காலத்தில் சூள் சொல்லுதலும் வேண்டா, தவறிவிட்டுத் தெய்வத்தின் தண்டனைக்கு உட்படுதலும் வேண்டா என்ற எண்ணத்தால், சூள் கூற விடுவதில்லை. யாரேனும் ஒருவர் "சத்தியமாக," "அப்பன் ஆணையாக" என்று கூறத்

---

*குறுந். 238. குன்றியன்.

பாசவல் - பசுஅவல் - பச்சை அவல். காழ் - வயிரம். ஆய் - நுண்ணிய. வரம்பு - வரப்பு. வண்டல் - ஒருவகை விளையாட்டு. அயரும் - கொண்டாடி மகிழும்.

†குறுந். 144. மதுரையாசிரியன் கோடங்கொற்றன்.

குற்றும் - பறித்தும். புணரி - கடல். நன்று - மிக. ஆயம் - தோழியர் கூட்டம்.

தொடங்கினால், அந்தச் சூள் வேண்டா என்னும் கருத்தோடு "விட்டேன், விட்டேன்" என்பர். "என் பொருட்டு நீ சொல்லிய சூளை நானே விடுதற்கு உரிமை உடையேன். அதை இப்போதே விட்டேன். இனி அதனால் உனக்குத் துன்பம் இல்லை" என்பது கருத்து.

தலைவி பிரிவுத் துயரால் மெலிந்து அழகு இழந்தாள். திருமண ஏற்பாடு செய்யாமல் தலைவன் காலம் தாழ்க்கிறான். தோழி அவனை அணுகி, "ஐய, நீ செய்த சூள் நிறைவேற வில்லை. அது உன்னை வருத்தும். யாம் விட்டுவிடுகிறோம். அதை நீ திரும்பக் கொண்டு செல். ஆனால் தலைவி உன் காரணமாக இழந்த அழகைத் திரும்பத் தந்து, பிறகு உன் சூளைக் கொண்டுசெல்" என்கிறாள்.

தொண்டி அன்னஎன் நலம்தந்து
கொண்டனை சென்மோ மகிழ்நநின் சூளே.*

வேங்கை மரம் மலர்ந்துள்ளபோது, சிறுவர் அதைச் சூழ்ந்துகொண்டு புலி புலி என்று கத்தி ஆரவாரம் செய்வது வழக்கம். (வேங்கை என்னும் சொல் புலியையும் குறிப்பது பற்றி இந்த வழக்கம் தோன்றியது போலும்.) மரத்தில் ஏறு மலே, கீழிருந்தே இவ்வாறு செய்யும் ஆரவாரம் கேட்டு, மரம் தானே வளைந்து மலர் தரும் என்பது அவர்களின் நம்பிக்கை. மகளிரும் இவ்வாறு செய்வது உண்டு.

---

*குறுந். 238. குன்றியன்.

தொண்டி - ஒரு துறைமுகப் பட்டினம்; அழகானது. அன்ன-(அது)போன்ற அழகிற் சிறந்த. கொண்டனை சென்மோ-கொண்டு செல்வாயாக. மகிழ்ந - தலைவ.

...புன்தலைச் சிறாஅர்
மன்ற வேங்கை மலர்பதம் நோக்கி
ஏறாது இட்ட ஏமப் பூசல்
*விண்தோய் விடரகத்து இயம்பும்...**

மலையில் நெடுங்காலம் வாழ்ந்து, இந்த ஆரவாரத்தைக் கேட்டறிந்த கபிலர் பாடியது இது. அந்தச் சிறுவர்களின் ஆரவாரத்தை அவர் வெறுக்கவில்லை. அவர்களின் பெருமகிழ்ச்சிக்குக் காரணமாக இந்த ஆரவாரம் விளங்குவதால், இன்பப் பூசல் (ஏமப் பூசல்) என்கிறார். இந்தப் பேரொலி விண்ணை அளாவிய மலைக்குகையில் எதிரொலிப்பதாகவும் கூறுகிறார்.

மடல் ஏறுதல் பற்றியும் ஒரு சில குறிப்புக்கள் குறுந்தொகைப் பாட்டுக்களில் உள்ளன.

பொன்னிறமான ஆவிரை மலர் தொடுத்த நூல்மாலை அணிதல், பனைமரத்தால் (பனை மடல்களால்) ஆகிய குதிரை மேல் கட்டிய மணிகள் ஒலிக்க ஏறி நாணத்தை விட்டு இருத்தல், உள்ளத்தே காதல்நோய் மிக இன்ன பெண் செய்த துன்பம் இது என்று ஊரார் அறியச் செய்தல்: இவை மடல் ஏறும் முறை.

பொன்ஏர் ஆவிரைப் புதுமலர் மிடைந்த
பல்நூல் மாலைப் பனைபடு கலிமாப்
பூண்மணி கறங்க ஏறி நாண்அட்டு
அழிபடர் உள்நோய் வழிவழி சிறப்ப

---

*குறுந். 241, கபிலர்.

புன்தலை - சிறிய தலை. சிறாஅர் - சிறுவர். ஏம - இன்பமான. பூசல் - ஆரவாரம். விடரகத்து - மலைப்பிளப்பில். இயம்பும் - எதிரொலிக்கும்.

இன்னாள் செய்தது இதுஎன முன்நின்று
*அவள்பழி நுவலும் இவ்வூர்...**

மடல் ஏறுகின்றவன் எருக்கம்பூ மாலையைச் சூடுதலும் உண்டு.

மாஎன மடலும் ஊர்ப; பூஎனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப...†

பனைமரத்தின் முதிர்ந்த மடல்களால் குதிரை செய்தல், மணிகள் பூட்டுதல், வெண்மையான எலும்புகளை அணிதல், பிறர் எள்ளுமாறு ஊரில் தோன்றுதல், நாண் நீங்க ஒருநாள் தெருவில் இயங்குதல்: இவற்றைக் கூறுகிறார் புலவர் ஒருவர்.

விழுத்தலைப் பெண்ணை விளையல் மாமடல்
மணியணி பெருந்தார் மரபின் பூட்டி
வெள்ளென்பு அணிந்துபிறர் எள்ளத் தோன்றி
ஒருநாள் மருங்கின் பெருநாண் நீங்கித்
தெருவின் இயல்வு...‡

---

*குறுந். 173. மதுரைக்காஞ்சிப் புலவன்.

மிடைந்த - கலந்த. கலிமா - செருக்குள்ள மிருகம், குதிரை. கறங்க - ஒலிக்க. அட்டு - அழித்து. படர் - நினைப்புத்துன்பம். நுவலும் - கூறும்.

†குறுந். 17. பேரெயின் முறுவலார்.

மா - குதிரை. ஊர்ப - ஊர்ந்து செல்வார்கள். குவிமுகிழ் - குவிந்த அரும்புகளை உடைய. கண்ணி - மாலை.

‡குறுந். 182. மடல்பாடிய மாதங்கீரன்.

விழு - சிறந்த. தலை - உச்சி. பெண்ணை - பனை. விளையல் - முதிர்ந்த. இயல்வு - இயலுதல், இயங்குதல்.

இவ்வாறு மடல் ஏறுதலைக் குறித்துப் பாடிய காரணத்தால், மாதங்கீரன் என்னும் இப் புலவர், மடல் பாடிய மாதங்கீரன் என்று சிறப்பிக்கப் பெற்றார்.

தினைப்புனத்தில் தினை விளைந்தால், முதலில் சில கதிர்களைத் தெய்வத்திற்குப் படைப்பது வழக்கம். அந்தக் கதிர்களை யாரும் உண்ணுதல் கூடாது. ஒரு மயில் அங்கே வந்து, தெய்வத்திற்குப் படைத்த கதிர்கள் என்று அறியாமல் அவற்றை உண்டது. அதனால் அதற்கு நடுக்கம் ஏற்பட்டதாம். நடுங்கி ஆடும் அந்த மயில், (ஆடுகின்ற மகளாகிய) விறலி தெய்வம் ஏறி ஆடுவது போல் தோன்றியதாம்.

புனவன் துடவைப் பொன்போற் சிறுதினைக்
கடிஉண் கடவுட்கு இட்ட சில்குரல்
அறியாது உண்ட மஞ்ஞை ஆடுமகள்
வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்...*

மகள் நோயுற்று மெலிவதைக் கண்ட பெற்றோர், அதற்குத் தெய்வம் காரணம் என உணர்ந்து, வெறியாட்டு நிகழ்த்துவது உண்டு. ஆட்டின் கழுத்தை அறுத்தல், தினையைப் பிரப்பு வைத்தல், ஆற்றிடைக் குறையிலே (அல்லது நாற்சந்தியிலே முச்சந்தியிலே) பல இசைக்கருவிகள் முழங்கச் செய்தல், தெய்வத்தை வாழ்த்துதல், இவள் பேய் கொள்ளப்பட்டாள் என்று கூறுதல் முதலியவை அக்காலத்தில் இருந்தன.

---

*குறுந். 105, நக்கீரர்.

புனவன் - தினைப்புனத்துக் குறவன். துடவை - தோட்டம். கடி-புதிய பலி. குரல் - தினைக்கதிர். வெறி - தெய்வம் ஏறுதல். வெய்துற்று - வெம்மையுற்று.

மறிக்குரல் அறுத்துத் தினைப்பிரப்பு இரீஇச்
செல்லாற்றுக் கவலைப் பல்லியம் கறங்க
தெய்வம் பலவுடன் வாழ்த்திப்
*பேஎய்க் கொளீஇயள் இவள்எனப் படுதல்.**

அப்போது அரளிமாலை சூட்டி வேலன் முருகன் என்று ஆரவாரம் செய்வது உண்டு.†

மகள் இவ்வாறு மெலிந்தபோது, வேலன் என்னும் பூசாரியை அழைத்துக் காரணம் கேட்பதும், அவன் இது முருகனால் வந்தது எனக் கூறுதலும் உண்டு.

மென்தோள் நெகிழ்த்த செல்லல் வேலன்
வென்றி நெடுவேள் என்னும்...‡

பலவேறு நிறமுடைய சோற்றைப் படைத்துச் சிறிய ஆட்டைக் கொன்று, தலைவியின் நெற்றியை நீவி, வேலன் என்னும் பூசாரி முருகனை வணங்கி வழிபடுதல் உண்டு.

பல்வேறு உருவின் சில்அவிழ் மடையொடு
சிறுமறி கொன்றுஇவள் நறுநுதல் நீவி
வணங்கினை கொடுத்தி...§

ஊர்மன்றத்தில் உள்ள செங்கடம்ப மரத்தில் தெய்வம் வாழ்வதாகவும், அது அஞ்சத்தக்க தெய்வம் என்பதாகவும்

*குறுந். 263. பெருஞ்சாத்தன்.

குரல் - கழுத்து. இரீஇ - இருக்கச்செய்து, பரப்பி. கொளீஇயள் - கொள்ளப்பட்டாள்.

†குறுந். 214. கூடலூர்கிழார்.

‡குறுந். 111. தீன்மிதி நாகன்.

§குறுந். 362. வேம்பற்றூர்க் கண்ணன் கூத்தன்.
அவிழ் - சோறு. மடை - பலி.

நம்பிக்கை இருந்தது. அது கொடியவர்களைத் துன்புறுத்தி ஒறுக்கும் என்று கூறிவந்தனர்.

தலைவன் சொன்ன உறுதிமொழியின்படி வரத் தவறினான். தனக்குத் துன்பம் விளைத்த காரணத்தால் தெய்வம் ஒறுக்குமே என அஞ்சுகிறாள் தலைவி. தலைவன் சொன்ன சொல்லின்படி வரத் தவறிய காரணத்தால் தெய்வத்தின் ஒறுப்புக்கு ஆளாக நேருமே என்று தலைவி வருந்துகிறாள். தெய்வத்திடமே சென்று முறையிடுகிறாள். "என் காதலர் கொடியவர் அல்லர். ஆதலால் அவரை வருத்த வேண்டா. அவருடைய பிரிவுத் துயரத்தால், என் நெற்றி பசலையுற வில்லை. யானே அவரை விரும்பினேன்; அந்த விருப்பத்தால் ஏற்பட்ட பசலை இது. அவர் செய்த பிரிவுக் கொடுமையால் தோள் மெலியவில்லை. என் உள்ளம் அன்பால் நெகிழ்ந்தமையால் தோளும் நெகிழ்ந்து மெலிந்தது" என்கிறாள்.

மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம் என்ப; யாவதும்
கொடியர் அல்லர்எம் குன்றுகெழு நாடர்;
பசைஇப் பசந்தன்று நுதலே;
*ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தடமென் தோளே.**

தமிழ்நாட்டில் பழங்காலத்தில் ஆலமரம் முதலிய மரங்களின் அடியில் மன்றங்கள் அமைந்து, மக்களின் வழக்

*குறுந். 87. கபிலர்.

மராஅத்த - மரா மரத்தில் உள்ள. பேஎம் - அச்சம். தெறூஉம் - தண்டிக்கும், துன்புறுத்தும். பசைஇ - விரும்பியதால். பசந்தன்று - பசந்தது. ஞெகிழ்ந்தன்று - நெகிழ்ந்தது.

கைக் கேட்டு நீதி வழங்கிவந்தன. ஒரு காலத்தில் கோசர் என்னும் பெயரினர் சிலர் நீதி வழங்குவதில் பிறழாதவர்களாய் உண்மையாளர்களாய்ப் புகழ்பெற்று விளங்கினர். நான்கு ஊர்களிலிருந்து வந்து ஓர் இடத்தில் கூடி நீதி வழங்கிய காரணத்தாலோ, அல்லது நாலூர் என்ற ஊரைச் சார்ந்தவர்களாக இருந்த காரணத்தாலோ அவர்கள் நாலூர்க் கோசர் என்று கூறப்பட்டனர். அவர்கள் நீதி வழங்க அமரும் இடம் பழைய ஆலமரத்தின் அடியே ஆகும். நீதி வழங்க அவர்கள் வரும்போது, அங்குப் பறைகள் ஒலிக்கும்; சங்குகள் முழங்கும். அவர்கள் கூறும் தீர்ப்பில் மக்களுக்குப் பெருநம்பிக்கை இருந்தது. அவர்கள் மொழி உண்மை பிறழாதது. ஆகையால் உண்மையான செய்தி ஒன்றைக் கூறும்போது, கோசரின் நன்மொழி போல் உண்மையாயிற்று என்று உவமை அமையும் நிலை இருந்தது.

பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு
தொன்முது ஆலத்துப் பொதியில் தோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாய்ஆ கின்றே...*

அந்தக் கோசர் யார்க்கும் அஞ்சாமல், நாட்டை ஆள்பவர்க்கும் அஞ்சாமல், வழக்குகளைப் பற்றி ஆராய்ந்து உறுதிபெறத் தீர்ப்பு மொழிந்துவந்தார்கள். நன்னன் என்னும் குறுநில மன்னனுடைய காவல்மரமாகிய மாமரத்

*குறுந் 15. ஔவையார்.

பணிலம் - சங்கு. இறைகொள்பு - தங்குதல் கொண்டு, தங்கி. பொதியில் - மன்றம். வாய் - வாய்மை - உண்மை. ஆகின்று - ஆயிற்று.

தைப் பகைவர் வெட்டிப் போர் நிகழ்த்திக் கொடுமைசெய்த போது, அவர்கள் செய்த கொடுமையைக் கோசர் அஞ்சாமல் கடிந்து கூறினர்.

வாழ்க்கையில் அன்புடையவர்களிடத்தில் உள்ளம் நெகிழ்ந்து பழகியபோதிலும்,சிலவேளைகளில் கடமை தவறி அவர்கள் நடக்கும்போது அவர்களைத் திருத்தி நெறிப்படுத்துவதற்காகக் கோசர்போல் அஞ்சாமல் எண்ணிப் பார்த்துக் கூறும் திறமும் சிறிது வேண்டும் என ஒரு பாட்டுக் கூறுகிறது:

...நன்னன்
நறுமா கொன்ற ஞாட்பிற் போகிய
ஒன்றுமொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே.*

பழங்காலத்தில் கல்வியில் தேற விரும்பும் இளைஞர் சிலர், (பிரமசாரிகளாய்) இல்லாதவர்போல் ஏங்கிக் கற்று வந்தார்கள். ஊரார் இடும் உணவை இரந்து பெற்று உண்டு கற்பதே கடமையாகக் கொண்டிருந்தார்கள். உணவு தேடும் முயற்சிக்காகத் தொழில் செய்து காலம் கழித்தால், கல்விக்கு இடையூறுகும் என்ற எண்ணத்தால், அவர்களுக்கு உணவுக்கவலையைத் தீர்க்கும் பொறுப்பை ஊரார் மேற்கொண்டனர் போலும். (இக்காலத்து மாணவர்க்கு இலவசச் சம்பளமும் இலவச உணவும் உள்ளது போன்றது இது.) இவ்வாறு இரந்து உண்ட இள மாணுக்கர்கள்,

---

*குறுந். 73. பரணர்.

மா - மாமரம். கொன்ற - வெட்டிய. ஞாட்பு - போர். வன்கண் - அஞ்சாமை. சூழ்ச்சி - ஆராய்ந்து கூறுதல்.

செவிக்கு உணவு இல்லாதபோழ்து வயிற்றுக்குச் சிறிது ஈந்துவந்தமையால், மெலிந்த உடம்போடு (நிரம்பா மேனி யோடு) இருந்தார்கள். கண்டது கற்கும் ஆர்வத்தால் ஓர் இடத்தில் நிற்காமல் புதிய இடங்களை நாடிச் சென்று வந்தார்கள். அவர்களுக்கு அக்காலத்தில் ஒரு வகைப் பெருமையும் இருந்துவந்தது.

பாணனைப் பார்த்து எள்ளிய வாய்பாட்டால் தலைவி கடிந்து கூறுவதாக அமைந்த பாட்டில் இது உள்ளது.

> அன்னாய் இவன்ஓர் இளமா ணாக்கன்...
> இரந்தூண் நிரம்பா மேனியொடு
> விருந்தின் ஊரும் பெருஞ்செம் மலனே.*

அறிவர் என்னும் பெயருடையவராய்த் துறவிகள் சிலர் பழங்காலத்தில் இருந்துவந்ததாக அறியப்படுகிறது. அவர்களுக்கு அந்தணர் முதலியோர் வாழும் தெருக்களில் நாய் இல்லாத பெரிய வீடுகளில் நல்ல வகையில் சோறு கிடைக்கும். பல வீடுகளில் இரந்து வாழ்வதோடு அல்லாமல், சில நாட்களில் ஒரே வீட்டில் வயிறார நல்ல விருந்து கிடைக்குமாம். பனிக்காலத்தில் பருகுவதற்கு வெந்நீர் கிடைக்குமாம். வேண்டும்போது பருகுவதற்காகத் தம்மிடம் ஒரு செப்பு (சொம்பு) வைத்திருந்து அதில் வெந்நீர் பெற்றுக்கொள்வார்களாம்.

தலைவனுடைய வருகையைப் பற்றியும் பிற செய்திகளைப் பற்றியும் சில வேளைகளில் இந்த அறிவர் அறிந்து உரிய

---

*குறுந். 33. படிமாத்து மோசிகீரனார்.

இரந்து ஊண் - இரந்து உண்ணுதல். விருந்தின் - புதுமை காரணமாக. ஊரும் - செல்லும். செம்மல் - தலைமை.

வர்க்கு அறிவிப்பது உண்டு. 'உனக்கு நல்ல விருந்து வாய்ப்பதாக' என்று அதற்காக ஓர் அறிவரைத் தோழி வாழ்த்துவதாக ஒரு பாட்டு உள்ளது.

ஆசில் தெருவில் நாய்இல் வியன்கடை
செந்நெல் அமலை வெண்மை வெள்ளிழுது
ஓர்இல் பிச்சை ஆர மாந்தி
அற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்
சேமச் செப்பில் பெறீஇயரோ நீயே...*

ஓர் இல்லத்துப் பிச்சை பெற்று நன்கு உண்டு மகிழ்வீராக என்று வாழ்த்திய சிறப்புப் பற்றிப் புலவர்க்கு ஓரிற் பிச்சையார் என்ற பெயர் அமைந்தது.

நன்னன் என்ற பெயருள்ள குறுநில மன்னன் ஒருவனுடைய தோப்பிலிருந்து ஒருகாய் வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போகப்பட்டது. நீராடுவதற்காகச் சென்ற ஒரு பெண் அந்தக் காயை எடுத்துத் தின்றுவிட்டாளாம். அதை அறிந்த நன்னன் பெரிய குற்றமாகக் கருதி அவளுக்குக் கொலைத் தண்டனை விதித்தான். அவளுடைய தந்தை எவ்வளவோ முறையிட்டும் பயனில்லையாயிற்று ; எண்பத்தொரு யானையும் அவளுடைய எடையுள்ள பொன்னால் செய்த பாவையும் கொடுப்பதாகக் கூறியும் நன்னன் இசையாமல் கொலைசெய்தானாம்.

---

*குறுந். 277, ஓரிற் பிச்சையார்.

ஆசுஇல் - குற்றம் இல்லாத. வியன் - அகன்ற. கடை - வாயில். அமலை - சோற்றுத்திரள். இழுது - நெய். சேம - பாதுகாப்பான.

தமிழ்நாட்டின் தூய வரலாற்றில் - அறமே போற்றும் அரச மரபுகளைப் பெற்றுத் திகழ்ந்த தமிழ்நாட்டு வரலாற்றில் - இது ஒரு மாசாக உள்ளது.

நெறி தவறும் வேந்தர்களைக் கடிந்து திருத்தத் தயங்காத புலவர்களை உடைய பெருமையும் தமிழ்நாட்டிற்கு உண்டு. இந்தக் கொடுமை செய்த நன்னனைப் பரணர் கடிந்து தூற்றுகிறார். அவனுக்கு நரகமே கிடைக்கும் என்கிறார்.

காதல்வாழ்வுக்கு இடையூறு செய்பவரைக் கடிந்து வெறுக்கும் ஒருத்தியின் கூற்றாக உள்ள பாட்டில், நன்னன் போல் இந்தக் கொடியவளும் மீளா நரகம் சேர்வாளாக என்று பழித்தல் உள்ளது.

மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை
புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற் றொன்பது களிற்றொடு அவள்நிறை
பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்துச் செலீஇயரோ...*

பயணம் செய்யும்போது நிமித்தம் (சகுனம்) பார்க்கும் வழக்கமும் பழங்காலத்தில் ஓரளவு இருந்தது.

வயது முதிர்ந்த ஆண் ஓணானின் முதுகு அரிவாள் போன்றது. அது பாலைவழியில் அஞ்சி அஞ்சிச் செல்லும்

---

*குறுந். 292, பரணர்.

மண்ணிய - நீராட. ஒண்ணுதல்-ஒளியுள்ள நெற்றி. அரிவை-பெண். புனல் - நீர், வெள்ளம். தப்பற்கு - தப்புக்காக. நிறை - எடை. வரையா - நீங்கல் இல்லாத. நிரையம் - நரகம்.

மக்கள் நிமித்தம் கொள்வதற்கு (சகுனம் பார்ப்பதற்கு) உதவியாக இருக்குமாம்.

> *வேதின வெரிநின் ஓதி முதுபோத்து*
> *ஆறுசெல் மாக்கள் புட்கொளப் பொருந்தும்*
> *சுரன்...**

---

*குறுந். 140. அள்ளூர் நன்முல்லையார்.

வேதினம் - அரிவாள். வெரிந் - முதுகு. வெரிநின்-முதுகை உடைய. ஓதி - ஓணன். போத்து - ஆண். புள் - நிமித்தம், சகுனம். சுரன் - பாலைவழி.

குறிக்கோள்

பழந்தமிழ் மக்களின் வாழ்க்கையில் உயரிய குறிக்கோள் பல இருந்தன. அவற்றுள் சிலவற்றைக் குறுந்தொகைப் பாட்டுக்கள் தெரிவிக்கின்றன.

ஒரு வீட்டுக்கு நாள்தோறும் இரவலர் பலர் வந்து உதவி பெற்றுப் போவது பெருமையாகவும், அவர்கள் வாராமலிருப்பது வாழ்க்கையின் சிறுமையாகவும் கருதப்பட்டுவந்தன.

" உன்னைப் பிரியமாட்டேன் " என்று தலைவிக்கு அறிவுறுத்தும் தலைவன் கூறும் உறுதிமொழி சூள் (வஞ்சினம்) போல் அமைந்துள்ளது. "உன்னை விட்டுப் பிரிந்து வாழ்வேனானால், யான் மேற்கொள்ளும் கடமையுடன் வாழும் வாழ்வில் இரவலர் என்னைவிட்டு நீங்கி வாராமல் நிற்கும் நாட்கள் பல ஆகுக " என்கிறான்.

நின் துறந்து அமைகுவெ னாயின் என் துறந்து
இரவலர் வாரா வைகல்
*பலஆ குகயான் செலவுறு தகவே.**

முன்னோர் தேடிவைத்துள்ள பொருளைச் செலவு செய்து அழிப்பவர்கள், பொருள் உள்ளவர்களாக மதிக்கப்படமாட்டார்கள் ; பொருள் இல்லாதவர்களின் வாழ்க்கையோ இரந்து உயிர் வாழ்வதைவிட இழிவானது.

---

*குறுந். 137. பாலைபாடிய பெருங்கடுங்கோ.

அமைகுவெனாயின் - வாளா இருப்பேனானால். வைகல்-நாள். தகவு - தக்க கடமையில்.

உள்ளது சிதைப்போர் உளர்எனப் படாஅர்
இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு...*

தலைவன் வெளிநாட்டுக்குச் சென்று பொருள்தேட முனைந்து பிரியும்போது இவ்வாறு கூறிப் பிரிகிறான். அவன் உள்ளத்தில் மதிப்பான வாழ்க்கை பற்றி உள்ள கொள்கையை இது காட்டுகிறது.

பரந்த உலகில் பழகுபவன் ஆண்மகன்; அங்குக் கடமையைப் போற்றுதல் அவனுடைய இயற்கை. அவனுக்காக வீட்டில் வாழ்பவள் மனைவி; அவனுக்குப் பல வகையிலும் துணையாக இருந்து உதவுபவள் அவள்.

ஆடவர்க்குக் கடமையே உயிர்; மகளிர்க்கு அந்த ஆடவரே உயிர்.

வினையே ஆடவர்க்கு உயிரே; வாணுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்...†

தலைவன் பொருள் தேடும் நோக்கத்தோடு வெளிநாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றபோது இவ்வாறு கூறிப் பிரிந்தானும். 'நீ அவரை உயிராகக் கொண்டிருப்பது அவருக்கு நன்றாகத் தெரியும். ஆகையால் நீ அழாதே தோழி! வந்துவிடுவார்' என்று தோழி தலைவியைத் தேற்றும்போது இவ்வாறு தலைவன் சொன்னதை நினைவூட்டுகிறாள்.

இல்லை என்று துன்பத்தால் வருந்தி இரந்து கேட்ட ஒருவர்க்குக் கொடுத்த பொருளைத் திரும்பப் பெறக்கூடாது.

---

*குறுந். 283. பாலைபாடிய பெருங்கடுங்கோ.

†குறுந். 135. ஷை.

வினை - மேற்கொண்ட தொழில், கடமை. வாணுதல் - வாள் நுதல் - ஒளி பொருந்திய நெற்றி.

திரும்பக் கொடுக்குமாறு கேட்கக் கூடாது. அவ்வாறு கேட்பதைவிட உயிரையே விட்டுவிடலாம்.

இடுக்கண் அஞ்சி இரந்தோர் வேண்டிய
கொடுத்தவை தாஎனச் சொல்லினும்
இன்னா தோநம் இன்னுயிர் இழப்பே.*

தலைவனால் தலைவியின் அழகு போயிற்று; அவன் கைவிட்டுப் பிரிந்த காரணத்தால் அவள் வாடி மெலிந்தாள். இதை அவனுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும் என்கிறாள் தோழி. இவ்வாறு எடுத்துக்கூறி, அவனால் இழந்த செய்தியைச் சொல்வதைவிட, துன்பத்தால் வருந்தி உயிர் துறக்கலாம் என்கிறாள் தலைவி.

துன்பத்தைத் தீர்க்காவிட்டாலும் அஞ்ச வேண்டா என்று ஆறுதல் கூறுகின்றவர் (கிரகண காலத்தில்) பாம்பு விழுங்கிடும் மதியைப் பார்த்து இந்த நிலவுலகத்தில் இருந்தபடியே இரக்கம் கொள்வோர் போன்றவர்.

அரவுநுங்கு மதியிற்கு இவணோர் போலக்
களையார் ஆயினும் கண்ணினிது படீஇயர்
அஞ்சல் என்மரும்...†

---

*குறுந். 349, சாத்தன்.

இடுக்கண்-துன்பம். சொல்லினும்-சொல்வதைவிட. இழப்பு-இழத்தல்.

†குறுந். 395.

அரவு - பாம்பு. நுங்கு - விழுங்குகிற. இவணோர் - இவ்வுலகத்தார். கண் இனிது படீஇயர் - இனிது கண்பட - இனிது உறங்க. என்மர் - என்போர்.

சிறந்த நீதிகள் சில பாட்டுக்களில் பேசுவோரின் பேச்சுக்கிடையே எடுத்துக்கூறப்படுகின்றன. அறிந்த நீதிகளே ஆயினும் அவை பாட்டில் அமைந்துள்ள இடங்கள் அவற்றிற்கு மேலும் சிறப்புத் தருகின்றன.

எடுத்துக்காட்டாக :

சான்றோர், பிறர் தம்மைப் புகழ்வதற்கு முன்னும் நாணுவார்கள். புகழ்ச்சியைத் தாங்கமுடியாத அவர்கள், பழியை எவ்வாறு தாங்குவார்கள் ?

...சான்றோர்
புகழும் முன்னர் நாணுப
பழியாங்கு ஒல்பவோ காணுங் காலே.*

தலைவன் நெடுநாள் பிரிந்து திரும்பிவரும்போது, தோழி அவனைக் கடிந்து கூறும் மனப்பான்மையோடு இருக்கிறாள். அதை உணர்ந்த தலைவி, "அவர் வந்ததும் நீ கடிந்துரைக்காதே. புகழ்ந்தாலும் நாணும் இயல்பை உடைய சான்றோர், பழித்துக்கூறும் சொல்லை எவ்வாறு தாங்கமுடியும் ?" என்கிறாள்.

***குறுந். 252. கிடங்கிற் குலபதி நக்கண்ணன்.**

நாணுப - நாணுவார்கள். யாங்கு - எவ்வாறு. ஒல்ப - இசைந்திருப்பார்கள்.

கேளாத பேச்சு

வாடைக் காற்று, மழை, ஆறு, கடல், தும்பி, முல்லைக் கொடி முதலியவற்றை நோக்கித் தலைவன் முதலானோர் விளித்துக் கூறும் பாட்டுக்கள் சில குறுந்தொகையுள் உள்ளன. பேசாத இப்பொருள்களை நோக்கிப் பேச்சு நிகழ்கின்றது. மனித உணர்ச்சி அற்ற இவைகள் இங்கு உள்ள கற்பனையில் அத்தகைய உணர்ச்சி உடையவைகளாக விளங்குகின்றன.

பிரிந்துள்ள தலைவன், வாடைக்காற்று வீசும்போது தலைவி தன்னை நினைந்து மிக வருந்துவாளே என எண்ணி நோகின்றான். "வாடைக்காற்றே! புல் வேய்ந்த குடிசைகளை உடைய தலைவியின் ஊர்ப்பக்கமாக வீசாதே! அந்த ஊரை விட்டுவிடு" என்கிறான்.

ஓம்புமதி வழியோ வாடை !...
புல்வேய் குரம்பை நல்லோள் ஊரே *

தலைவி மழையை நோக்கிப் பின்வருமாறு கூறுகிறாள்.

"கடிய வேகத்தை உடைய இடியின் அதிரும் குரலுடன் பொருந்திக் காற்றோடு வந்த நிறைந்த சூல்கொண்ட பெருமழையே! உனக்குக் கருணை இல்லையோ? பெரும் புகழ் உடைய இமய மலையையும் அசைக்க வல்ல ஆற்றலோடு இருக்கிறாய். யாங்களோ துணையில்லாதவர்கள்;

---

*குறுந். 235. மாயேண்டன்.

ஓம்பு - விடு. மதி - முன்னிலையில் வரும் அசை. குரம்பை - குடிசை.

இரங்கத் தக்கவர்கள் ; பெண்கள். எங்களிடத்தில் இத் தகைய கடுமை ஏனோ ?"

கடுவிசை உருமின் கழறுகுரல் அளை இக்
காலொடு வந்த கமஞ்சூல் மாமழை !
ஆரளி இலையோ ? நீயே பேரிசை
இமயமும் துளக்கும் பண்பினை
*துணையிலர் அளியர் பெண்டிர் இஃது எவனோ ?**

அன்பில்லாதவன் என்று தோழி தலைவனைப் பழிக்கும் கருத்தோடு ஓர் ஆற்றைப் பழிக்கும் கூற்று வருமாறு :—

"மலைநாட்டுத் தலைவனைவிட உன் நிலைமை மிகக் கொடியது. தீய ஆறே ! நம் வீட்டு இளமகளாகிய தலைவி இது போன்ற மென்மைத் தன்மை உடையவள் என்றும் இரங்கத்தக்கவள் என்றும் நீ சிறிதும் எண்ணிப் பார்க்காமல், மலைப்பகுதி அழகு இழக்குமாறு அங்கு இருந்த வாழையைப் புரட்டிக்கொண்டு வந்துவிட்டாயே !"

குன்ற நாடன் தன்னினும் நன்றும்
நின்நிலை கொடிதால் ; தீய கலுழி !
நம்மனை மடமகள் இன்ன மென்மைச்
சாயல் அளியள் என்னாய்
வாழைதந் தனையால் சிலம்புபுல் லெனவே.†

---

*குறுந். 158. ஔவையார்.

விசை - வேகம். அளை இ - கலந்து. கால் - காற்று. கமம் - நிறைந்த. ஆர்அளி - நிறைந்த கருணை. இசை - புகழ். துளக்கும்- அசைக்கும். அளியர் - இரங்கத்தக்கவர்.

†குறுந். 327. அம்மூவனார்.

நன்றும் - பெரிதும், மிகவும். கொடிதால் - கொடிது. கலுழி - ஆற்றுவெள்ளம். சிலம்பு - மலைப்பகுதி. புல்லென-அழகு அழிய.

கடற்கரையை அடுத்த ஊரில் நள்ளிரவில் தலைவி வருந்துகிருள். அருளின்றித் தலைவன் பிரிந்தமை நினைந்தும் தன் நிலையை நினைந்தும் வருந்தும்போது, அவளுடைய செவியில் கடலின் ஒலி கேட்கிறது. தன்னைப் போல் கடலும் உறங்காமல் வருந்திப் புலம்புவதாக எண்ணி அதனை நோக்கிக் கூறுகிருள்.

"யாரால் வருந்துகிருய், கடலே! நள்ளிரவிலும் உன் குரல் கேட்கிறதே."

யார்அணங் குற்றனை கடலே...
நள்ளென் கங்குலும் கேட்கும்நின் குரலே.*

தலைவியை நாடித் திரும்பிவரும் தலைவனும் முல்லையரும்புகளைப் பார்த்து இவ்வாறு எண்ணுகிருன். அவன் விரைந்து திரும்பும் முல்லை நிலத்தில் கார்காலத்துப் புதுமழை பெற்ற முல்லைக்கொடி சிறு சிறு அரும்புகள் வெண்மையாகப் பெற்று விளங்குவதைக் காண்கிருன். "முல்லைக் கொடியே! நீ சிறு வெண் முகைகளால் என்னை நோக்கிச் சிரிக்கிருய். என்போல் துணைபிரிந்து தனியாக உள்ளவர்களை எள்ளி நகைப்பது போல் காட்டுதல் தகுமோ?" என்கிருன்.

முல்லை வாழியோ முல்லை! நீநின்
சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை
நகுவை போலக் காட்டல்
தகுமோ மற்றிது தமியோர் மாட்டே.†

---

*குறுந். 163. அம்மூவனுர்.

அணங்குற்றனை - வருத்தப்பட்டாய்.

†குறுந். 162. கருவூர்ப் பவுத்திரன்.

முகையின் - அரும்புகளால். தமியோர்மாட்டு - தனித்தவரிடத்தில்.

பறவை விலங்குகளின் வாழ்க்கை

பறவை விலங்குகளின் வாழ்க்கைகளை ஆங்காங்கே புலவர்கள் எடுத்துரைத்துள்ள பகுதிகள் சுவைபட அமைந்துள்ளன. காண்பதற்கு அரிய அன்றில், கணந்துள் முதலிய பறவைகளும் அவர்களின் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. எல்லோரும் கண்டு பழகும் ஊர்க்குருவி, கோழி, கொக்கு, வௌவால் முதலியனவும் இடம் பெற்றுள்ளன. காட்டில் திரியும் யானை மான் முதலியவைகளைப் போலவே, நாட்டில் உள்ள எருமை பசு முதலியனவும் பாடப்பட்டுள்ளன.

அன்றில், தடாமரத்தில் உயர்ந்த கிளையில் கூடு கட்டி வாழும். ஆண் அன்றிலின் உச்சி நெருப்புப் போல் செந்நிறமாக இருக்குமாம். பெண் அன்றிலைப் பற்றிக் கூறும் புலவர், வாய் (அலகு) இறாமீன் போல் வளைவாக இருக்கும் என்கிறார். நள்ளிரவில் அவை ஒலிக்கும் ஒலி, காதலரைப் பிரிந்தவரின் செவியில் கேட்பின், அவர்கள் வருந்திச் சோர்வுறுவார்களாம்.

நெருப்பின் அன்ன செந்தலை அன்றில்
இறவின் அன்ன கொடுவாய்ப் பெடையொடு
தடவின் ஓங்குசினைக் கட்சியில் பிரிந்தோர்
கையற நரலும் நள்ளென் யாமம்...*

கணந்துள் என்பது ஒருவகைப் பறவை. அது மலை வழியில் ஆற்றின் பக்கத்தே கூட்டமாக வாழும். அழகான சிறகு

---

*குறுந். 160. மதுரை மருதனிள நாகனார்.

இறவின் - இறாமீன் போல். கொடு - வளைந்த. சினை - கிளை. கட்சி - கூடு. கையற - வருந்திச் சோருமாறு. நரலும் - ஒலிக்கும்.

களையும் நீண்ட கால்களையும் உடையது. மலைவழியில் புதிதாக வருவோர்க்கு இடையூறு நேராதபடி, போகும்வழியில் கள்வர்கள் இருப்பதை அறிவுறுத்துமாம். அந்த அறிவிப்புக்கு உரிய அதன் ஒலியைக் கேட்டு வழியில் போகிறவர் போகாமல் திரும்பிவிடுவார்களாம்.

> ஆற்றயல் இருந்த இருந்தோட்டு அஞ்சிறை
> நெடுங்கால் கணந்துள் ஆள்அறி வுறீஇ
> யாறுசெல் வம்பலர் படைதலை பெயர்க்கும்
> மலையுடைக் கானம்...*

வீட்டில் வாழும் பெட்டைக் கோழிகள் மாலையில் (முன்னிரவில்) வேலிப்பக்கமாகக் காட்டுப் பூனைக்கூட்டம் வருவதைக் காண்கின்றன. அவற்றிற்கு இரையாகாமல் தப்பிப் புகும் பாதுகாப்பான இடம் அறியாமல், எல்லாம் ஒருசேரக் கூடித் தம் குஞ்சுகளை (தம்மை விட்டு அகலாதவாறு) அழைத்துக்கொள்கின்றன.

> மனையுறை கோழிக் குறுங்காற் பேடை
> வேலி வெருகினம் மாலை உற்றெனப்
> புகுமிடன் அறியாது தொகுபுஉடன் குழீஇப்
> பைதல் பிள்ளைக் கிளைபயிர்ந் தாஅங்கு...*

---

*குறுந். 350 ஆலத்தூர்கிழார்.

இரு-பெரிய, கரிய. தோடு-தொகுதி, கூட்டம். அறிவுறீஇ-அறிவுறுத்தி. வம்பலர் - புதியவர். தலைபெயர்க்கும் - திருப்பியனுப்பும்.

*குறுந். 139. ஒக்கூர் மாசாத்தியார்.

குறுங்கால் - குறுகிய கால்களை உடைய. வெருகு இனம் - காட்டுப்பூனைக் கூட்டம். தொகுபு - தொகுதியாகி. பைதல் - வருத்தம். பிள்ளை - குஞ்சு. கிளை - சுற்றம். பயிர்தல் - அழைத்தல்.

கரிய கால்களை உடைய வெண்ணிற நாரைகள் கழியில் மீன்களைத் தேர்ந்து உண்டு தங்கியிருக்கின்றன. பிறகு கரையில் தாழைமரத்தில் கூட்டமாகக் கூடியிருந்து, கடல் அலைகளின் ஒலியினால் தூங்கும்.

கழிதேர்ந்து அசைஇய கருங்கால் வெண்குருகு
அடைகரைத் தாழைக் குழீஇப் பெருங்கடல்
உடைதிரை ஒலியின் துஞ்சும்..*

பிரிந்த தலைவனை நினைந்து தலைவி வருந்துகிறாள். மாலைக் காலத்தில் எவ்வாறேனும் ஆற்றியிருக்க வேண்டும் என்று முயற்சி இருந்தும் பயன்படவில்லை. தலைவன் தன்னுடன் வீட்டிலிருந்து மகிழ வழி இல்லையே என்று ஏங்குகிறாள். அந்த ஏக்கத்தை மறைத்து, தன் வீட்டில் உள்ள குருவி களின் வாழ்க்கையை எடுத்துக்கூறி, அதனால் தன் ஏக்கம் விளங்குமாறு அமைக்கிறாள்.

வீட்டில் வாழும் குருவிகள் வீட்டு முற்றத்தில் உலர்த் தப்படும் தானியங்களைத் தின்று, பிறகு ஊர்மன்றத்தில் நுண்ணிய தாதுக்களில் குடைந்து ஆடி, வீட்டிற்குத் திரும்பிவந்து இறவாணத்தில் உள்ள படுக்கையில் கிடக்கும் தம் குஞ்சுகளோடு தங்கி வாழ்கின்ற மாலைக்காலம் இது என்கிறாள்.

...மனையுறை குரீஇ
முன்றில் உணங்கல் மாந்தி மன்றத்து
எருவின் நுண்தாது குடைவன ஆடி

---

*குறுந். 303. அம்மூவனார்.

அசைஇய - தங்கிய, களைத்த. குழீஇ - கூடி. **உடைதிரை** - கரையில் மோதி உடையும் அலைகள்.

குறுந். 9

இல் இறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்
*புன்கண் மாலை...**

குருவிகள் வாழும் வாழ்க்கையும் தனக்கு வாய்க்கவில்லையே, அவற்றைப் போல் ஒருங்கே இருந்து உணவு தேடி, ஒருங்கே விளையாடி, ஒருங்கே இல்லறம் நடத்தி ஓர் இடத்தில் வாழும் வாழ்வு இல்லையே என ஏங்குகிறாள்.

ஊர்க்குருவிச் சேவல் துள்ளும்நடை உடையது. பெண் குருவி சூல்கொண்டபோது முட்டை இடுவதற்காகக் கூடு கட்டி இடம் அமைப்பதற்காக, இனிய கரும்பின் மணம் அற்ற வெண்ணிறப் பூவைச் சேவல் கொழுதிக்கொண்டு வரும்.

உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூல்முதிர் பேடைக்கு ஈனில் இழைஇயர்
தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாறா வெண்பூக் கொழுதும்...†

நீல நிறமான மெல்லிய சிறகுகளையும் கூரிய நகங்களையும் உடையது வௌவால் (வாவல்). அது பால் கலந்தாற் போன்ற இனிய மாம்பழத்தைத் தின்கிறது. பிறகு சுவை மாறுதலுக்காக நெல்லிமரத்திடம் சென்று புளிப்பான காய்

*குறுந். 46, மாமிலாடன்.

குரீஇ - குருவி. முன்றில் - இல்லின் முன்புறம். உணங்கல் - உலர்ந்த தானியம். மாந்தி - தின்று. எரு - சாணம். இறை - இறப்பு, இறவாணம். பிள்ளை - குஞ்சு. புன்கண் - துன்பம்.

†குறுந். 85, வடமவண்ணக்கன் தாமோதரன்.

சூல் - கருப்பம். ஈனில் - முட்டையிடும் கூடு. இழைஇயர் - கட்டுவதற்கு. தேம் - இனிமை. பொதிக்கொண்ட - பொதிந்து கொண்டுள்ள. தீ - இனிமை, கழை - கோல். நாறா - மணம் இல்லாத.

களைத் தின்கிறது. அடுத்துள்ள அழகிய மூங்கிலில் — முள் இல்லாத பருத்த மூங்கிலில் தொங்கி ஓய்வுகொள்கிறது.

பால்கலப் பன்ன தேக்கொக்கு அருந்துபு
நீல மென்சிறை வள்ளுகிர்ப் பறவை
நெல்லி அம்புளி மாந்தி அயலது
*முள் இல் அம்பணை மூங்கிலில் தூங்கும்...**

எருமை தன் கன்றினிடம் கொண்ட பேரன்பை விளக்குகிறது ஒரு பாட்டு.

அண்மையில் கன்று ஈன்ற எருமை அது; பெரிய கொம்புகளை உடையது. கன்றை உழவன் ஒரு தறியில் கட்டிவிட்டு, தாயை வெளியே மேயவிட்டான். தாய் எருமையோ, கன்றைவிட்டு நீங்க மனம் இல்லாமல், பக்கத்தில் உள்ள வயல் வரையிலுமே சென்று அங்குள்ள பசும்பயிரை மேய்ந்துவிட்டு உடனே கன்றினிடம் திரும்பி விடுகிறது.

இருமருப்பு எருமை ஈன்றணிக் காரான்
உழவன் யாத்த குழவியின் அகலாது
*பாஅல் பைம்பயிர் ஆரும்...**

---

*குறுந். 201.

தே - இனிமை. கொக்கு - மா. அருந்துபு - அருந்தி, தின்று. சிறை - சிறகு. உகிர் - நகம். மாந்தி - தின்று. பணை - பருத்த. தூங்கும் - தொங்கும்.

*குறுந். 181. கிள்ளிமங்கலங்கிழார்.

இரு - பெரிய, கரிய. மருப்பு - கொம்பு. ஈன்றணி - ஈன்ற அணிமை, ஈன்று பல நாள் ஆகாமை. கார்ஆன் - கருநிறப் பசு. யாத்த - கட்டிய. குழவியின் - கன்றினிடமிருந்து. பால் - பக்கம். ஆரும் - தின்னும்.

மாரிக்காலத்து ஆம்பல்போல்தோன்றுகின்ற கொக்கின் பார்வையைக் கண்டு அஞ்சி வருந்திய நண்டு, தாழையின் வேரிலே உள்ள வளைக்கு ஓடுகிறது. ஓடும்போது, ஆயர்கள் கட்டிய கயிறு அரிக்க விரைந்து ஓடும் எருதுபோல் தோன்றுகிறது.

மாரி ஆம்பல் அன்ன கொக்கின்
பார்வல் அஞ்சிய பருவரல் ஈர்ஞெண்டு
கண்டல் வேரளைச் செலீஇயர் அண்டர்
கயிறுஅரி எருத்தின் கதழும்...*

பிடிக்கவந்த நாரைக்கு அகப்படாமல் நீரில் மூழ்கித் தப்பியது கெண்டை மீன். பிறகு அது வெளிவந்தபோது அதன் கண்ணெதிரில்பட்ட வெண்ணிறத் தாமரை அரும்பின் உருவம் நாரைபோல் தோன்ற, அந்த அரும்பையும் கண்டு அஞ்சுகிறது.

குருகுகொளக் குளித்த கெண்டை அயலது
உருகெழு தாமரை வான்முகை வெரூஉம்...†

ஆண்யானை வாழை மரங்களின் பக்கமாகப் போகிறது. வாழையின் சுரிந்த குருத்து அதன் அஞ்சத்தக்க தலை வருந்தும்படி தடவுகிறது. அதனால் யானை தன் மதம்

*குறுந். 117. குன்றியனார்.

பருவரல் - துன்பம். ஈர் - நனைந்து ஈரமான. கண்டல் - தாழை. அளை - வளை. செலீஇயர் - செல்ல. அண்டர் - இடையர். எருத்தின் - எருதுபோல். கதழும் - விரைந்து ஓடும்.

†குறுந். 127. ஓரம்போகியார்.

குளித்த - மூழ்கிய. கெழு - பொருந்திய. வான் - வெண்மையான. முகை - அரும்பு.

அழிந்து வருத்தம் உறுகிறது ; மயங்குகிறது. அப்போது பெண்யானையும் அதற்காக வருந்தி, ஆண்யானையின் புறத்தைத் தடவுகிறது. இவ்வாறு பெண்யானை தடவ, நீர் இழிந்து வரும் மலைப்பகுதியில் அரிதில் உறங்குகிறது ஆண்யானை.

சோலை வாழை சுரிநுகும்பு இனைய
அணங்குடை அருந்தலை நீவலின் மதன் அழிந்து
மயங்குதுயர் உற்ற மையல் வேழம்
உயங்குஉயிர் மடப்பிடி உலைபுறம் தைவர
ஆம்இழி சிலம்பின் அரிதுகண் படுக்கும்...*

தினைப்புனத்தைக் காவல் காக்கும் பரண்மேல் உள்ள குறவன் கொளுத்திய கொள்ளியைக் கண்டு மேயாமல், திரும்பி வந்துவிடுகிறது பெரிய யானை. அது பிறகு வானத்தில் விண்மீன்கள் விழும்போது வீசும் ஒளியைக் கண்டும் அஞ்சுகிறது.

ஏனலஞ் சிறுதினை காக்கும் சேணோன்
ஞெகிழியின் பெயர்ந்த நெடுநல் யானை
மீன்படு சுடரொளி வெரூஉம்...†

---

*குறுந். 308. பெருந்தோட் குறுஞ்சாத்தன்.

நுகும்பு - குருத்து. இனைய - வருந்த. அணங்கு - அச்சம். நீவலின் - தடவுதலினால். மதன் - மதம். மையல் - மயக்கம். உயங்கு - வருந்து. உலை - வருந்துகிற. ஆம் - நீர். அரிது - அரிதில், அருமுயற்சியால்.

†குறுந். 357. கபிலர்.

ஏனல் - தினை. சேணோன் - பரண்மேல் உள்ளவன். ஞெகிழி - கொள்ளி. பெயர்ந்த - இடத்தைவிட்டு வந்த. மீன் - விண்மீன். படு - விழுகின்ற. வெரூஉம் - அஞ்சும்.

பாலைநிலத்தில் பெண்யானை சோர்ந்த நடையோடு பசியால் வருந்துதலைக் கண்டு பொறுக்க முடியாமல், ஆண்யானை உயர்ந்த யாமரம் வருந்துமாறு குத்தி அதன் வெண்ணிறப் பட்டையின் நாரைக் கொண்டு கையைச் சுவைத்து அண்ணாந்து பார்த்து வருந்தும் நெஞ்சத்தோடு முழங்குகிறது.

...களிறுதன்
உயங்குநடை மடப்பிடி வருத்தம் நோனாது
நிலைஉயர் யாஅத்து உலையக் குத்தி
வெண்நார் கொண்டு கைசுவைத்து அண்ணாந்து
*அழுங்கல் நெஞ்சமொடு முழங்கும்...**

பாலைவழியில் யானைக்கு உணவும் நீரும் கிடைக்காத வறட்சி உள்ளது. அதற்கு நிற்க நிழலும் கிடைப்பதில்லை. வழிப்போக்கர் இறந்தவிடத்தில் தழையிட்டு மூடிய கற்களின் குவியல்தான் சிறிது நிழல் தரும். பெரிய யானைக்கு அதுதான் அங்குக் கிடைக்கும் நிழல்.

...வெஞ்சுரத்து
உலந்த வம்பலர் உவல்இடு பதுக்கை
நெடுநல் யானைக்கு இடுநிழல் ஆகும்...†

---

*குறுந். 307. கடம்பனூர்ச் சாண்டிலியன்.

உயங்கு - வருந்திய. நோனாது - பொறுக்காமல். உலைய - வருந்த. அழுங்கல் - வருந்தல்.

†குறுந். 77. மதுரை மருதனிள நாகனார்.

உலந்த - இறந்த. வம்பலர் - புதியவர், வழிப்போக்கர். உவல் - தழை. பதுக்கை - கற்குவியல்.

மரையா என்னும் மான்வகையைச் சேர்ந்த எருது பெரிதாய்க் கருநிறமாய் உள்ளது. அது இனிய புளிப்பை உடைய நெல்லிக்காய்களைத் தின்கிறது; அயலில் உள்ள சுனைக்குச் சென்று, அதில் நீரை மூடியுள்ள பெரிய மலர்கள் அகலுமாறு பெருமூச்சு விட்டு, பிறகு நீரைப் பருகுகிறது.

புரிமட மரையான் கருநரை நல்லேறு
தீம்புளி நெல்லி மாந்தி அயலது
தேம்பாய் மாமலர் நடுங்க வெய்துயிர்த்து
ஓங்குமலைப் பைஞ்சுனை பருகும்...*

நெல்லி தின்றபின் நீர்குடித்தால் தனிச்சுவை தோன்றும். மலையில் உள்ள விலங்குகளும் இச் சுவையை நுகர்வதாகக் கூறுகிறார் புலவர்.

பாலை வழியின் கொடுமையைக் கூறுமிடத்தில், அங்கு இரலைமான் மரலை உணவாக உண்டு, யானை ஒடித்து எஞ்சி யிருக்கின்ற யாமரத்தின் கிளைகளின்-இலையற்ற கிளைகளின்-வரிவரியாக உள்ள நிழலில் உறங்குவதாகக் கூறுகிறார்.

மரல்புகா அருந்திய மாஎருத்து இரலை
உரல்கால் யானை ஒடித்துஉண்டு எஞ்சிய
யாஅ வரிநிழல் துஞ்சும்...†

*குறுந். 317. மதுரைக் கண்டரத்தனார்.

புரி - விரும்பும். மட - இளமையுடைய. நரை - பெரிய. தேம்பாய் - தேன் சொரியும். வெய்துயிர்த்து - பெருமூச்சுவிட்டு.

†குறுந். 232. ஊண்பித்தையார்.

மரல் - கற்றாழை என்பர். புகா - உணவு. எருத்து-கழுத்து. எஞ்சிய - மீதியுள்ள.

அங்கு வாழும் ஆறலைகள்வராகிய பொல்லாத மக்களும் நீர் வேட்கையைத் தணிப்பதற்கு ஒன்றும் கிடைக்காமல், மரப்பட்டையின் நாரை மென்று வேட்கை தணிகிறார்களாம்.

வருநர்ப் பார்க்கும் வன்கண் ஆடவர்
நீர்நசை வேட்கையின் நார்மென்று தணியும்...*

ஒரு பெரிய உருண்டைக் கல்லின் பக்கத்தில் மாலைக் கொடி படர்ந்து வளர்ந்துள்ளது. கல்லின்மேல் ஏறிப் படரும் பழக்கம் உள்ளது அந்தக் கொடி. பக்கத்தே ஒரு யானை வந்து படுத்து உறங்குகிறது. யானையின் உடம்பும் கல் போலவே சருச்சரையோடு இருத்தலால், கல் என்று உணர்ந்து அந்தக் கொடி யானைமேல் ஏறிப் படர்கிறதாம்.

துறுகல் அயலது மாணை மாக்கொடி
துஞ்சுகளிறு இவரும் குன்றம்...†

காட்டுப்பசுவின் கன்று அழகிய செவிகளை உடையது. கானவர் துரத்த அது அஞ்சி ஓடித் தன் இனத்தை விட்டுப் பிரிந்து, காட்டை அடுத்த ஊரில் அகப்பட்டது. அங்கே உள்ள சிறுவர் அதைக் காப்பாற்ற, அவர்களோடு பழகி விடுகிறது. அங்கேயே விரும்பியிருந்து, வீட்டில் தங்கிவாழக் கற்றுக்கொள்கிறது.

---

*குறுந். 274. உருத்திரனார்.

வருநர் - வழியில் வருவோரை. வன்கண் - அஞ்சாமை. நசை - விருப்பம்.

†குறுந். 36. பரணர்.

மாணை - ஒருவன் கொடி என்பர். மா - கரிய, இவரும் - ஏறும்.

அமர்க்கண் ஆமான் அஞ்செவிக் குழவி
கானவர் எடுப்ப வெரீஇ இனம்தீர்ந்து
கானம் நண்ணிய சிறுகுடிப் பட்டென
இளையர் ஓம்ப மரீஇ அவண்நயந்து
மனையுறை வாழ்க்கை வல்லி யாங்கு...*

*குறுந். 322. ஐயூர் முடவனார்.

அமர்க்கண் - பொருகின்ற கண்கள், ஒன்றை ஒன்று எதிர்க்கின்ற கண்கள். எடுப்ப - தூக்க. வெரீஇ - அஞ்சி. தீர்ந்து - நீங்கி. சிறுகுடி - மலையில் உள்ள ஊரில். மரீஇ - பொருந்தி. அவண் - அங்கு. நயந்து - விரும்பி. வல்லியாங்கு - வல்லதானாற் போல்.

கற்பனைக் குறிப்பு

உலகம் பலவகையாக உள்ளது. ஆயினும் ஒவ்வொரு வர்க்கும் ஒவ்வொரு வகையாகவே தோன்றும். காண்பவர் எப்போது எந்த மனநிலையோடு காண்கிறாரோ, அவர்க்கு அப்போது உலகம் அந்த நிலை உடையதாகத் தோன்றும். துன்பத்தால் நைவார்க்கு உலகம் துன்புறுதல் போல் தோன்றுதலும், இன்பத்தால் களிப்பார்க்கு உலகம் இன்பக் கூத்து ஆடுவது போல் தோன்றுதலும் இயற்கை.

தலைவன் பொருள்தேடும் முயற்சியை மேற்கொண்டு வெளிநாட்டுக்குச் செல்லத் துணிகிறான். ஆனால் அவனுடைய உள்ளத்தில் தன் பிரிவால் தலைவி கலங்கித் துயருறுவாளே என்ற கவலை எழுகிறது. போகும் வழியை எண்ணிப் பார்க்கிறான். அவ் வழியிலும், தன் துணையை இழந்து பிரிவுத் துயரால் பெண்வங்காப் பறவை வருந்திக் கூவுவதாக எண்ணுகிறான்.

"தன் துணையான வங்காவைப் பிரிந்த சிவந்த கால்களை உடைய பெண்வங்கா, எழால் (புல்லூறு) அடிக்க வீழ்ந்த கணவனைக் காணாமல், குழலிசை போன்ற குரலால் பல சிறு ஒலிகளை ஒலிக்கின்ற குன்றுகள் அடர்ந்த சிறு வழிகள் செல்வதற்கு அரியவை. மறத்தற்கு அரிய காதலி இங்குத் தனித்துக் கிடக்க, யான் மட்டும் அவ்வழியே செல்வேன் என்று பிரிவது, இந்த உலகத்து இளமைவாழ்வுக்கு ஒரு முடிவே ஆகும்" என்று தன் நெஞ்சிற்குச் சொல்கிறான்.

வங்காக் கடந்த செங்காற் பேடை
எழால்உற வீழ்ந்தெனக் கணவற் காணாது
குழலிசைக் குரல குறும்பல அகவும்
குன்றுகெழு சிறுநெறி அரிய என்னாது
மறப்பருங் காதலி ஒழிய
இறப்பல் என்பதுஈண்டு இளமைக்கு முடிவே.*

அகப்பொருட் பாட்டுக்களைப் பாடியுள்ள புலவர்கள், இவற்றைச் சிறந்த சொல்லோவியங்களாக அமைத்துள்ளனர். ஓவியத்தில் தீட்டப்படும் நிகழ்ச்சிக்கு அல்லது காட்சிக்கு ஏற்றவாறு பின்னணியைச் சேர்ந்து அமைத்தல் இயல்பு அன்றோ? பசு ஒன்று மேய்வதாகத் தீட்டும் கலைஞன், அதனைக் கடற்கரையில் மணல்வெளியில் காட்டாமல்,காட்டோரத்தே புல்வெளியில் காட்டுதல் போலவே, மனமகிழ்ச்சியாக இருக்கும் ஒரு நங்கையைத் தீட்டும்போது, துள்ளிவிளையாடும் கன்றையும் கொஞ்சிப் பறக்கும் கிளிகளையும் காட்டலாம். துயருற்று வாடும் ஒருத்தியைத் தீட்டும் கலைஞன், துன்பமும் வறட்சியும் உள்ள காட்சிகளைப் பின்னணியாகத் தீட்டுதல் பொருந்தும்.

சொல்லோவியங்களாகப் புலவர் பாடும் பாட்டுக்களிலும் இவ்வாறே தக்க பின்னணிகள் அமைவது உண்டு. இவற்றையே முன்னோர் முதற்பொருள் என்றும், கருப்பொருள் என்றும் வகுத்தனர்; பாடப்படும் கருத்துக்களை மட்டும் உரிப்பொருள் என்றனர்.

---

*குறுந். 151. தூங்கலோரியார்.

கடந்த - பிரிந்த. குறும்பல - சிறிய பல ஒலிகள். ஒழிய - நீங்க. இறப்பல் - கடந்து செல்வேன்.

தலைவனைப் பிரிந்தபோது வருந்தியும், சேர்ந்தபோது மகிழ்ந்தும் வாழ்ந்த களவொழுக்கத்தின் இறுதியில் திருமண ஏற்பாடு நடைபெறுகிறது. அப்போது தலைவியின் உள்ளம் மகிழ்ச்சி அடைகிறது. "இதுவரையில் காதல் நமக்குப் பகையாக நின்று, தலைவன் வரும்போது வரும்; அவன் நீங்கியபோது நீங்காமல் மாறுபட்டு வருத்தும். இவ்வாறு இருந்துவந்த நிலைமை இனி நீங்கியது" என்கிறாள். இனி எய்தும் இடையறா மகிழ்ச்சியைப் பற்றி அவளுடைய வாய்ச் சொற்கள் ஒன்றும் கூறவில்லை. ஆனால் புலவர் தீட்டும் பின்னணி அதைக் குறிப்பால் உணர்த்துகின்றது. தலைவனுடைய மலையே இங்குத் தீட்டப்படும் பின்னணி. அந்த மலையில் உள்ள பலாமரங்கள் நிறையக்காய்த்துள்ளன. கிளைகளில் காய்த்துள்ள காய்கள் மட்டும் அல்ல. வேரிலும் அடிமரத்திலும் கிளைகளிலும் ஒருங்கே காய்த்துள்ள காய்கள், கட்டி வைத்தாற்போல் தொங்கித் தொடர்ந்துள்ளன. எல்லாம் கீழே விழுந்து சாய்வன போல் அவ்வளவு மிகுதியாகக் காய்த்துள்ளனவாம்.

வேரும் முதலும் கோடும் ஓராங்குத்
தொடுத்த போலத் தூங்குபு தொடரிக்
கீழ்தாழ் வன்ன வீழ்கோட் பலவின்
ஆர்கலி வெற்பன் வருதொறும் வரூஉம்
அகலினும் அகலா தாகி
இகலும் தோழிநம் காமத்துப் பகையே.*

---

*குறுந். 257. உறையூர்ச் சிறுகந்தன்.

முதல் - அடி. கோடு - கிளை. ஓராங்கு - ஒருசேர. தூங்குபு - தொங்கி. வீழ் - விரும்பப்படுகின்ற. ஆர்கலி - ஆரவார ஒலி. காமம் - காதல்.

இந்தப் பாட்டில் தலைவியின் மட்டற்ற மகிழ்ச்சி கூறப்பட வில்லை. ஆனால் பின்னணியாக வரும் மலையில் அளவற்ற காய்கள் தொங்கும் பலாமரங்கள் காட்டப்படுகின்றன. குறையும் இடர்ப்பாடும் உள்ள களவுவாழ்க்கை நீங்கி, நிறைவுடைய இல்வாழ்க்கை வாய்க்கும் என்ற கருத்து இங்குக் குறிப்பால் புலப்படுத்தப்படுகிறது. வேர் அடிமரம் கிளை எல்லாம் காய்கள் காய்த்துத் தொங்கும் பலாமரங் களே, நிறைந்த வாழ்க்கைக்கு ஏற்ற கற்பனைக் குறிப்பாக உள்ளன.

சில பாட்டுக்களில் உரிப்பொருளாக அமையும் கருத்து வெளிப்படையாகக் கூறப்பட்டு, அதற்குப் பின்னணியாகத் தக்க கருப்பொருள் அமைதலும் உண்டு.

திருமணம் செய்யாமலே காலம் கடத்தும் நிலையை எண்ணி வருந்தும் தலைவியைத் தோழி ஆற்றுவிக்க முயல் கிறாள். "நீ கவலைப்படாதே. தாய் முருக பூசை செய்தாள். அதனால் உண்மை அறிந்தாள். இனிமேல் உனக்குத் திரு மணம் செய்விக்க முயல்வாள். தலைவனுடைய மார்பைச் சேர்ந்து வாழும் திருமணநாள் நெருங்கி வந்துவிட்டது" என்று சொல்லித் தேற்றுகிறாள். இந்தக் கருத்திற்கு ஏற்ற பின்னணியாகப் புலவர் சில பனைமரங்களை அமைக்கின்றார். அந்தப் பனைமரங்கள் உயர்ந்து வளர்ந்தவை. தலைவியும் தோழியும் மற்றப் பெண்களும் கடற்கரையில் விளையாடிய போது, அந்தப் பனைமரங்கள் உயர்ந்து வளர்ந்ததையும் தாங்கள் ஏற முடியாதவாறு இருந்ததையும் அடிக்கடி எண்ணியுள்ளனர். அத்தகைய பனைமரங்கள் இப்போது உயரம் குறுகிவிட்டனவாம். மேல்காற்று வீசி வீசி அங்கே மணல்மேடு உயர்ந்து அமைந்தமையால், பனைமரங்களின்

அடிப்பகுதிகள் மணலில் புதைந்துவிட்டன. அதனால் மணலில் புதையுமுன் உயர்ந்திருந்த மரங்கள் இப்போது உயரம் குறைந்து தோன்றுகின்றன.

அதுவர லன்மையோ அரிதே அவன்மார்பு
உறுக என்ற நாளே குறுகி
ஈங்கா கின்றே தோழி கானல்
ஆடரை புதையக் கோடை இட்ட
அடும்பிவர் மணல்கோடு ஊர நெடும்பனை
குறிய ஆகும் துறைவனைப்
பெரிய கூறி யாய்அறிந் தனளே.*

திருமணநாள் நெருங்கிவிட்டது, இனிக் கவலை வேண்டா என்ற கருத்திற்கு ஏற்றவாறு, பனைமரங்களின் உயரம் குறுகிய காட்சி அமைந்துள்ளது. எட்டமுடியாத உயரமுடைய மரங்கள், எட்டக்கூடியவாறு குறுகிவிட்டன. ஏக்கத்திற்குக் காரணமாக நெடுந்தொலைவில் நின்ற திருமணம் பற்றிய முயற்சி, விரைவிலே நிறைவேறும் வகையில் நெருங்கிவந்துவிட்டதை உணர்த்துமாறு இக் கற்பனை அமைந்துள்ளது.

சில கருத்துக்களை வெளிப்படையாகக் கூறாமல், மறைத்துக் குறிப்பால் உணர்த்துவதில் ஒரு நயம் உள்ளது. எளிதில் உணருமாறு கூறுவதால் விளையும் பயன் குறைவு ; சிந்தித்த பிறகே உணரத்தக்க வகையில் கூறுவதால் பயன் மிகுதி. பின்னது உள்ளத்தே ஆழ்ந்து பதியும். இவ்வாறு

---

* குறுந். 248. உலோச்சனார்.

வரலன்மை - வராமலிருப்பது. அரை - அடிமரம். அடும்பு இவர் - அடும்பங் கொடி படர்ந்த. கோடு - மேடு, குவியல். பெரிய கூறி - முருகன் என்று கூறி. யாய் - தாய்.

எண்ணி உணரத்தக்க வகையில் மறைத்துக் கூறும் கருத்துக் களைத் தூண்டும் சொற்களமைந்த உவமைகள் மட்டுமே வெளிப்படையாகக் கூறப்படும். விலங்கு பறவை முதலிய கருப்பொருள்களின் வாழ்வைக் கூறி, அவற்றினிடையே கருத்துக்களை மறைத்துக் கூறும் முறைக்கு உள்ளுறை யுவமம் என்பது பெயர்.

> **உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகென**
> **உள்ளுத்து இயன்றதை உள்ளுறை யுவமம்**

என்பது தொல்காப்பியம்.

பழைய அகப்பொருட் பாக்களில் இது மிகுதியாக அமைந்துள்ளது. குறுந்தொகையிலும் பல பாட்டுக்களில் உள்ளது.

எடுத்துக்காட்டாக :

திருமணம் செய்துகொள்ளாமலே காலம் தாழ்த்துவரும் தலைவனை நினைந்து தலைவி வருந்துகிறாள். அதனால் வரும் துன்பங்கள் அவளையே தாக்குகின்றன. தலைவன் அவற்றைப் பற்றிக் கவலைப்படாமல் துன்பங்களுக்குக் காரணமாக இருக்கிறான்; துன்பங்களை அவன் வேண்டும் என்றே விளைப்பதில்லை; துன்பங்கள் என்று உணராமலே விளைக்கிறான். தலைவியோ அவற்றால் வாடி வருந்துகிறாள். இந்தக் கருத்தைத் தலைவி வெளிப்படையாகக் கூறவில்லை. பின் வரும் முறையில் உள்ளுற அமைத்துக் கூறுகிறாள்.

காட்டு மயில் ஒன்று பாறையில் ஒருபுறத்தில் முட்டை யிட்டுச் சென்றது. வெயிலிலே விளையாட அப் பாறைக்கு வந்த குரங்கின் குட்டி அந்த முட்டையைப் பார்க்கிறது; முட்டையை உருட்டி விளையாடுகிறது.

கான மஞ்ஞை அறைஈன் முட்டை
வெயில்ஆடு முசுவின் குருளை உருட்டும்
குன்ற நாடன் கேண்மை...*

முட்டையின் துன்பம் குரங்குக்குட்டிக்குத் தெரியாது. அது அதற்கு விளையாட்டாக உள்ளது. தலைவனுக்கு என் துன்பமும் அத்தகையது போலும் என்ற கருத்தைத் தலைவி இதன் வாயிலாகப் புலப்படுத்துகிருள்.

தலைவன் தலைவியை விட்டுப் பரத்தை ஒருத்தியை நாடி அவளுடன் சிலநாள் தங்கியிருக்கிறுன். அப்போது தலைவி, அந்தப் பரத்தை தன் கணவனைக் கவர்ந்துகொண்டதாகப் பழிக்கிருள். அந்தப் பழிச்சொல்லைக் கேட்டவர் பரத்தையிடம் வந்து சொல்கின்றனர். பரத்தை அதற்கு மறுமொழி கூறுகிருள். அந்த மறுமொழியில், தான் அவனைக் கவர்ந்து வரவில்லை என்பதையும், அவனே வலியத் தன் வீட்டிற்கு வந்தான் என்பதையும் வெளிப்படையாகக் கூருமல், அந்த நாட்டு மாம்பழத்தைப் பற்றியும் வாளைமீனைப் பற்றியும் கூறும் சொற்களால் புலப்படவைக்கிருள்.

திரண்ட கொம்பை உடைய வாளைமீன் ஒன்று நிறைந்த சூல் உடையதாக உள்ளது. அந்தப் பொய்கைக் கரையிலே இனிய மாம்பழங்கள் கொத்துக் கொத்தாக பழுத்துள்ள மாமரம் ஒன்று உள்ளது. அந்த மரத்திலிருந்து ஒரு பழுத்த பழம் பொய்கையில் விழ, வாளைமீன் அதைப் பற்றிக்கொள்கிறது.

---

*குறுந். 38. கபிலர்.

மஞ்ஞை - மயில். அறை - பாறை. ஈன் - ஈன்ற. முசு - கருங்குரங்கு. குருளை - குட்டி. கேண்மை - நட்பு, காதல்.

கணைக்கோட்டு வாளைக் கமஞ்சூல் மடநாகு
துணர்த்தேக் கொக்கின் தீம்பழம் கதூஉம்...*

வாளைமீன் மாம்பழம் விரும்பியபோதிலும், சூல்கொண்ட காரணத்தால் விருப்பம் மிகுந்தபோதிலும் மரம் ஏறிப் பழம் பறிப்பதில்லை. தானே விழுவதை மட்டுமே பற்றித் தின்னும். அது போன்றது தன் வாழ்க்கை என்கிறள் பரத்தை.

---

*குறுந். 164. மாங்குடி மருதனர்.

கணை - திரண்ட. கோடு - கொம்பு. கமம் - நிறைவு. சூல் - கர்ப்பம். மட - இளமை. நாகு - பெண். துணர் - கொத்து. கொக்கு - மா. கதூஉம் - பற்றும்.

குறுந். 10

உவமைத்திறன்

இயற்கையுடன் இயற்கை

இயற்கைப் பொருள்களை இயற்கைப் பொருள்களோடு ஒப்பிட்டு விளக்கும் பகுதிகள் அழகுற அமைந்துள்ளன. இயற்கையின் இரு வேறு காட்சிகளைக் காட்டி, அவற்றுள் ஒப்புமை நிலவுதலைப் புலவர் விளக்குகின்றனர்.

வீட்டில் வாழும் குருவியின் குவிந்த சிறகுகள் வாடிய ஆம்பல்பூவைப் போல் தோன்றும்.

> **ஆம்பல் பூவின் சாம்பல் அன்ன**
> **கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ.***

காந்தள் மலரில் உள்ள நறுமணமான பொடிகளை ஊதும் தும்பி, பாம்பு உமிழும் மணி போல் தோன்றும். (காந்தள் மலர் படம் எடுக்கும் பாம்பு போல் உள்ளது. அதில் தேனை நாடி வரும் தும்பி, மணிபோல் உள்ளது).

> **...காந்தள்**
> **நறுந்தாது ஊதும் குறுஞ்சிறைத் தும்பி**
> **பாம்புஉமிழ் மணியின் தோன்றும்...†**

இவ்வாறு சில இயற்கைப் பொருள்களோடு வேறு சில இயற்கைப் பொருள்களை ஒப்பிடும் உவமைகளில்,

---

*குறுந். 46. மாமிலாடன்,
சாம்பல் - வாடல், கூம்பிய - குவிந்த. குரீஇ - குருவி.

†குறுந். 239. ஆசிரியன் பெருங்கண்ணன்.
தாது - மலர்ப்பொடி. குறுஞ்சிறை - சிறிய சிறகு.

புலவர்களின் கூர்த்த நோக்கும் புலனாகின்றது. அரும்புகளின் அமைப்பு, பறவைகளின் நகங்கள் முதலியவற்றையும் நோக்கி நுட்பமாக உணரும் திறன் போற்றத்தக்கது. அவற்றிற்கு ஏற்ற உவமைகளை அமைத்துத் தெளிவுபடுத்தும் திறன் அதனினும் போற்றத்தக்கதாகும்.

சேவல்கோழியின் கொண்டை செந்நிறமாய் ஒரு சேரத் தொகுத்தாற் போல் உள்ளது; குவிந்த கொத்துக்களை உடைய தோன்றியின் ஒளி பொருந்திய (செந்நிற) மலர் போல் உள்ளது.

குவி இணர்த் தோன்றி ஒண்பூ அன்ன
தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்...*

நொச்சியின் பூங்கொத்து, கருநிறமானது. அதன் இலை மயிலின் அடி போன்றது.

மயில்அடி இலைய மாக்குரல் நொச்சி.†

அவரையின் மலர்கள் கிளியின் வாய் போன்றவை. முல்லை அரும்புகள் காட்டுப்பூனையின் பற்கள் போன்றவை.

அவரைக், கிளிவாய் ஒப்பின் ஒளிவிடு பன்மலர்
வெருக்குப்பல் உருவின் முல்லையொடு...‡

---

*குறுந். 107. மதுரைக் கண்ணனார்.

ஒண்பூ - ஒளியுள்ள (நல்ல நிறம் உள்ள) பூ. நெற்றி - கொண்டை. கணங்கொள் - கூட்டமான.

†குறுந். 138. கொல்லனழிசியார்.

மா - கரிய. குரல் - கொத்து.

‡குறுந். 240. கொல்லனழிசியார்.

வெருகு - காட்டுப்பூனை.

அடும்பின் இலைகள் இரண்டாகப் பிரிந்து அமைந்தவை; மானின் அடிபோன்றவை. அடும்பின் ஒளியுள்ள பூக்கள், மாலையாக அமைந்த மணிகள் போன்றவை.

மான்அடி அன்ன கவட்டிலை அடும்பின்
தார்மணி அன்ன ஒண்பூ...*

இளைய வாகைமரத்தின் நீண்ட காம்பு உடைய மலர், இளமையான மயிலின் உச்சிக்கொண்டைபோல் தோன்றும்.

குமரி வாகைக் கோலுடை நறுவீ
மடமாத் தோகைக் குடுமியின் தோன்றும்...†

பகன்றையின் முறுக்கு அவிழும் வெண்ணிறப்பூ, புலைத்தி கஞ்சி தோய்த்து எடுத்துத் தப்பிக் குளத்தில் இட்ட ஆடையின் பிரியாத பருத்த முறுக்குப் போல் தோன்றும்.

நலத்தகைப் புலைத்தி பசைதோய்த்து எடுத்துத்
தலைப்புடைப் போக்கித் தண்கயத்து இட்ட
நீரில் பிரியாப் பருஉத்திரி கடுக்கும்
பேரிலைப் பகன்றைப் பொதிஅவிழ் வான்பூ...‡

செழித்துத் திரண்டு வளர்ந்த கரும்பின் அரும்பு, சூல் முதிர்ந்த பச்சைப் பாம்பு போல் தோன்றுகிறது.

---

*குறுந். 243. நம்பிகுட்டுவன்.
கவடு இலை - இரண்டாய்ப் பிரியும் இலை.

†குறுந். 347. காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணன்.
குமரி - இளமை. கோல் - நீண்ட காம்பு. வீ - மலர். மட - இளமை. மா - கரிய.

‡குறுந். 330. கழார்க்கீரனெயிற்றியன்.
நலத்தகை - அழகு. தலைப்புடை - முதல் தப்பல். கடுக்கும் - போலும். பொதி - முறுக்கு.

சினைப்பசும் பாம்பின் சூல்முதிர்ப்பு அன்ன
*கனைத்த கரும்பின் கூம்புபொதி...**

உழுந்தின் சிவந்த அடிப்பகுதி குறும்பூழ் என்னும் காடைப்பறவையின் கால் போல் தோன்றும்.

பூழ்க்கால் அன்ன செங்கால் உழுந்து...†

கதிர் அரிந்த வரகுத்தாள்களுக்கு இடையே பூத்துள்ள முல்லையின் அரும்புகள் காட்டுப்பூனை சிரித்தாற் போல் தோன்றும்.

பழமழைக் கலித்த புதுப்புன வரகின்....
இருவிசேர் மருங்கின் பூத்த முல்லை
வெருகுசிரித் தன்ன பசுவீ மென்பிணிக்
குறுமுகை...‡

கொன்றைப் பூக்கள் பொன்னிறமாய்ப் பூத்துள்ளன. அவை, செல்வர் வீட்டுச் சிறுவரின் சிறிய கால்களில் விளங்கும் தவளை போன்ற வாயை உடைய (பொன்னால் ஆகிய) கிண்கிணியின் காசுகள் போல் உள்ளன.

---

*குறுந். 35. கழார்க்கீரனெயிற்றியார்.

சூல் - கர்ப்பம். கனைத்த - திரண்ட. கூம்பு - குவிந்த. பொதி - அரும்பு.

†குறுந். 68. அள்ளூர் நன்முல்லையார்.

பூழ் - குறும்பூழ், காடை. கால் - அடி.

‡குறுந். 220. ஒக்கூர்மாசாத்தியார்.

கலித்த - செழித்த. இருவி - கதிர் நீங்கிய தாள். வெருகு - காட்டுப்பூனை. வீ - மலர்.

செல்வச் சிறுஅர் சீறடிப் பொலிந்த
தவளை வாஅய பொலஞ்செய் கிண்கிணிக்
*காசின் அன்ன போதுஈன் கொன்றை...**

கண் முதலியன

மகளிர் கண் முதலியவற்றின் அழகை எடுத்துரைக்கும் புலவர்கள் அவற்றிற்கு அமைத்துள்ள ஒப்புமைகள் மிகப் பொருத்தமாக அமைந்துள்ளன. இந்த உவமைகள் வழி வழியாக இலக்கியத்தில் நின்று வழங்கிவருவன எனினும், தொடக்கத்தில் உவமைப்படுத்திய பழங்காலப் புலவர்களின் கற்பனையில் நயம் மிக்கு விளங்குதல் காணலாம்.

கலைமானின் மார்பிலே தைக்குமாறு எய்து இரத்தத்தோடு பறித்த திரட்சியுள்ள செந்நிறமான அம்புகள் இரண்டு மாறுபட வைக்கப்பட்டாற் போன்றவை மகளிரின் மையுண்ட கண்கள்.

......கலைநிறத் தழுத்தி
குருதியொடு பறித்த செங்கோல் வாளி
மாறுகொண் டன்ன உண்கண்...†

கருநிறக் கூந்தலை அடுத்து விளங்கும் சிறு நெற்றி, கரிய கடலில் தோன்றும் எட்டாம்பிறைத் திங்களைப் போல் உள்ளது.

---

*குறுந். 148. இளங்கீரந்தையார்.

சீறடி - சின்ன அடி. வாஅய - வாய் உடைய. பொலம் - பொன். போது - பேரரும்பு.

†குறுந். 272. ஒருசிறைப் பெரியனார்.

கலை - ஆண்மான். கோல் - திரட்சி. வாளி - அம்பு. உண்கண் - மையுண்ட கண்கள்.

மாக்கடல் நடுவண் எண்ணாட் பக்கத்துப்
பசுவெண் திங்கள் தோன்றி யாங்குக்
கதுப்பயல் விளங்கும் சிறுநுதல்......*

தலைவனுடைய தவருன நடத்தையை அறிந்து தனக்குள்ளே வருந்துகிருள் தலைவி. பிறர்க்குச் சொல்ல நாணுகிருள்; உயிர்த்தோழிக்கும் சொல்லாமல் மறைத்துப் பொறுமையோடு வாழ்கிருள். ஆயினும் உள்ளத்தே துயரம் வாட்ட, அதனல் மெலிவுறுகிருள்; அழகெல்லாம் இழந்து வாடுகிருள்.

ஒரு செப்பு(சொம்பு); அதற்கு மேல்மூடியும் பொருத்தமாக அமைந்திருக்கிறது. அழகான பூக்களைப் பறித்து, அவற்றை யாரும் சூடிக்கொள்ளாமல் அந்தச் செப்பினுள் இட்டு மூடிவைத்தால் என்ன ஆகும்? ஒருபயனும் இல்லாமல் வாடி அழியும்.

கொடியிலும் இருக்க முடியாமல், யாரேனும் சூடியும் பயன்படாமல் செப்பினுள் கிடந்து வாடி அழியும் மலர்களைப் போல், தலைவி தன் பெற்றோரின் செல்வ மகளாகவும் அங்கிருந்து வாழாமல், காதலனுடைய அன்புக்கு உரிய துணைவியாகவும் வாழமுடியாமல், அழகு இழந்து வாடுகிருள்.

மடைமாண் செப்பின் தமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய்சா யினளே...

*குறுந். 129. கோப்பெருஞ் சோழன்.

மா - கரிய. நடுவண் - நடுவே. கதுப்பு - கூந்தல்.

தண்ணந் துறைவன் கொடுமை
*நம்முன் நாணிக் கரப்பா டும்மே.**

தலைவன் பிரிவால் தலைவி அழகு இழந்தாள். ஆயினும் அழகு இழந்த அவளுடைய உடல் இன்னும் அவளோடு தொடர்பு கொண்டிருக்கிறது. யானை வளைத்து முறித்த பிறகும், மரத்தை விட்டு நிலத்தில் விழாமல் உள்ள நார் உடைய கிளை போல் உள்ளது அந்த நிலைமை.

பெருங் களிறு வாங்க முறிந்து நிலம்படாஅ
நாருடை ஒசியல் அற்றே
கண்டிசின் தோழி அவர் உண்டஎன் நலனே.†

தலைவியின் மேனியில் படரும் பசலை காதலர் வந்து தழுவும் போது நீங்குகிறது; விட்டுப் பிரியும்போது பரவுகிறது. அது, தொட்டால் நீங்கி, விட்டால் பரவும் பாசி போன்றது.

ஊருண் கேணி உண்துறை தொக்க
பாசி அற்றே பசலை காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்த லானே.‡

---

*குறுந். 9. கயமனார்.

மடை - மேல்மூடி. மாண் - மாண்புற அமைந்த. தமிய - தனிப்பட்டனவாய். பெய்யா - சூடாத. பூவின் - பூப் போல. சாயினள் - மெலிந்தாள். கரப்பாடும் - கரக்கும், மறைக்கும்.

†குறுந். 112, ஆலத்தூர் கிழார்.

வாங்க - வளைக்க. படாஅ - விழாத. ஒசியல் - ஒடிந்த பகுதி.

‡குறுந். 399. பரணர்.

உண்துறை - நீர் உண்ணும் துறையில். தொக்க - சேர்ந்த. அற்றே - அன்னது, போன்றது. தொடுவுழி - தொடுமிடத்து. பரத்தலான் - பரவுவதால்.

இரவில் குறித்த இடத்தில் வருவதாகச் சொன்ன தலைவன் வரத் தவறினான். அவன் செய்த தவற்றிற்காகத் தலைவியின் தோள்கள் பசலை உற்றன. குரங்கு தக்கவாறு பாயாத தவறு, அந்தக் குரங்கை ஏற்று முறிந்த மாக் கொம்பில் விளைந்தாற்போல் உள்ளது இது.

......முசுக்கலை
ஆற்றப் பாயாத் தப்பல் ஏற்ற
கோட்டொடு போகி யாங்கு நாடன்
தான்குறி வாராத் தப்பற்குத்
தாம்பசந் தனஎன் தடமென் தோளே.*

மகளிர் கண் முதலியவற்றின் எழிலை விளக்க இயற்கைப் பொருள்களை உவமையாக்கிக் கூறுதல் போலவே, இயற் கைப் பொருள்கள் சிலவற்றின் அழகை விளக்க மகளிரின் கண் முதலியவற்றை ஒப்பிட்டுக் காட்டுதலும் உண்டு.

கழியிலே நெய்தல் மலர்கள் பூத்திருக்கின்றன. அவைகள் மகளிர்கண்கள் போல் அழகாக உள்ளன. கழியின் நீர் கடலை அடுத்திருப்பதால் ஒரு நிலையாக இருப்ப தில்லை. கடலின் ஓதம் மிகும்போது கழியில் நீர் மிகுந்து, நெய்தல் மலர்கள் நீரில் மூழ்கி மறைந்துவிடும். ஓதம் குறையும்போது, கழியில் நீர் குறைந்து, மலர்கள் முன் போல் வெளியே தோன்றும். இவ்வாறு மலர்கள் மேலே தோன்றித் தோன்றி மறையும் காட்சி, குளத்து நீரில் குளித்து மூழ்கும் மகளிரின் கண்கள் அவர்கள் மேலே வரும்போது தோன்றி மூழ்கும் போது மறைவது போல்

*குறுந். 121.

முசு - கருங்குரங்கு. கலை - ஆண்குரங்கு. ஆற்ற - கொம்பு தாங்கும் வகையில். கோட்டொடு - கோட்டில், கொம்பில்.

உள்ளது. கருநிறக் கூந்தலுக்கு இடையே தோன்றும் அவர்களின் கண்கள், பச்சைநிற இலைகளுக்கு இடையே தோன்றும் நெய்தல் மலர்களுக்கு உவமையானது பொருத்த மாகும்.

பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
இனமீன் இருங்கழி ஓதம் மல்குதொறும்
கயம்மூழ்கு மகளிர் கண்ணின் மாறும்......*

இவ்வாறு சிறப்பான உவமை அமைத்த காரணத்தால், உவமையில் வரும் கயம் (குளம்) பற்றிப் புலவருக்குக் கயமனார் என்ற பெயர் அமைந்தது.

கொன்றைமரங்களில் புதிய மலர்கள் அழகாகப் பூத்து விளங்குகின்றன. பசுநிற இலைகளுக்கு இடையே பொன்னிறப் பூக்கள் கொத்துக்கொத்தாக விளங்குகின்றன. பொன்னாலாகிய அணிகலன்கள் அணிந்த மகளிரின் கூந்தல் போல் அந்த மரங்கள் காட்சி அளிக்கின்றன.

கருநிறக் கூந்தலில் ஒளிவீசும் பொன் நகைகள் போல் பச்சையிலைகளுக்கு இடையே பொன்னிற மலர்கள் ஒளி வீசுகின்றன.

பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்
கதுப்பின் தோன்றும் புதுப்பூங் கொன்றை......†

*குறுந். 9. கயமனார்.

பாசடை - பசிய இலை. நிவந்த - உயர்ந்த. கணைக்கால் - திரண்ட காம்பு. மல்குதொறும் - நிறையுந்தோறும். மாறும் - போலும்.

†குறுந். 21. ஓதலாந்தையார்.

இழை - அணிகலன். கதுப்பின் - கூந்தல் போல்.

வேங்கைமரம் எல்லா அரும்புகளும் பூத்து அழகான காட்சியாக உள்ளது. அந்த மரத்தில் பெரிய கிளை ஒன்று மேலே உயர்ந்து விளங்குகின்றது. மயில்கள் அந்தக் கிளையில் ஏறி உட்கார்ந்திருக்கின்றன.

வேங்கை மரத்தில் மலர்கள் கொய்வதற்காக மகளிர் அடிக்கடி ஏறுவது உண்டு. மயில்கள் அந்தப் பெரிய கிளையில் இருக்கும் காட்சி, மலர் கொய்யும் மகளிர் அதில் விளங்குவது போல் தோன்றுகிறது.

அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கெழு பெருஞ்சினை இருந்த தோகை
பூக்கொய் மகளிரின் தோன்றும்......*

உணர்வும் செயலும்

உள்ளத்தில் உணரும் பலவகை உணர்ச்சிகளையும் உவமை வாயிலாக விளக்குதல் அரியதொரு கலையாகும். இத்துறையிலும் சங்க காலச் சான்றோர்களின் பாட்டுக்கள் சிறந்து விளங்குகின்றன.

தலைவி தலைவனோடு காதல் கொண்டு மகிழ்ந்து விளையாடிய உறவு, பிறகு திருமண முயற்சி நிறைவேறுமல் தலைவி படும் பல துன்பங்களுக்குக் காரணமாய்ப் பகையாயிற்று. யானைக்கன்று குறவர்சிறுவரோடு சுற்றித் திரிந்து முதலில் நல்லதாக இருந்து பிறகு அவர்களின் தினையையே மேய்ந்து பகையானது போன்றது அது.

முழந்தாள் இரும்பிடிக் கயந்தலைக் குழவி
நறவுமலி பாக்கத்துக் குறமகள் ஈன்ற

---

*குறுந். 26, வெள்ளிவீதியார்.

கால் - அடிமரம். மேக்கு - மேலே. தோகை - மயில்.

குறியிறைப் புதல்வரொடு மறுவந்து ஓடி
முன்னாள் இனிய தாகிப் பின்னாள்
அவர்திணை மெய்தந் தாங்குப்
பகையா கின்றுஅவர் நகைவிளை யாட்டே.*

இங்குக் கூறப்படும் சிறுவர் சின்ன கைச்சந்து உடையவர் (குறியிறைப் புதல்வர்) என்று கூறப்பட்ட அடையின் சிறப்பால், புலவர் 'குறியிறையார்' ஆனார்.

தன்னை விட்டுப் பிரிந்து சென்ற தலைவர், சென்ற இடத்தில் எவ்வாறு உள்ளாரோ என்று தலைவி கவலையுற்று வருந்துகிறாள். அவளுடைய நெஞ்சம் வருந்தும் வருத்தம், ஓர் ஊரில் அமைத்த (கொல்லனுடைய உலைக்களத்தில் உள்ள) துருத்தி ஏழு ஊர்களின் பொதுவேலைகளை ஏற்று வருந்து வது போல் அளவற்றதாக உள்ளது.

எமிய மாக ஈங்குத் துறந்தார்
தமிய ராக இனியர் கொல்லோ ?
ஏழூர் பொதுவினைக்கு ஓர்ஊர் யாத்த
உலைவாங்கு மிதிதோல் போலத்
தலைவரம்பு அறியாது வருந்தும்என் நெஞ்சே.†

தலைவியின் நெஞ்சம் காதல் மிக்கபோது தலைவனை நாடிச் செல்கிறது. தலைவி அவனை வெறுக்கும்போது

---

*குறுந். 394. குறியிறையார்.

கய - மெல்லிய. குழவி - கன்று. நறவு - கள். இறை - கைச்சந்து. மறுவந்து - திரும்பித் திரும்பி வந்து.

†குறுந். 172. கச்சிப்பேட்டு நன்னாகையார்.

வினை - தொழில். யாத்த - அமைத்த. வாங்கு - இழுக்கும். மிதிதோல் - துருத்தி. தலைவரம்பு - முடியும் எல்லை.

திரும்ப அவளிடமே வந்து அமைகிறது. இவ்வாறு ஒரு நிலையாக இராமல் இங்கும் அங்குமாக வருந்துகிறது.

கடற்கரையில் கடலருகே நிற்கும் தாழை மரம் கழியின் நீர் வந்து விழும்போது அப்பக்கம் சாய்ந்து, கடல்நீர் பெருகித் திரும்பும்போது மீண்டும் இப்புறம் திரும்புதல் போல் உள்ளது அவளுடைய நெஞ்சின் நிலை.

காமம் கடையின் காதலர்ப் படர்ந்து
நாம்அவர்ப் புலம்பின் நம்மோடு ஆகி
ஒருபால் படுதல் செல்லாது ஆயிடை
அழுவம் நின்ற அலர்வேய் கண்டல்
கழிபெயர் மருங்கின் ஒல்கி ஓதம்
பெயர்தரப் பெயர்தந் தாங்கு
வருந்தும் தோழிஅவர் இருந்தஎன் நெஞ்சே.*

தலைவன் பரத்தையோடு தங்கியிருந்து தலைவிக்குப் பல துன்பம் செய்தபோதிலும் தலைவி அவனை மறந்து வாழ்வதில்லை. அது, களை எடுப்பவர் வயலில் உள்ள நெய்தல் கொடிகளை எறிந்து வாடவிட்ட போதிலும் மீண்டும் அந்த நெய்தல் வளர்ந்து அங்கேயே பூத்தல் போன்றது.

பெயர்த்தும் கடிந்த செறுவில் பூக்கும்
நின்னூர் நெய்தல் அனையம் பெரும

*குறுந். 340. அம்மூவனார்,

கடையின் - செலுத்தினால். படர்ந்து - நினைந்து சென்று. புலம்பின்-வெறுத்தால். ஒருபால்-ஒருபக்கம். படுதல் செல்லாது - இருக்க முடியாமல். அழுவம் - கடல். வேய் - நிறைந்த. கண்டல்- தாழை. ஒல்கி - சாய்ந்து. ஓதம் - வெள்ளம். பெயர்தர - திரும்ப.

நீ எமக்கு இன்னா தனபல செய்யினும்
நின்னின்று அமைதல் வல்லா மாறே.*

தலைவன்வாழ்வே தன் வாழ்வு என்றும், அவன் நெறியே தன் நெறி என்றும் வாழும் தலைவியின் வாழ்வு, ஞாயிறு உள்ள திசை நோக்கிச் சாயும் நெருஞ்சியின் வாழ்வு போன்றது. தலைவன் ஞாயிறு போன்றவன். அவன்வரவால் பூரித்து அவன் பிரிவால் மெலிந்து போகும் தலைவியின் தோள்கள் நெருஞ்சி போன்றவை.

......நாடன்
ஞாயிறு அனையன் தோழி
நெருஞ்சி அனையஎன் பெரும்பணைத் தோளே.†

தலைவன் முதலில் இனியவனாக இருந்து பிறகு பரத்தையிடம் தங்கி வாழ்தலால் தலைவிக்குத் துன்பம் செய்தல், நெருஞ்சிச்செடி முதலில் கண்ணுக்கு இனிய புதிய மலர் காட்டிப் பிறகு முள்ளை வெளிப்படுத்தல் போன்றது.

புன்புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்குஇன் புதுமலர் முள்பயந் தாஅங்கு
இனிய செய்தநம் காதலர்
இன்னா செய்தல் நோம்என் நெஞ்சே.‡

---

*குறுந். 309. உறையூர்ச் சல்லியன் குமாரன்.

பெயர்த்தும் - திரும்பவும். கடிந்த - களை கட்டு நீக்கிய. செறு - வயல். வல்லாமாறு - முடியாமையால்.

†குறுந், 315. தும்பிசேர்கீரனார்.

பணை - பருத்த, மூங்கில் போன்ற.

‡குறுந். 202. அள்ளூர் நன்முல்லையார்.

புன்புலம் - வளம் குறைந்த நிலம். அமன்ற - நெருங்கிய. கட்கு - கண்ணுக்கு. இன் - இனிய. பயந்தாங்கு - தந்தாற்போல. நோம் - வருந்தும்.

களவுக்காலத்தில் தலைவன் தலைவியைக் காண்பது மிக மிக அரிதாக இருந்தது. தொழுது காணும் பிறை காண்பதற்கு அரிதாகத் திடீரென்று தோன்றி மறைவதுபோல், தலைவி எப்போதோ ஒருமுறை எதிர்ப்பட்டு விரைந்து நீங்குவதாக இருந்தாள்.

தொழுதுகாண் பிறையின் தோன்றி யாம்நுமக்கு
அரியம் ஆகிய காலை....*

தலைவியைக் கண்டு காதலுற்ற தலைவன், மேலும் மேலும் அவளையே விரும்புகிறான்; அது, கள் குடித்து மயங்கியவன் மேலும் மேலும் கள்ளையே விரும்புவது போல் உள்ளது.

மகிழ்ந்ததன் தலையும் நறவுஉண் டாங்கு
விழைந்ததன் தலையும் நீவெய் துற்றனை.†

அப்போது தலைவனுடைய நிலைமை, அந்த வேட்கையிலே கரைந்து அதுவே ஆவதாக உள்ளது; கடற்கரையில் நின்ற உப்புவண்டியில் உள்ள உப்பு, பெருமழை பெய்து கரைந்து அழிந்து அங்குள்ள நீரோடு ஒன்றுவது போல் உள்ளது.

இருங்கரை நின்ற உப்புஒய் சகடம்
பெரும்பெயல் தலையவீந் தாங்கு.‡

---

*குறுந். 178. நெடும்பல்லியத்தனார்.

பிறையின் - பிறைபோல். காலை - காலம்.

†குறுந். 165. பரணர்.

தலையும் - மேலும். நறவு - கள். விழைந்ததன் தலையும் - விரும்பியதன் மேலும். வெய்துற்றனை - விரும்பினாய்.

‡. ஷை. ஒய் - செலுத்தும். சகடம் - வண்டி. பெயல் - மழை. தலைய - பெய்ய. வீந்தாங்கு - அழிந்தாற் போல்.

தலைவிக்கு இயல்பான நாண் காமத்தை எதிர்த்துத் தாங்கும் அளவிற்குத் தாங்கிப் பிறகு நிற்காமல்போய் விட்டது. மணலால் அமைந்த கரை வெள்ளத்தைத் தாங்குமளவும் தாங்கிப் பிறகு அழிவது போன்றது இது.

அளிதோ தானே நாணே...
வான்பூங் கரும்பின் ஓங்குமணல் சிறுசிறைத்
தாங்கும் அளவைத் தாங்கிக்
காமம் நெரிதரக் கைந்நில் லாதே.*

தலைவன் கைவிட்டுத் துறந்தால், தலைவியின் காதல் என்ன ஆகும்? தாய் இல்லாத ஆமைமுட்டை, மண்ணி னுள் கிடந்து அழிவதுபோல், தலைவியின் காதலும் யாரும் அறியாமலே அழிந்துவிடும்.

தாய்இல் முட்டை போல உட்கிடந்து
சாயின் அல்லது பிறிதுஎவன் உடைத்தே
யாமைப் பார்ப்பின் அன்ன
காமம் காதலர் கையற விடினே.†

காதல், புலன்களை விட்டுத் தனியே வாழ முடியாதது. உள்ளத்தால் உணர்தல் மட்டும் காதலுக்குப் போதாது. கண்ணால் காதலனை அடிக்கடி காணும் நிலைமையும் செவி யால் காதலனுடைய சொற்களைக் கேட்கும் நிலைமையும் வேண்டும். காதலன் பேசாவிட்டாலும் பழகாவிட்டாலும்,

---

*குறுந். 149, வெள்ளிவீதியார்.

வான் - வெண்மை. சிறை - கரை, அணை.

†குறுந். 152. கிள்ளிமங்கலங்கிழார்.

சாயின் - மெலிந்தால். பிறிது - வேறு. எவன் - என்ன. பார்ப்பு - குஞ்சு. கையறவிடின் - கைவிடின்.

கண்ணுக்கேனும் காட்சியளிக்கவேண்டும் என்று காதலியின் உள்ளம் விழையும்.

புலவர் அதற்கு ஒரு நல்ல உவமை அமைத்து விளக்குகிறார்.

மலையில் பெருந்தேன் கட்டியிருக்கிறது. அதைக் காண்கிறான் ஒருவன். அவன் முடவன்; கால் இல்லாதவன்; கைகள் மட்டும் பெரிய கைகளாக இருக்கின்றன. ஆயினும் என்ன செய்ய முடியும்? தேனை அழித்துக் கொண்டுவரக் கால்களின் உதவி இல்லை, பருகுவதற்குக் கைகள் உள்ளன. அந்தத் தேன்கூட்டினை விட்டு அப்பால் செல்ல மனம் இல்லாமல் அதன் கீழே இருக்கிறான். உள்ளங்கையைக் குடைபோல் ஆக்கித்தேனைச் சுட்டிச் சுட்டி வெறுங்கையை நக்கிக்கொண்டிருக்கிறான். அவன்மனநிலையும் காதலரின் மனநிலையும் ஒரே தன்மையன என்கிறார் புலவர்.

...நெடுவரைப்
பெருந்தேன் கண்ட இருங்கை முடவன்
உட்கைச் சிறுகுடைக் கோலிக் கீழ்இருந்து
சுட்டுபு நக்கி யாங்குக் காதலர்
நல்கார் நயவார் ஆயினும்
பல்கால் காண்டலும் உள்ளத்துக்கு இனிதே.*

காதல், பிரிவைத் தாங்காதது; பிரிவுதான் காதலில் துன்பம் தருவது; வாழ்வையே வெறுக்குமாறு செய்வது.

குறுந். 60. பரணர்.

உட்கை - உள்ளங்கை. குடை - குடைவுள்ளது (தொன்னை); கோலி - குழிய வளைத்து. சுட்டுபு - சுட்டி. நல்கார் - அருளார். நயவார் - விரும்பார்.

குறுந். 11

பிரிந்து உயிர்வாழ்வதைவிட, சாதலே நல்லது என்று எண்ணச் செய்வது அது.

நீரிலே வாழும் பறவைகளிலே மகன்றில் என்பது ஒருவகை. மகன்றில்பறவைகள் எப்போதும் துணையுடன் கூடியே வாழும். இரண்டு பறவைகள் நீரிலே நீந்தும்போது, இடையே ஒரு பூ குறுக்கிட, அதனால் பூவின் இப்பக்கம் ஒரு மகன்றிலும் அப்பக்கம் ஒரு மகன்றிலுமாகப் பிரிந்து செல்ல நேரிட்டால், அவை அந்தப் பிரிவுத் துன்பத்தையும் தாங்க முடியாமல் வருந்துமாம். ஓர் ஆண்டு பிரிந்திருந் தாற் போல் உணருமாம்.

"அத்தகைய காதல் கொண்ட எம்வாழ்வில், இவ்வாறு பிரிந்து துயருற்று வாழ நேர்ந்துள்ளது. இதைவிட, எம் உயிர் ஒருங்கே பிரிந்து இந்த உலகத்தை விட்டு நீங்குதல் நன்றென்று விழைகிறேன்" என்கிறாள் தலைவி.

பூ இடைப் படினும் யாண்டுகழிந் தன்ன
நீர் உறை மகன்றில் புணர்ச்சி போலப்
பிரிவுஅரி தாகிய தண்டாக் காமமொடு
உடன் உயிர் போகுக தில்ல...*

காதல் கொண்ட தலைவன் தன் காதல் கைகூடாமல் வருந்துகிறான்; மெலிகிறான். தலைவியை அணுகுவதற்கும் பழகுவதற்கும் வழி அறியாமல், காதலைக் கைவிடவும் மனம் இல்லாமல் கவலையுறுகிறான். அவனுடைய வருத்தமும்

---

*குறுந். 57. சிறைக்குடியாந்தையார்.

புணர்ச்சி - கூடிவாழ்தல். தண்டா - குறையாத. தில்ல - இடைச்சொல். இவ்வாறு விரும்புகிறேன் என்ற உணர்ச்சியைப் புலப்படுத்துவது

மெலிவும் கவலையும் பாங்கனுக்குத் (தோழனுக்குத்) தெரிந்து விடுகின்றன. அவன் தன் நண்பனாகிய தலைவனுடைய நிலைமையை எண்ணி வருந்துகிறான்; காதலின் தன்மையையும் எண்ணி வியக்கிறான். "சிறிதளவும் உணராதவர்களிடமும் எது நல்லதென உணராதவர்களிடமும் மனம் சென்று நாடுகிறது; அவர்களிடமே சென்று நிற்கிறது. இத்தகைய பெரிய அறியாமை வேறு எந்தத் துறையிலும் காணோம். நாடாதவர்களை நாடும் அறியாமை, உணராதவர்களை விரும்பும் அறியாமை வேறு எந்தத் துறையிலும் காணோம். இந்தக் காதல் ஒன்றுதான் இப்படிப்பட்டதாக உள்ளது. இந்த நிலைமை வருந்தத் தக்கதுதான்" என்கிறான்.

நோதக் கன்றே காமம் ; யாவதும்
நன்றென உணரார் மாட்டும்
சென்றே நிற்கும் பெரும்பே தைமைத்தே.*

மிளைப்பெருங்கந்தன் என்ற புலவர், காதல் என்பது எத்தன்மையானது என்பதைக் குறித்து இரண்டு பாட்டுக்கள் பாடியுள்ளார்.

"காமம் காமம் என்று சொல்கிறார்கள். அது துன்பமும் அன்று, நோயும் அன்று. அது நுட்பமாய் மிகுவதும் இல்லை; குறைவதும் இல்லை. யானை தழையைத் தின்று அதனால் கொள்ளும் மதம்போல் தக்க செவ்வியும் உடையது, ஆராய்ந்து பார்த்தால்."

---

*குறுந். 78. நக்கீரர்.

நோதக்கன்று - நோதக்கது, வருந்தத் தக்கது. யாவதும் - சிறிதும். மாட்டு - இடத்தில். பேதைமை - அறியாமை.

காமம் காமம் என்ப ; காமம்
அணங்கும் பிணியும் அன்றே ; நுணங்கிக்
கடுத்தலும் தணிதலும் இன்றே ; யானை
குளகுமென்று ஆள்மதம் போலப்
பாணியும் உடைத்துஅது காணுநர்ப் பெறினே.*

மற்றொரு பாட்டிலும் இதே கருத்தை — ஒருவகைப் புதுமையான உணர்ச்சியே காமம் என்னும் கருத்தைக் கூறுகிறார்.

"காதல் காதல் என்று கூறுகிறார்கள். காதல் துன்பமும் அன்று ; நோயும் அன்று. நினைத்துப் பார்த்தால், பழைய மேட்டு நிலத்தில் செழித்து வளர்ந்த முற்றாத இளம் புல்லை, முதிய பசு தடவி இன்புற்றது போல் உணரும் புதிய உணர்ச்சியே காமம்."

காமம் காமம் என்ப ; காமம்
அணங்கும் பிணியும் அன்றே நினைப்பின்
முதைச்சுவல் கலித்த முற்றா இளம்புல்
மூதா தைவந் தாங்கு
விருந்தே காமம் பெருந்தோ ளோயே.†

---

*குறுந். 136. மிளைப்பெருங்கந்தன்.

அணங்கு - புதிய வருத்தம். நுணங்கி - நுட்பமாகி. கடுத்தல் - மிகுதல். குளகு - தழையுணவு. பாணி - ஏற்ற காலத்தில் வெளிப்படும் தன்மை.

†குறுந். 204. மிளைப்பெருங்கந்தன்.

முதை - பழைய கொல்லை. சுவல் - மேடு. கலித்த-செழித்த. மூதா - முதிய பசு. தைவந்தாங்கு-தடவினாற் போல். விருந்து - புதுமை. பெருந்தோளோய் - பெருந்தோளை உடைய தலைவனே.

முன்னது தலைவன் பாங்கனுக்கு உரைத்தது; தன்னிடத்துத் தோன்றிய யானையின் மதம் போன்ற புதிய உணர்ச்சியைப் பற்றித் தலைவன் கூறியது. பின்னது தலைவனுக்குப் பாங்கன் உரைத்தது; கலங்கி வருந்தும் நிலைக்கு ஆளாகுமாறு செய்வது அன்று என்றும், பொறுத்திருந்து மெல்லப் பெறும் புத்துணர்ச்சியே காதல் என்றும் பாங்கன் தலைவனுக்கு ஆறுதலாகக் கூறியது.

நெஞ்சம் ஒரு வேட்கையை வளர்த்து வருந்துகிறது. அந்த வேட்கை கைகூடுவதாக இல்லை. அப்போது தாங்க முடியாத துயரத்தால் நெஞ்சம் வருந்துகிறது. நல்ல வேட்கையாக இருக்கலாம்; உயர்ந்த வேட்கையாக இருக்கலாம். ஆனால் ஏன் என்று கேட்டுப் போற்றிக் கைகொடுத்துக் காப்பவர் இல்லாதபோது வருந்துவது தவிர வேறு வழி இல்லை.

உயர்ந்த மரக்கிளையில் வாழ விரும்புகிறது ஒரு குரங்குக் குட்டி. வயிற்றில் அணைத்துக்கொள்ள இடம் தந்து காக்கும் தாய்க்குரங்கு இல்லாதபோது அதன் விருப்பம் என்ன ஆகும்? அதுபோல் உதவுவார் இல்லாத போது ஒருவன் கொள்ளும் உயர்ந்த வேட்கையும் துன்பமானதே.

பெரிதால் அம்ம நின் பூசல் உயர்கோட்டு
மகவுடை மந்தி போல
அகனுறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே.*

---

*குறுந். 29. ஔவையார்.

பெரிது + ஆல். ஆல் - அசை (பொருளற்றது). பூசல் - வேட்கையின் ஆரவாரம். கோடு - கிளை. அகனுற - உளமார. கேட்குநர் - கேட்பவர்.

உள்ளம் எதையும் ஓரளவுதான் தாங்கும். ஆசையையும் ஓரளவே தாங்கும். அளவுகடந்த ஆசைக்கு இடம் தரும் உள்ளம், அந்த ஆசை நிறைவேறப் பெறுமல் ஏமாற்றம் அடையும்போது, தாங்காமல் அழியும். அப்போது மழைநீரை ஏற்றுக்கொண்ட பச்சை மண்கலம்போல் உள்ளம் உடைந்துபோகும்.

தலைவியிடம் கொண்ட அளவுகடந்த வேட்கை தாங்க முடியாமல் வருந்தி அழியும் நெஞ்சம் அத்தகையது.

பெயல்நீர்க்கு ஏற்ற பசுங்கலம் போல
உள்ளம் தாங்கா வெள்ளம் நீந்தி
அரிதுஅயர் வுற்றனை நெஞ்சே...*

இளவேனிற் காலத்தில் வருவதாகக் கூறிச் சென்ற தலைவன் வரவில்லை. தலைவி வருந்துகிருள். அவள் வருந்தி மெலிவதைக் கண்டு அயலார் பலவாறு பேசத் தொடங்குகிருர்கள்; அலர் தூற்றுகிருர்கள். அதைக் கேட்ட தலைவியின் நெஞ்சம் மேலும் நொந்து வருந்துகிறது.

ஆற்றங்கரையில் வளர்ந்த அத்தி மரத்திலிருந்து பழுத்த பழம் ஒன்று கீழே விழுகின்றது. ஆற்றிலிருக்கும் நண்டுகள் எழு ஓடிச் சென்று அந்தப் பழத்தை மிதித்து நையச் செய்கின்றன. மிக மென்மையான அந்த ஒரு பழம் கீழே விழுந்தபோது நைந்தது அல்லாமல், இந்த நண்டுகளின் கூரிய கால்விரல்களில் அகப்பட்டு மேலும் நைந்து குழைகின்றதுபோல், தலைவியின் உள்ளம் முன்னே பிரிவாற்ருமையால் வருந்தியது போதாமல் இப்போது ஊராரின் கொடிய நாவால் மேலும் வருந்துகிறது.

---

*குறுந். 29. ஔவையார்.
பெயல் - மழை. நீர்க்கு - நீரை. அயர்வுற்றனை - சோர்ந்தாய்.

ஆற்றயல் எழுந்த வெண்கோட்டு அதவத்து
எழுகுளிறு மிதித்த ஒருபழம் போலக்
குழையக் கொடியோர் நாவே
*காதலர் அகலக் கல்லென் றவ்வே.**

வெளியூர்க்குச் சென்று மேற்கொண்ட கடமையை முடித்த தலைவன், விரைந்து ஊர்க்குத் திரும்புகிறான். மாலைப்பொழுதிற்குள் ஊரை அடைய வேண்டும் என்ற ஆர்வம் அவன்உள்ளத்தைத் தூண்டுகிறது. ஆனால் ஊரோ நெடுந்தொலைவில் உள்ளது.

மழை பெய்து தக்க அளவிற்கு ஈரம் ஏற்பட்டுப் பதமாக இருக்கிறது நிலம். ஆனால் அந்த நிலத்தின் உழவனுக்கோ ஒரே ஏர் உள்ளது. அவன் மனம் எவ்வாறு விரைந்து பதைக்குமோ அவ்வாறு விரைகின்றது ஊர்க்குத் திரும்புகிற தலைவனுடைய மனம்.

பேரமர்க் கண்ணி இருந்த ஊரே
நெடுஞ்சேண் ஆரிடை யதுவே ; நெஞ்சே
ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்து
ஓரேர் உழவன் போலப்
பெருவிதுப்பு உற்றன்றால் நோகோ யானே.†

---

*குறுந். 24. பரணர்.

கோடு - கொம்பு. அதவம்-அத்தி. குளிறு - நண்டு. குழைய- வருந்துமாறு. கல்லென்ற - கல்லென்று ஆரவாரம் செய்தன.

†குறுந். 131.

பேர் - பெரிய. அமர் - ஒன்றோடொன்று மாறுபட்ட. சேண் - தொலைவு. ஆரிடை - அரிய இடம். செவ்வி - பதம். விதப்பு - விரைவு. உற்றன்றால் - உற்றன்று, உற்றது. நோகு - வருந்துவேன்.

தலைவன் பிரிந்த காலத்து நொந்து வருந்தும் தலைவி தன் துயரைப் பிறரிடம் சொல்லி ஆறுதல் பெறவும் முடியாமல் தலைவனுக்குத் தெரிவித்துத் துயர் நீங்க வழி கோலவும் முடியாமல் கலங்குகிருள். இரவில் (இருளில்) கபில நிறம் உள்ள பசு கிணற்றில் விழும் துன்பக் காட்சியைக் கண்ட ஊமை ஒருவனுடைய துயர் போல் பொறுக்க முடியாத துயராக அதனை உணர்கிருள்.

......கூவல்
குரால்ஆன் படுதுயர் இரவில் கண்ட
உயர்திணை ஊமன் போலத்
துயர்பொறுக் கல்லேன் தோழி நோய்க்கே.*

இந்த உவமையில் கூவல் அமைந்துள்ள சிறப்புப் பற்றிப் புலவர் 'கூவன்மைந்தன்' எனப்பட்டார்.

திருமண ஏற்பாட்டை முன்னிட்டுப் பிரிந்த தலைவன் வராதபோது தலைவி கவலையுற்று மெலிகிருள்; அவள் மேனியில் பசலை பரவுகிறது. அவளைத் தேற்றுவதற்காகத் தோழி பற்பல கூறுகிருள். "தலைவன் நல்லவன்; உன் துயர்க்காக நெஞ்சழிந்து வருந்துபவன்; பழிக்கு அஞ்சுபவன்; தவருமல் வந்து காப்பான். அப்போது உன் மேனியில் பரவிய பசலை நீங்குவது உறுதி" என்கிருள்.

நிலையாமை இயல்பாக உடைய இந்த உலகில் இசை விரும்பிய நல்ல நெஞ்சை உடைய ஒப்புரவாளன் கையில்

---

*குறுந். 224. கூவன்மைந்தன்.

கூவல் - கிணறு. உயர்திணை ஊமன் - அஃறிணை ஊமனை இய கோட்டான் அன்று என்று உணர்த்துவது. பொறுக்கல்லேன் - (என்ருல்) பொறுக்க முடியவில்லை.

பொருள் நிற்காது. அவனுடைய பொருள் பிறரிடம் சென்று பயன்படுதல் இயற்கை. அப்பொருள் அவனிடம் தங்காதது எவ்வளவு உறுதியோ, தலைவியின் பசலை தீர்வதும் அவ்வளவு உறுதி என்கிறாள்.

அழியல் ஆயிழை ! அழிபுபெரிது உடையன் ;
பழியும் அஞ்சும் பயமலை நாடன் ;
நில்லா மையே நிலையிற்று ஆகலின்
நல்லிசை வேட்ட நயனுடை நெஞ்சின்
கடப்பாட் டாளன் உடைப்பொருள் போலத்
தங்குதற்கு உரிய தன்றுநின்
*அங்கலுழ் மேனி பாஅய பசப்பே.**

புலவர்கள் இயற்கைப் பொருள்கள் இரண்டனை எடுத்து, ஒன்றால் மற்றொன்றன் தன்மை விளங்குமாறு உவமை அமைத்தல் போலவே, இயற்கைப் பொருள் ஒன்றன் தன்மை விளங்குவதற்காக மக்கள் வாழ்க்கையை உவமையாக அமைப்பதும் உண்டு. அதன் வாயிலாகச் சிறந்த நீதி விளங்கவைக்கும்போது, நயம் மிகுதல் காணலாம்.

காந்தள் செடியில் கொழுமையான அரும்பு உள்ளது. அது மலரும்வரையில் காத்திருக்க விரும்பவில்லை அங்குவந்த வண்டு. அந்த அரும்பின் அருகே சென்று அதை ஊதி வாய்திறக்குமாறு செய்கிறது. அந்த அரும்பும் அதற்கு இணங்கி இடம்விட்டு மெல்ல இதழ்விரிந்து மலர்கின்றது.

*குறுந். 143. நக்கீரனார்.

அழிபு - உனக்காக மனம் இரங்கி வருந்துதல். வேட்ட - விரும்பிய. கடப்பாட்டாளன் - ஒப்புரவாளன். அங்கலுழ் - அழகு ஒழுகும். பாஅய - பரவிய. பசப்பு - பசலை.

முன்பே தாம் நன்கு அறிந்த நல்ல சான்றோரைக் கண்டபோது, கடமை புணர்ச்சி உள்ள மக்கள் அவர்களை வரவேற்று இடம் கொடுப்பதுபோல் உள்ளது, அந்த அரும்பு மலரும் காட்சி.

காந்தளங் கொழுமுகை காவல் செல்லாது
வண்டுவாய் திறக்கும் பொழுதின் பண்டும்
தாம்அறி செம்மைச் சான்றோர் கண்ட
கடன்அறி மாக்கள் போல இடன்விட்டு
*இதழ்தளை அவிழ்ந்த ஏகல் வெற்பன்...**

செவிப்புலன்

செவிப்புலன் மிக நுட்பமானது. அதன் வாயிலாகக் கேட்டுணரும் ஒலிகளுள் ஒப்புமை உடையவற்றை உணர்ந்து உவமைப்படுத்துதல் புலவர்களின் சிறப்பியல்பாக உள்ளது.

ஞாழல் மரத்தின் வேரில் வளைகட்டி வாழ்கிறது நண்டு. அந்தச் சிறு வீடு சிதையும்படியாகக் கடலின் அலைகள் மோதி முரசு போல் முழங்குகின்றன.

சிறுவீ ஞாழல் வேர்அளைப் பள்ளி
அலவன் சிறுமனை சிதையப் புணரி
குணில்வாய் முரசின் இரங்கும்...†

புலவர் பரணரின் உள்ளம் இங்கே நண்டின் வாழ்வைக் குறித்து இரங்குதலை உணரலாம். அதன் வளையைச் சிறு

*குறுந். 265. கருவூர்க்கதப்பிள்ளை.

காவல் - காத்திருத்தல். செல்லாது - முடியாமல். கடன் - கடமை. ஏகல் - உயர்ந்த மலை.

†குறுந். 328. பரணர்.

வீ - மலர். பள்ளி - தங்குமிடம். புணரி - அலை. குணில் முரசு அடிக்கும் தடி. இரங்கும் - ஒலிக்கும்.

மனை என்றும் பள்ளி என்றும் கூறி, இந்தச் சிறுமனையைப் பெரிய கடல் வந்து அழிக்கின்றதே என்று வருந்துகிறார். இந்தச் சிறுமனையை அழித்துவிட்டு வெற்றி கொண்டாடுவதைப் போல் முழங்குகிறதே என வெறுக்கிறார்.

பாறையில் சிறிய வாயை உடைய ஆழ்ந்த சுனை, தேன் பெய்த நீலக்குப்பி போல் உள்ளது. அதில் உள்ள தேரைகள் தட்டைப்பறை போல் ஒலிக்கின்றன.

மட்டம் பெய்த மணிக்கலத் தன்ன
இட்டுவாய்ச் சுனைய பகுவாய்த் தேரை
தட்டைப் பறையின் கறங்கும்...*

பல்லி பாலைவழியில் கள்ளி மரத்திலிருந்து ஒலிக்கின்றது. அந்த ஒலி, தன் துணையை அழைக்கும் மென்மையான ஒலி.

பாலை வழியில் கானவர் தம் இரும்பு அம்புகளைத் தீட்டி நகத்தின் முனையில் புரட்டிப் பார்க்கிறார்கள். அப்போது எழும் ஓசை போலவே, அந்தப் பல்லியின் ஒலி கேட்கிறது.

...கானவர்,
பொன்புனை பகழி செப்பம் கொண்மார்
உகிர்நுதி புரட்டும் ஓசை போலச்
செங்கால் பல்லி தன்துணை பயிரும்
அங்கால் கள்ளியங் காடு.†

*குறுந். 193. அரிசில்கிழார்.

மட்டம் - மட்டு, தேன். மணி - நீலநிறமான. இட்டு - இடுக்கு, சிறிய. பகு - பிளந்த. கறங்கும் - ஒலிக்கும்.

†குறுந். 16. பாலைபாடிய பெருங்கடுங்கோ.

பொன் - உலோகம், இரும்பு. பகழி - அம்பு. செப்பம் கொண்மார் - செம்மைப்படுத்த. உகிர் - நகம். நுதி - முனை. பயிரும் - அழைக்கும். அங்கால் - அழகிய அடிமரம்.

இதைப் பாடிய புலவர் பாலைநிலத்துக் காட்சிகளிலும் ஓசைகளிலும் நல்ல அனுபவம் வாய்ந்தவர்; பாலை பாடிய பெருங்கடுங்கோ.

அசைவு

பொருள்களின் அசையா நிலையில் புலனாகும் அழகைப் புனைந்து பாராட்டுதல் போலவே, அசையும் நிலையில் அவற்றின் அசைவைப் புனைந்து பாடுதலும் உண்டு. அவ்வாறு பொருள்களின் அசைவைப் பாடும்போது, ஒப்புமையாக இருவேறு பொருள்களை எடுத்துரைக்கும் பகுதிகளும் தனிநயம் உடையனவாகும்.

பலாமரத்தில் பழம் தின்றுகொண் டிருக்கின்றன குரங்குகள். குறவன் குறி தப்பாத தன் அம்புகளை வில்லில் தொடுக்கத் தொடங்கியதும், அஞ்சி ஓடுகின்றன. ஓடும் போது, போர்க்களத்துக் குதிரைகள் போல் பொங்கி ஓடுகின்றன. மலைச்சாரலில் உள்ள பெரிய மூங்கில்களின் நீண்ட கொம்புகள் அசைந்து ஆடுமாறு அவற்றில் பாய்கின்றன.

> பலவில் சேர்ந்த பழமார் இனக்கலை
> சிலைவில் கானவன் செந்தொடை வெரீஇச்
> செருவுறு குதிரையின் பொங்கிச் சாரல்
> இருவெதிர் நீடமை தயங்கப் பாயும்...*

---

*குறுந். 385. கபிலர்.

இனம் - (குரங்குக்) கூட்டம். கலை - ஆண்குரங்கு. சிலைவில்- சிலைமரத்தால் செய்த வில். செந்தொடை - குறி தப்பாமல் தொடுத்தல். வெரீஇ - அஞ்சி. செரு - போர். இரு - பெரிய. வெதிர் - மூங்கில். நீடு - நீண்ட. அமை - மூங்கில்கோல். தயங்க - அசைந்து விளங்க.

யானை பசிய மூங்கிலைத் தின்றுகொண்டிருக்கிறது. தினைப்புனம் காப்பவர் விடும் கவண் கற்களின் ஒலிகேட்டுத் திடீரென மூங்கிலைக் கைவிட்டு ஓடுகிறது. அதுவரையிலும் வளைந்திருந்த மூங்கில் அப்போது திடீரென மேலே நிமிரும் காட்சி, மீன் பிடிக்கும் தூண்டில் மேலெழுவது போல் உள்ளது. (இந்த உவமைச் சிறப்பால் புலவர் 'மீனெறி தூண்டிலார்' எனப்பட்டார்.)

ஏனல் காவலர் கவணொலி வெரீஇக்
கான யானை கைவிடு பசுங்கழை
மீன் எறி தூண்டிலின் நிவக்கும்...*

மலையில் பாறையின் அருகே விழும் அருவி, (பாம்பு கல்லில் உரித்துச் சென்ற) தோல் அசைந்து விளங்குவது போல் உள்ளது.

......பாம்பின்
தூங்குதோல் கடுக்கும் தூவெள் அருவி...†

தேர் விரைந்து ஓடிவருவது, குன்றிலிருந்து இறங்கி வரும் அருவிபோல் உள்ளது. தேரின் சக்கரம் ஒளிவிட்டு விளங்குதல், இளம் பிறை போல் உள்ளது. அச் சக்கரம் வழியில் உள்ள பசும் பயிரைத் துணித்துச் செல்லும்போது வானத்திலிருந்து விழும் எரிநட்சத்திரம் போல் உள்ளது. தேரின் வேகம் காற்றின் வேகம் போல் உள்ளது.

---

*குறுந். 54. மீனெறி தூண்டிலார்.

வெரீஇ - அஞ்சி. கழை - மூங்கில். தூண்டிலின் - தூண்டில் போல். நிவக்கும் - எழும்.

†குறுந். 235. மாயேண்டனார்.

தூங்கு - அசையும். கடுக்கும் - போலும்.

குன்று இழி அருவியின் வெண்தேர் முடுக
இளம்பிறை அன்ன விளங்குசுடர் நேமி
விசும்புவீழ் கொள்ளியின் பைம்பயிர் துமிப்பக்
*கால்இயல் செலவின் மாலை எய்தி...**

வாடைக்காற்று வீசும்போது அசையும் சேம்பின் அகன்ற இலை, பெரிய யானையின் செவிபோல் தோன்றும்.

சிலம்பின் சேம்பின் அலங்கல் வள் இலை
பெருங்களிற்றுச் செவியின் மானத் தைஇத்
தண்வரல் வாடை தூங்கும்...†

இனம்

தனித்தனியே ஒரு பொருளை மற்றொரு பொருளோடு உவமைப்படுத்தல் போலவே, அந்தந்தப் பொருளோடு தொடர்புடைய மற்றப் பொருள்களையும் சேர்த்து வைத்து உவமைப் படுத்தல் உண்டு. அத்தகைய உவமை நயம் மிகப் பயப்பதாகும்.

தலைவியின் மென்மை நீர் போன்றது. தலைவனுடைய வலிமை தீ போன்றது. நீர் தீயை அவித்தல் போல், தலைவியின் மென்மை அவனுடைய வலிமையை அழிக்கிறது.

---

*குறுந். 189. மதுரை ஈழத்துப் பூதன்தேவன்.

அருவியின் - அருவி போல். முடுக - விரைந்துசெல்ல. நேமி-சக்கரம். கொள்ளி - எரிநட்சத்திரம். துமிப்ப - துணிக்க, வெட்டுண்ண. கால் - காற்றுப் போல். இயல் - இயலுதல். செலவின் - செல்லுதலை உடைய.

†குறுந். 76. கிள்ளிமங்கலங்கிழார்.

சிலம்பின் - மலைப்பகுதியில் உள்ள. வள் - வளமான. மான - போல. தைஇ - செய்து. தண்வரல் - குளிர்ச்சியாக வீசி வருகிற. தூங்கும் - அசையும்.

நீர்ஓ ரன்ன சாயல்
*தீஓ ரன்னஎன் உரன்அவித் தன்றே.**

வெண்ணிற அலைகளால் ஒளிபொருந்திய கடலும், இலை அடர்ந்த செறிவால் இருள் மிகுந்த கடற்கரைச் சோலையும் அடுத்தடுத்துத் தோன்றும் காட்சி, நிலவும் இருளும் ஒருங்கே இருத்தல் போல் உள்ளது.

நிலவும் இருளும் போலப் புலவுத்திரைக்
கடலும் கானலும் தோன்றும்...†

கடற்கரையிலே புன்னை மரம் அடர்ந்து செழித்து வளர்ந்துள்ளது. அதன் கொம்புகள் கரு நிறத்தன. குளிர்ந்த வளமான இருள் செறிந்தாற்போல் உள்ளது. கீழே உள்ள வெண்மணலோ இருளுக்கு மாறான நிலவைக் கொண்டுவந்து குவித்துவைத்தாற் போல் உள்ளது.

இருள்திணிந் தன்ன ஈர்ந்தண் கொழுநிழல்
நிலவுக்குவித் தன்ன வெண்மணல் ஒருசிறைக்
கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில்...‡

முழு ஓவியங்கள்

பொருளின் சிற்சில பகுதிகளை ஒப்பிட்டுக் காட்டும் உவமைத்திறன் வேறு. பொருள் அமைந்த சூழலையே

*குறுந். 95. கபிலர்.

சாயல் - மென்மை. ஓரன்ன - ஒரு தன்மையான. உரன் - வலிமை. அவித்தன்று - அவித்தது.

†குறுந். 81. வடமவண்ணக்கன்.

புலவு - புலால் நாறும். திரை - அலை, கானல் - கடற்கரைச் சோலை.

‡குறுந். 123. ஐயூர் முடவனார்.

சிறை - பக்கம். கோடு - கிளை.

படம்பிடித்தாற்போல் காட்டி, அதனை விளக்கும் உவமையையும் அவ்வாறே முழுப்படமாகக் காட்டும் திறன் வேறு. இத்தகைய முழுப்படங்களை உவமையாகப் பெற்ற பாட்டுக்கள் சில இத் தொகைநூலில் உள்ளன.

நீலநிற மலையில் விழும் வெண்ணிற அருவி, நீலக் கடலில் எழும் வெண்மதி போல் உள்ளது.

எழுதரு மதியம் கடல்கண் டாஅங்கு
ஒழுகுவெள் அருவி ஓங்குமலை...*

குயில் மாமரக்கிளைகளில் நறுமணம் உள்ள மலர்ப் பொடிகளைக் கொழுதும் போது, அந்தப் பொன்னிறப் பொடிகள் அதன் கருநிறச் சிறகில் படிந்து, பொன் உரைத்த கட்டளைக் கல் போல் உள்ளது.

மின்னின் தூவி இருங்குயில் பொன்னின்
உரைதிகழ் கட்டளை கடுப்ப மாச்சினை
நறுந்தாது கொழுதும்...†

காயாமரத்தின் பெரிய கிளையில் பூக்கள் நிறையப் பூத்திருக்கின்றன. அவை நீல நிறப் பூக்கள். ஆகையால் மயிலின் கழுத்துப் போல் தோன்றுகின்றன.

புல்லென் காயாப் பூக்கெழு பெருஞ்சினை
மென்மயில் எருத்தின் தோன்றும்...‡

---

*குறுந். 315. தும்பிசேர்கீரனார்.
கண்டாங்கு - கண்டாற்போல.

†குறுந். 192. கச்சிப்பேட்டு நன்னாகையார்.
மின்னின் - ஒளியுடைய. தூவி - சிறகு. இரு - கரிய. உரை - உரைத்தல். கடுப்ப - போல. சினை - கிளை.

‡குறுந். 183. ஔவையார்.
சினை - கிளை. எருத்தின் - கழுத்துப் போல்.

கிளி தன் வளைந்த வாயில் வைத்துக்கொண்டு தின்கிற வேப்பம்பழம், புதிய கயிற்றில் காசு நுழைப்பவனுடைய அழகான கூரிய நகங்களுக்கு இடையே உள்ள பொன் காசு போல்தோன்றும்.

...கிள்ளை
வளைவாய்க் கொண்ட வேப்ப ஒண்பழம்
புதுநாண் நுழைப்பான் நுதிமாண் வள்உகிர்ப்
பொலங்கல ஒருகாசு ஏய்க்கும்...*

புன்க மரத்திலிருந்து பூக்கள் உதிர்ந்து மணலில் விழுந்து கிடக்கின்றன; அவை வேலன் வெறியாடும் களத்தில் செந்நெல்லின் வெண்பொரி சிதறினாற்போல் உள்ளன.

நனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்
வேலன் புனைந்த வெறிஅயர் களந்தொறும்
செந்நெல் வான்பொரி சிதறியன்ன, எக்கர்...†

யானைக்கும் புலிக்கும் போர் நடக்கிறது. மதத்தால் நனைந்த கன்னத்தை உடைய தலைமையானை புலியின் முகத்தில் பாய்கிறது. மிக்க வலிமையுடைய அந்தப் பெரிய ஆண் புலியின் இரத்தம் யானையின் வெண்கொம்பைச் செந்நிறக் கறைப் படுத்துகிறது. கல்லின் பிளப்பாகிய குகையில்,

*குறுந். 67. அள்ளூர்நன்முல்லையார்.

ஒண்பழம் - ஒளி பொருந்திய பழம். நாண் - கயிறு. நுதி - முனை. மாண் - சிறந்த. உகிர் - நகம். பொலம் - பொன். ஏய்க்கும் - போல் தோன்றும்.

†குறுந் 53. கோப்பெருஞ்சோழன்.

நனை - அரும்பு. வான் - வெண்மையான. எக்கர் - மணல் மேடு.

மேல்காற்று முறித்துத் தள்ளிய கரிய அடிமரத்தை உடைய வேங்கையின் வாடிய மலர்களை உடைய கிளைபோல் அந்தப் புலி இறந்து கிடக்கிறது.

...நனைகவுள்
அண்ணல் யானை அணிமுகம் பாய்ந்தென
மிகுவலி இரும்புலிப் பகுவாய் ஏற்றை
வெண்கோடு செம்மறுக் கொளீஇ விடர்முகைக்
கோடை ஒற்றிய கருங்கால் வேங்கை
வாடுபூஞ் சினையின் கிடக்கும்...*

ஒரு வேங்கைமரத்தின் கீழே உருண்டைக்கல் ஒன்று கிடக்கிறது. அதன்மேல் வேங்கைப் பூக்கள் உதிர்ந்து போர்த்திருக்கின்றன. பொன்னிறப்பூக்கள் கருநிறக்கல்லின் மேல் உதிர்ந்து, பொன்னிறமும் கருநிறமும் கலந்து விளங்குவதால், அது பெரிய புலிக்குட்டி போல் தோன்றுகிறது.

கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையின் தோன்றும்...†

---

*குறுந். 343.

கவுள் - கன்னம். நனை - மதநீரால் நனைந்த. அண்ணல் - தலைமை. பாய்ந்தென - பாய்ந்ததாக. பகு - பிளந்த. ஏற்றை - ஆண். மறு - கறை. கொளீஇ - கொள்ளச்செய்து. விடர் - பிளப்பு. முகை - குகை. ஒற்றிய - முறித்த. சினையின் - கிளை போல்.

†குறுந். 47. நெடுவெண்ணிலவினார்.

கால் - அடிமரம். வீ - பூ. உகு - உதிரும். துறுகல் - உருண்டைக்கல், பொற்றைக்கல். குருளையின் - குட்டி போல்.

எதிர்பாராமல் திடீரென மூன்றும் பிறை செவ்வானத்தில் தோன்றுவது, சங்கு வளையலை உடைத்தாற் போல் உள்ளது.

வளை உடைத் தனைய தாகிப் பலர்தொழச்
செவ்வாய் வானத்து ஐயெனத் தோன்றி
இன்னம் பிறந்தன்று பிறையே...*

கார்காலத்தில் முல்லை நிலங்களில் கவலைக் கிழங்கு தோண்டியெடுக்கப்பட்ட அகன்ற வாயை உடைய சிறு குழிகளில் ஒளிபொருந்திய கொன்றை மலர்கள் உதிர்ந்து நிரம்புகின்றன; அந்தக் காட்சி, செல்வரின் பொன்காசு நிறைந்த பெட்டியின் மூடியைத் திறந்தாற்போல் உள்ளது.

கவலை கெண்டிய அகல்வாய்ச் சிறுகுழி
கொன்றை ஒள்வீ தாஅய்ச் செல்வர்
பொன்பெய் பேழை மூய்திறந் தன்ன
கார்எதிர் புறவி னதுவே...†

சொரசொரப்பான பெரிய பொற்றைக்கல் கன்னங்கரேலென்று ஒருபுறம் காணப்படுகிறது. பெருமழை பெய்கிறது. மழை நின்றவுடன் அந்தக் கல்லைப் பார்த்தால் மாசு நீங்குமாறு கழுவப்பட்ட யானை போல் தோன்றுகிறது.

---

*குறுந். 307. கடம்பனூர்ச் சாண்டிலியன்.

வளை - சங்குவளையல். வாய் - இடம். ஐயென - விரைவாக. பிறந்தன்று - பிறந்தது.

†குறுந். 233. பேயனார்.

கவலை - ஒருவகைக் கிழங்கு. கெண்டிய - தோண்டிய. வீ-பூ. தாஅய் - பரவி. பேழை - பெட்டி. மூய் - மூடி. புறவு - முல்லை நிலம்.

பெருமழை பெய்தபோது அந்த மழையில் அகப்பட்டு வருந்தியது போலவும், மழை நீங்கிய பிறகு அமைதியாக ஒரு புறமாகத் தங்கி இளைப்பாறுவது போலவும் தோன்றுகிறது.

மாசறக் கழீஇய யானை போலப்
பெரும்பெயல் உழந்த இரும்பிணர்த் துறுகல்
*பைதல் ஒருதலை சேக்கும்...**

புலவர் அந்தக் கல்லை யானைபோல் நிற்பதாகக் கற்பனை செய்தவுடன், அதை உயிருள்ள பொருளாக உணர்ந்து, மழையால் வருந்தியதாகவும் மழை நின்ற பிறகு அமைதியாகத் தங்கியிருப்பதாகவும் பாடுகிறார்.

*குறுந். 13. கபிலர்.

கழீஇய - கழுவிய, நீராட்டிய. பெயல் - மழை. உழந்த - வருந்திய. இரு - கரிய. பிணர் - சருச்சரை, சொரசொரப்பு. பைதல் - பசுமை. சேக்கும் - தங்கும்.